# ரஸிகமணி

## டி. கே. சி.

பாஸ்கரத் தொண்டைமான் M.A.

ஸ்டார் பிரசுரம்
திருச்சி

O-,63MTKCw
N45
101957

# ரஸிகமணி
# டி. கே. சி

ஆசிரியர் :

பாஸ்கரத்தொண்டைமான், M. A

★

ஸ்டார் பிரசுரம் - திருச்சி

# "கவிதை கலைவிமர்சனம்"

விலை ரூ. 2/-

சுப. நாராயணன்

# ரஸிகமணி

# டி. கே. சி

ஆசிரியர் :

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான். எம். ஏ

முன்னுரை:

ராஜ்ய ஸேவ பிறவீண

திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள்

திருவாங்கூர் பிரதம நீதிபதி

880

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை திருச்சினுப்பள்ளி

* No. 22. INDIVIDUAL CRITICISM

FIRST EDITION—DECEMBER 1945

TAMIL ... LIBRARY ... ADYAR, MADRAS
101957

I. P. PROJECT
Microfilmed.

COPYRIGHT


44029

PRICE Rs. 2/-

STAR PUBLICATIONS

PALAKARAI — TRICHINOPOLY

PRINTED AT KUMARAN POWER PRESS
P.I.C R. 31; FOR STAR PUBLICATIONS P.I.C TY-9



— டி. கே. சி. —

EGMORE, MADRAS

# பதிப்புரை

தமிழ்நாட்டில் இன்று டி. கே. சி என்றால் ஒரு தத்துவம்.

தமிழ் இலக்கிய ரஸிகர்களிடையே டி. கே. சி வகிக்கும் ஸ்தானம் மகத்தானது.

வாழ்க்கையின் பல துறைகளில் பல இலக்ஷியங்களோடு பணியாற்றும் அநேகரைத் தமிழ் மொழியிலும் கவிதையிலும் மோகம் கொள்ளும்படி செய்த பெருமை டி. கே. சி. யைச்சாரும். இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியரும் முன்னுரை எழுதியுள்ள பெரியாருமே இதற்குச் சான்று.

இப்புத்தகம் "பையாக்ரபி" என்று நீட்டிமுழக்கும் ஒரு முரசு அல்ல. "லிடெரரி க்ரிடீஸிஸம்', என்று 'தம்' பிடித்துச் சொல்ல வேண்டிய விமர்சனமும் அல்ல. பலவருஷங்கள் டி. கே. சி யுடன் நெருங்கிப் பழகிய நண்பர் ஒருவர் தாம் பெற்ற மகிழ்ச்சியை வாசகருக்குக் கூறும் ஒரு முயற்சிதான் இது. படிப்பவர்களுக்கு, இப்புத்தகத்தின் ஆசிரியருடனோ அல்லது டி. கே. சி யின் கொள்கைகளுடனோ அபிப்பிராய பேதமிருக்கலாம். அவர்கள் அவசியம் இப்புத்தகத்தின் இருபதாவது அத்தியாகத்தைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

புத்தகத்தின் ஆசிரியருக்கும் முன்னுரை எழுதியுதவிய திருப்புகழ் மணி யவர்களுக்கும் எங்கள் நன்றி உரியது.

**ஸ்டார் பிரசுரம்**

# முன்னுரை

"ராஜ்ய ஸேவப்ரவீண" திருப்புகழ் மணி

## டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள்

திருவாங்கூர் பிரதம நீதிபதி.

டி. கே. சி என்றால் யாவர்க்கும் தெரியும். அவர்கள் பெயரை முற்றிலும் உரைத்தால் தெரியாமல் போனாலும் போய்விடும். அவரிடத்தில் மிகவும் ஈடுபட்ட நண்பர் ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமான், அவர்களைப் பற்றி எழுதிய அருமையான நூலுக்கு முகவுரை நான் எழுத வேண்டு மென்கிறார். நன்கு தெரிந்ததை ஒரு வேளை எழுதுவது கடினமாய் இருப்பதும் உண்டு. கடினமான ஒரு பெரிய மனுஷனை, சுலபமாக கடினமான பாஷையில் பொருள் புரியாமல் எழுதிவிடலாம். ஆனால் மிருதுவான நண்பராயும், சுலபமான கொள்கைகளோடு எவர்க்கும் எளிதாய் அகப்படுவதாய், அன்பினும் ஆர்வத்தினும் கலையாராய்ச்சியினும் சிறந்தவராய் இருந்துவிட்டால், முகவுரை யெழுதுவது கஷ்டம்தான். நமது நண்பர் டி. கே. சி அவர்கள் முகத்திற்கு, பார்த்தவர் எல்லாம் உரை எழுதி சந்தோஷிக்கின்றார்கள். ஆகவே உரை யெழுதவேண்டுவதில்லை. உரை போட்ட முகமு மன்று அவர் முகம்.

அவர்கள் தமிழுக்காகச் செய்திருக்கும் தொண்டை, யார்தான் அறியாதவர்? கம்பராமாயண பிரசங்கங்கள் எவ்வளவு உயர்வானதென்று அனுபவித்தவர்கள்தான் அறிவார்கள். தமிழ்ப் பண்பாட்டை முன்னேற்றி வருகின்றார். அன்பைப் பெருக்கின்றார். சமயத்தைபோஷிக்கின்றார். உலகத்தில் விருப்பத்தை வளர்ச்சி செய்து, வெறுப்பைக் கண்டித்துவரும் பெரியார்.

தமிழைக் கலையாகவும் வேதமாகவும் தெய்வமாகவும் கூடி அனுபவிக்க, கிடைக்கக்கூடாத அருமையான நண்பர். செந்தமிழில் ஈடுபட்டு தமிழர்கள் தமிழை நாவில் வளர்க்க வேண்டுமென்ற பெரும் கொள்கையைக் கொண்டவர்.

ஆற்றின் தெளிந்தோடும் வெள்ளம், எல்லா உயிர்களுக்கும் உதவுதல் போல், தமிழை தெளிவாய் இசைத்து எல்லோருக்கும் உணர்ச்சியில் கூடுமாறு தமிழை ஏற்றும் பக்தர். அருமையான இச்சிறு புத்தகத்தின் வாயிலாக, தமிழிற்குப் பெரும் தொண்டு ஆற்றிய நமது டி. கே. சி. யின் பெருமையை எல்லோரும் உணர்வீர்கள்.

ஆயினும் இன்னும் ஒரு வார்த்தை. எனக்கு திருப்புகழ், தேவாரம், சித்தர் பாடல்கள், தத்துவ விசாரம், திருமந்திரம், பிரபந்தம் இவை வாயிலாக தெரிந்து கொண்ட அனுபவத்தை மிகவும் பெருமைப்படுத்தி, அவைகளில் அளவில்லாத ஆர்வத்தையும் அனுபவத்தையும் ஊட்டினவர்களில், முதன்மையானவர்களில், இவர் ஒரு பெரும் நண்பர். நன்றியையே பக்தியாகப் பாராட்டும் என் சித்தம், இவரைப் பேரன்புடன்தான் நினைக்க முடியும். உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சியை உரைக்கவும் வரையவும் முடியாததால், இம்முகவுரையை இத்துடன் நிறுத்திக்கொண்டு, இப்புத்தகத்தை வாசிக்கும் நண்பர்களை, குறைபாடு பெற்ற இம் முகவுரையை அவரவர்களே பூர்த்தி செய்து கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்.

ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் நீடூழிவாழ்க! அன்பெனும் தமிழ் வாழ்க! அவர்பால் அருளெனும் தமிழ்வாழ்க! உலகம் அன்பில் தழைக்க, செந்தமிழும் சித்தர்கள் வாக்கும் தமிழ் சித்திரத்தின் பண்பும் உலகெங்கும் பரவுக. முருகன் அருள் புரிவாராக.

டி. எம். கிருஷ்ணசாமி ஐயர்.

# ஆசிரியர் முகவுரை

கம்பனை இனம் காட்டுவதற்குத் தமிழர்களுக்கு ஒரு ரஸிகமணி கிடைத்தார். அந்த ரஸிகமணியைத் தமிழர்களுக்கு இனம் காட்ட வேண்டும் என்ற அவாவே என்னை இந்தப் புஸ்தகம் எழுதத் தூண்டியது. இந்த முயற்சியில் வெற்றி பெறுவது கஷ்டம் என்பதையும் நான் அறிவேன். ரஸிகமணியோடு சுமார் பதினைந்து வருஷ காலம் பழகியவன் நான். 'தமிழ் என்றால் என்ன? கவிதை என்றால் என்ன? கம்பன் என்றால் யார்?' என்றெல்லாம் அவர்கள் மூலமாக நான் தெரிந்துகொண்டது எவ்வளவோ உண்டு. இளமையிலே எனக்கிருந்த தமிழ் ஆர்வத்தை அமோகமாக வளர்த்தவர்கள் அவர்கள். இவ்வாறெல்லாம் நான் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளவன்.

டி. கே. சி யைப்பற்றி சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டேனா என்றால் இல்லைதான். அவருடைய 'கம்பன் பக்தி'யைப் பற்றியே எழுதிக்கொண்டிருக்கலாமே பக்கம் பக்கமாக. அருமை மகன் காலஞ்சென்ற ஸ்ரீ தீத்தாரப்பனைப் பற்றி நான் ஒரு வார்த்தைகூட பிரஸ்தாபிக்கவில்லை. காரணம் பல உண்டு. ஆறிவரும் சோகத்தைக் கிளர விரும்பவில்லை. மேலும் அவரைப்பற்றி எழுத எத்தனையோ இளைய நண்பர்கள் உண்டு. அவர்களுக்கும் ஒரு 'சான்ஸ்' கொடுப்போமே என்பது மற்றொரு காரணம்.

புஸ்தகத்தின் பெரும் பகுதி 1943 லேயே எழுதப்பட்டிருந்தது. இப்புஸ்தகத்தைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டியவர்கள் மூவர். 'புஸ்தகம் அச்சாகும்போதே பாரம் பாரமாக எனக்கு அனுப்பவேண்டும்' என்று கட்டளையிட்டவர்கள் ராஜாஜி. 'இப்படிப்பட்ட புஸ்தகம் வெளிவரத்தான் வேண்டும்; அதுவும் உடனே வெளிவரவேண்டும்' என்றெல்லாம் உற்சாகமூட்டியவர் நண்பர் சோமு. 'புஸ்தகத்தில் அதை எழுத விட்டுவிடாதீர்கள், இதை எழுத விட்டு விடாதீர்கள்' என்று ஆத்திரங்காட்டியவள் என் மகள் ராஜேஸ்வரி. இவர்களுடைய அன்பும் ஆதரவுமே புஸ்தகத்தை உருவாக்கியிருக்கிறது. இவர்களுக்கெல்லாம் என் நன்றி உரியது.

ரஸிகமணியைப் பற்றிய இந்தப் புஸ்தகத்திற்கு அருமையான முன்னுரை உதவியிருக்கும் **திருப்புகழ்மணி**யின் அன்பை நான் மறவேன். அவர்களுக்கு என் வணக்கம் உரியது.

புஸ்தகத்தை அழகாக அச்சிட்டு அதைப் பொங்கல் மலராகவே வெளியிடத் துடித்த நண்பர் **ஸ்ரீ வி. ஆர். எம். செட்டியார்** அவர்களுக்குத் தமிழ் உலகமே கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் உலகத்தில் நானும் உள்ளடங்கியவன்தானே!

எவ்வளவோ கவனமாகப் பார்த்தும் அச்சுப் பிழைகள் பல விழுந்துவிட்டன. அன்பர்கள் அதை மன்னிக்க வேண்டுகிறேன்.

பாளையங்கோட்டை
*14—1—1946* } **தொ. மு. பாஸ்கரன்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | |
| | முன்னுரை-திருப்புகழ் மணி | |
| | ஆசிரியர் முகவுரை | |
| 1 | சுவை அறி நிபுணர் | 1 |
| 2 | டி. கே. சி | 5 |
| 3 | வட்டத் தொட்டி | 8 |
| 4 | டி. கே. சி. யின் பேச்சு | 15 |
| 5 | செருகு கவிகள் | 33 |
| 6 | கம்பராமாயணத் திருத்தங்கள் | 43 |
| 7 | டி. கே. சி. திருத்தங்கள்-மற்றவை | 56 |
| 8 | டி. கே. சி. – ஒரு கலா ரஸிகர் | 61 |
| 9 | பரதநாட்டியம் | 67 |
| 10 | கம்பனைமாத்திரமா ரஸிக்கிறார்? | 73 |
| 11 | விருந்தோம்பல் | 81 |
| 12 | தமிழ் இசை இயக்கம் | 87 |
| 13 | எல்லாம் தமிழில் முடியும் | 91 |
| 14 | தமிழ் வசனமும் தண்ணீர் ஸ்நானமும் | 100 |
| 15 | சமயதத்துவம் | 109 |
| 16 | டி. கே. சி. யின் புஸ்தகங்கள் | 119 |
| 17 | பழைய நினைவுகள் | 126 |
| 18 | வெள்ளகால் முதலியாரும் டி. கே. சி. யும் | 134 |
| 19 | கவிமணியும் ரஸிகமணியும் | 143 |
| 20 | டி. கே. சி. யின் பண்பாடு | 149 |
| 21 | தமிழ்நாட்டின் டாகூர் | 156 |

# சுவை அறி நிபுணர்

பிரான்ஸ் தேசத்திலே ஒரு 'நிபுணர்.' 'ஒயி னின்' சுவையை நிர்ணயிப்பதில் இவர் பேர் போனவர். ஒயின் பிரான்ஸ் தேசத்தில் அபரிமித மாகக் கிடைக்கும் ஒரு பானம் அல்லவா! ஒரு ஒயினுக்கும் மற்றொரு ஒயினுக்கும் சுவையில் எவ்வளவோ பேதாபேதம். 'என்ன, என்ன பழ ரஸங்களால் ஆக்கப்பட்டது; எத்தனை வருஷங் களுக்கு முன் இது சேர்த்துவைக்கப்பட்டது; எந்த ஊரில் இது கிடைக்கக்கூடியது' என்றெல் லாம் எந்த ஒயினையும் பற்றிச் சொல்லிவிடுவார் இந்த நிபுணர் லேசாக. ஆம்! கொஞ்சம் சுவைத்து ருசி பார்த்துத்தான். ஒருநாள் ஒரு பிரபுவின் வீட்டு விருந்திற்குச் சென்றிருந்தார் இவர். ஒரு புதிய ஒயின் இவருக்கு அங்கே பரிமாறப்பட் டது. அதைச் சுவைத்து ருசி பார்த்த 'நிபுணர்' சொன்னார், அதில் தோல் வாடையும், துருப் பிடித்த இரும்பு வாடையும் வீசுகிறது என்று. விருந்தளித்த பிரபுவிற்கு ஒன்றுமே விளங்க வில்லை. தோல் வாடையும் இரும்பு வாடையும் ஒயினுக்கு எப்படி வரும் என்று அதிசயித் தார்கள் விருந்திற்கு வந்திருந்த மற்றவர்கள். ஒயினைச் சேகரித்து வைத்திருந்த நிலவறை சோதிக்கப்பட்டது. பரிசோதனையில் தெரிந்தது

ஒரு தோல் வார் கட்டிய இரும்புச் சாவி ஒன்று அதனுள் கிடந்தது என்று. எத்தனை எத்தனையோ காலன் கணக்கில் சேர்த்துவைக்கப் பட்டிருந்த ஒயினில் கிடந்த ஒரு சிறு தோலும் சாவியும் சுவையை எவ்வளவுதூரம்தான் மாற்றி விடக் கூடும் என்பது நாம் அறியாததல்ல. என்றாலும் அவ்வளவு நுண்ணிய முறையிலே ஒயினைச் சுவைத்து அதன் சுவையை நிர்ணயிக்கக் கூடிய இந்த நிபுணரின் திறத்தைக் கண்டு எல்லோருமே அதிசயித்தார்கள். இது ஒரு பிரஞ்சுக் கதை.

தமிழ்நாட்டிலே சுவையை நிர்ணயிப்பதற்கு ஒயின் கிடைக்காவிட்டாலும் சுவைத்துச் சுவைத்து அனுபவிப்பதற்கு ஏராளமான பாட்டுக்கள் உண்டல்லவா! பாட்டைச்சுவைத்து சுவைத்து அனுபவித்த 'ரஸிகர்கள்' எத்தனை எத்தனையோ பேர் தமிழ்நாட்டில் இன்று உண்டு. ஆனால் இந்த ரஸிகர்களில் எத்துணை பேர் 'இது நல்ல ரஸமான பாட்டு, இது வெறும் சாரமற்ற சக்கை; இது கவிதை, இது செய்யுள்' என்றெல்லாம் பாகுபடுத்தத் தெரிந்தவர்கள்? இந்த 'ரஸிகர்கள்' பலருக்கு கவிச்சக்கிரவர்த்தி கம்பர் பாட்டும் காளமேகப் புலவர் சிலேடைச் செய்யுளும் ஒன்றாகத்தான் தோன்றும். ஆனால், பிரான்ஸ் தேசத்து நிபுணரைப்போல, 'இதுதான் கம்பன் பாட்டு, இது கம்பன் பாட்டு அல்ல; இது நல்ல

ரஸமான கவி, இது வெறும் அர்த்தமற்ற சொல் லடுக்கு; இது சொக்கத்தங்கம், இது மாற்றுக் குறைந்தது' என்றெல்லாம் நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்தவர் தமிழ்நாட்டில் இன்று ஒருவர் உண் டென்ருல் அது வேறு யாருமில்லை. டி. கே. சி தான்.

ஒயினைச் சுவைத்துச் சுவைத்து அதன் சுவையை நிர்ணயித்துவிடும் பிரஞ்சு அறிஞரைப் போலத் தமிழ்க் கவிதையைச் சுவைத்துச் சுவைத்து அதன் ருசியை நிர்ணயித்து விடுகிருர் டி. கே. சி. கவிச்சுவை தெரிந்த அன்பர் அவர். அவர் 'கவிதை' என்ருல் அது கவிதைதான்; அவர் 'இது கவிதை அல்ல' என்ருல் அது கவிதை அல்லதான். அவர் 'இது கம்பன் பாட்டு' என்று சொன்னுல் அது கம்பன் பாட்டுத்தான்; அவர் 'இது கம்பன் பாட்டு அல்ல' என்ருல் அது அல்ல தான்.

இங்கு ஒரு நல்ல சம்பவத்தை நினைவு கூறு தல் மிகையாகாது. 1–8–1937ல் வெள்ளகால் ராவ் சாஹிப், வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்க ளுடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழா சிறப் பாகத் திருநெல்வேலியில் நடைபெற்றது. அன்று தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வாழ்த் துச் செய்திகளும் பாமாலைகளும் வந்து குவிந்த வண்ணமாகவே இருந்தன. அன்று மத்தியானம் நாங்கள் எல்லோரும் டி. கே. சி. அவர்கள் வீட்

டில் கூடி வந்திருந்த கடிதங்கள், வாழ்த்துப் பாக்கள் எல்லாவற்றையும் தொடுத்தோம். அப் படித் தொடுக்கும்போது ஒரு பாட்டு,—பாடிய வர் கையெழுத்திடாதபடி கிடைத்தது. உடன் வந்த கடிதமும் தவறிவிட்டது. அந்தப் பாட் டைப் பாடி முடிக்கு முன் எத்தனை எத்தனைவித மாக எல்லாம் பாடிப் பார்த்திருக்கிறார் என்ற விவரங்களும் அந்தக் காகிதத்திலேயே குறிப்பிட் டிருந்தார் அவர். உடனே அந்தப் பாட்டைப் பற்றி ஒரு சர்ச்சையே நடக்க ஆரம்பித்துவிட் டது அங்கு கூடியிருந்தவர்களுக்குள்ளே. 'அடடா! என்ன கஷ்டப்பட்டிருக்கிறார்' என்று அனுதாபம் காட்டினார் ஒருவர். இப்படி யெல்லாம் சிரமப்பட் டிருக்கும் ஆசாமி யாரையா?' என்று நையாண்டி பண்ணி னார் இன்னொருவர். 'யாரோ ஒரு கத்துக்குட்டி இப்போதுதான் பாட்டுக் கட்டப் படித்திருக்கி றான். அதற்குள் பாட்டுப்பாடி விழாவிற்கு அனுப்பவே ஆரம்பித்துவிட்டானே?' என்றெல் லாம் கிண்டல் பண்ணினார் மற்றொருவர். ஆகவே- ஒருவராவது பாட்டை அனுபவிக்கவில்லை; அனுபவிக்கப் பிரயத்தனமும் செய்யவில்லை. இந்தச் சமயத்தில் இவர்களிடையே டி. கே. சி வந்து சேர்ந்தார். அவர் கையில் அந்தத்தாள் வைக்கப்பட்டது. அவர் படித்தார் ஒருமுறை. பாடிப்பார்தார் மற்றொரு முறை. அவ்வளவுதான். 'இப்படிப் பாடக்கூடியவர் இன்று தமிழ் நாட்

டில் ஒரே ஒருவர்தானுண்டு. அவர்தான் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை. உடனே இதை அச்சிடுங்கள்: அச்சிட்டு எல்லோருக்கும் வழங்க ஏற்பாடு செய்யுங்கள்' என்று உற்சாகமாகப் பேச ஆரம்பித்து விட்டார் டி. கே. சி.

*எண்பதாண்டான இளைஞனே!*
*இன்னமுதின்*
*பண்பெலாம் காட்டுதமிழ்ப் பாவலனே!-*
*நண்பனே!*
*வெள்ளகால்ச் செல்வனே!*
*வேள்சுப் பிரமணிய*
*வள்ளலே வாழ்க மகிழ்ந்து*

என்பதுதான் பாட்டு. பாட்டில் கையொப்பமில்லை என்பது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால் பாட்டில் 'தே. வி' யின் முத்திரை இருப்பதைக் கண்டுபிடித்து விட்டார் டி. கே. சி. ஆம். ஒயினைச் சுவைத்து அதன் சுவையை நிர்ணயிக்கும் நிபுணரைப்போலக் கவிச்சுவையை நிர்ணயிக்கும் சமர்த்தர் அல்லவா அவர்.

## டி. கே. சி

பெயரிலே என்ன இருக்கிறது என்றுதான் கேட்கிறார்கள் பலர். இருந்தாலும் ஒரு ஆளை அடையாளம் கண்டுகொள்ள அவர் பெயரைச் சொல்லித்தானே தெரிய வேண்டியிருக்கிறது.

இல்லாவிட்டால் பெயரை அப்படியும் இப்படியும் திரித்துக்கொள்வதில் பலர் சிரத்தை காட்டுவா செய்வார்கள்? 'ஏ. பரமேஸ்வரன்' என்ற பெயர் நமக்கு எவ்வளவோ அழகாக இனிமையாக இருந்தாலும், அந்தப் பெயர், அந்தப் பெயருடையவருக்கு அழகாகத் தோன்றுவதில்லை. அதற்காக அவர் தன் பெயரை 'ஏ. பி. வாரன்' என்று மாற்றிக்கொள்கிருர். இதுபோலவே 'கணபதி ராமன்' 'ஜி. ராம்' ஆகிருர். 'கிருஷ்ணமூர்த்தி' 'கே. மர்த்தி' ஆகிருர். தொண்டைமான் என்ற அழகான பெயரைக்கூட 'டாண்டிமன்' என்று திரித்துக்கொள்வதில் ஒரு மோகம். இதுபோல இன்னும் எத்தனை எத்தனை கோணல்கள் பெயரைச் சொல்லுவதிலே.

ஆனல் சிலருடைய பெயர், தாம் விரும்பினலும், விரும்பாவிட்டாலும் மக்களிடையே ஒரு விதமாக நிலைத்துவிடுகிறது. அதுவே பழக்கத்திலும் வந்துவிடுகிறது. பின்னல் சரியான பெயரைச்சொல்லி அழைத்தால்கூட ஆளை இனங்கண்டுபிடிக்க முடிகிறது இல்லை. தமிழ்நாட்டில் ராஜகோபாலாச்சாரியார்கள் எத்தனையோ பேர் உண்டு. ஆதலால் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் என்று மட்டும் குறிப்பிட்டால் ஆளை இனம் கண்டுபிடிப்பது கஷ்டமாகிவிடும். 'சி. ஆர்.' என்ருல் ஆள் யாரெனத் தெரிந்து விடுகிறது. இதுபோலவே, 'தெ. க. சிதம்பரநாத முதலியார்'

என்றால் யாரெனத் தெரிய பலமான விசாரணை நடத்தவேண்டியதுதான். 'அதுவேறு யாருமில்லை, நமது டி. கே. சிதம்பரநாத முதலியார்தான்' என்றால், 'ஓ! நம்ப டி. கே. சி யைச் சொல்கிறீர்கள்?' என்று கேட்கிறார்கள் நண்பர்கள்.

டி. கே. சி என்ற மூன்று எழுத்துக்கள் இன்று தமிழ்நாட்டிலே பிரசித்தம். அமராவதிப்புதூர் மகளிர் இல்லம் நடத்தும் ஸ்ரீ சொ. முருகப்பா அவர்களின் குமாரன் – ஐந்து ஆறுவயதே உடைய வீரபாண்டியனைக் கேட்டாலும் 'டி. கே. சி' யார் என்று தெரியும். ஏன்? டி. கே. சி யின் கடைக் குட்டிப் பேரன் குமாரசாமியை, 'நீ யார்?' என்று கேட்டுப்பாருங்களேன், அப்போதும் மழலை மாறாத மொழியிலே அவன் 'நான் டி. கே. சி பேரன்' என்றுதான் சொல்லுவான். இப்படியே ஆண், பெண், குழந்தைகள் எல்லோருக்கும் டி. கே. சி யென்றால் யார் என்று தமிழ்நாட்டில் நன்றாய்த் தெரியும்.

தென்காசியைச் சேர்ந்த களங்காடு இவருடைய பூர்விகமான ஊர். தென்காசியில் இருந்த தீத்தாரப்ப முதலியார் இவருடைய தந்தை. ஆகவே களங்காட்டு தீத்தாரப்ப முதலியார் குமாரர் சிதம்பரநாத முதலியார் என்றுதான் பத்திரங்களிலும் சர்க்கார் கணக்குகளிலும் இவர் பெயர் தாக்கலாகியிருக்கும். சுருக்கமாக க. தீ. சிதம்பரநாத முதலியார் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால்

பழக்கத்தில் 'கே'யும் 'டி'யும் இடம் மாறி விழுந்து டி. கே. சிதம்பரநாத முதலியார் என்று அவருடைய பெயர் நிலைத்துவிட்டது. இல்லை. தென்காசி களங்காட்டுச் சிதம்பரநாத முதலியார் என்றும் பத்திரங்களில் அவர் பெயர் தாக்கலாக்கப்பட்டிருக்கலாம். தெ. க. சிதம்பரநாதன் என்றும் சிலர் அவர்களை அழைக்கலாம். என்ன இருந்தாலும் இலக்கிய உலகத்திலே 'திரு' அல்லது 'ஸ்ரீ' டி. கே. சிதம்பரநாத முதலியார் என்றுகூட அவர் இல்லை. வெறும் 'டி. கே. சி'தான் அவர்.

## வட்டத்தொட்டி

இலக்கிய சங்கம் திருநெல்வேலியிலே ஒரு ஸ்தாபனம். அது கூடுமிடம் — திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் டி. கே. சி வீடு. இலக்கிய சங்கம் 1924ல் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போதைய அங்கத்தினர்கள் எல்லாம் 'பி.ஏ.பி.எல்'கள். குறைந்தது 'பி. ஏ.' பட்டமாவது பெற்றிருந்தால் தான் சங்கத்தில் இடம் உண்டு. ராவ்சாகிப் ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ. பி. எல். ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ. பி. எல். ஸ்ரீ ஜே. சக்கரபாணி நம்பியார் எம். ஏ. பி. எல். ஸ்ரீ எம். எஸ். சுப்பையா முதலியார் பி. ஏ. எல்லாம் சங்கத்தின் முக்கிய அங்கத்தினர்கள் அப்போது. இரண்டு மூன்று வருஷம் சங்கத்தின் ஆதரவில் கம்பன் திருநாளை நடத்தி,

பின்னர் டி. கே. சி சென்னை சென்றதின் காரண மாக சங்கத்தின் முதல் அத்தியாயம் முடி வடைந்தது.

பின்னுல் 1935ல் டி. கே. சி திருநெல்வேலிக் குத் திரும்பி வந்தபோது சங்கத்தின் மற்ெருரு சகாப்தம் ஆரம்பமாயிற்று. சென்னைச் சர்வகலா சாலைப் பட்டதாரிகள்தான் அங்கத்தினர் ஆக லாம் என்ற நிபந்தனை நீங்கிற்று. இலக்கிய சங்கம் என்ற பழய பெயரிலே புதிய கூட்டம் ஒன்றுகூட ஆரம்பித்தது. இந்த இலக்கிய சங்கம் எது என்று தெரியாதவர்களுக்கும் கூட 'வட்டத் தொட்டி' என்ருல் எது என்று உடனே தெரிந்து விடும். டி. கே. சி யின் வீட்டின் முன் கட்டு ஒரு அகலமான கூடம். அந்த அகலமான கூடத் தின் மத்தியிலே, வானவெளியுள்ள, வட்டவடிவ மான ஒரு தொட்டிக்கட்டு ஒன்றும் உண்டு. ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கெல்லாம் அங்கு கூட்டம் நிறைய இருக்கும். எல்லோரும் இருப்பது அந்தத் தொட்டிக்கட்டுக்குள்ளே தான். வட்டத்தொட்டித் தலைவர் டி. கே. சி. கம்பன் காவியம் முறையாக அங்கு படிக்கப்படும். வட் டத்தொட்டி அங்கத்தினர்கள் பதினெட்டு வயது நிரம்பாத பள்ளி மாணவரிலிருந்து எண்பது வயதிற்கு மேலான பழுத்த கிழவர்கள் வரை. கம்பன் கவிச்சுவை உணர்வதிலோ எல்லோருக் கும் ஒரே உற்சாகம்.

வட்டத்தொட்டி அங்கத்தினர் ஜாப்தாவை ஒரு திருப்புத் திருப்பினால் கீழ்க்கண்ட பெயர்களைப் பார்க்கலாம்.

வெள்ளகால் ராவ்சாஹெப் வி. பி. சுப்பிரமணிய முதலியார் ஜி. பி. வி. சி. கால்நடை இலாக்காவில் டிப்டி சூப்பிரண்டாக இருந்து பென்ஷன் பெற்றவர். வயது தற்போது எண்பத்தெட்டு. தமிழ்ப் பெருங் கவி, முதுபெரும் புலவர் என்ற பட்டமெல்லாம் பெற்றவர். மில்டனது சுவர்க்க நீக்கத்தையே மொழிபெயர்த்தவர். அகலிகை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா முதலிய நூல்களையெல்லாம் இயற்றியவர். கம்பராமாயண சாரத்தையே வடித்தெடுத்தவர். தமிழ் மொழிக்கே தன் வாழ்நாள் பூராவும் உழைத்தவர். இன்னும் உழைக்கின்றவர்.

திவான்பஹதூர் பி. ஆவுடையப்ப பிள்ளை பி. ஏ. பி. எல். டி. கே. சி யின் பள்ளித்தோழர். இப்போது பிரபலமான வக்கீல். பப்ளிக் பிராசிகூட்டர் வேலையெல்லாம் பார்த்தவர். பொதுஜனங்களிடையும், சர்க்கார் அதிகாரிகளிடையேயும் செல்வாக்கு நிரம்ப உடையவர். சபை நிறைந்த பெரிய மனிதர். அவர் எழுதிய 'குறள்' தமிழ் அன்பர்களிடையே பிரசித்தம் உடையவை.

பி. ஸ்ரீ. ஆச்சார்யா. தமிழ் உலகம் நன்கு தெரிந்தவர். நல்ல ரஸிகர். பேச்சாளி. கம்பனைத்

தமிழ்நாட்டில் மாத்திரமல்ல—பம்பாயிலும் கூட பிரசித்திபெறச் செய்தவர். தினமணி பதிப்பகத்தின் தலைவர். கம்பனைக் கற்பதற்கு டி. கே. சியையும் இன்னும் சிலரையும் ஆசிரியராகப் பெற்றவர்.

**ஜே. சக்கரபாணி நம்பியார்** எம். ஏ. பி. எல். பிரபலமான வக்கீல். ஜில்லா போர்ட் உபதலைவர் பதவியை பல வருஷ காலம் வகித்தவர். இலக்கிய சங்கத்தின் முதல் காரியதரிசி.

**ஆண்டியப்ப பிள்ளை.** வயது முதிர்ந்த கிழவர். தமிழிலே ஆர்வமிகுந்தவர். சல்லாபத்திற்குகந்த ஒரு நல்ல தமிழன்பர்.

**ஏ. வி. முத்தையா பிள்ளை.** பென்ஷன் பெற்ற சர்க்கிள் இன்ஸ்பெக்டர். சமூகச் சீர்திருத்தத்தில் தீவிரமான பற்றுக்கொண்டவர். ஸ்ரீ ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் தோழர். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் தலைவர்.

**ஏ. ஸ்ரீனிவாசராகவன்** எம். ஏ. ஆங்கிலப் பேராசிரியர். நல்ல பேச்சாளர். இன்றையத் தமிழ் உலகம் நன்கறிந்தவர்.

**ஏ. என். மகரபூஷணம் அய்யங்கார்** பி.ஏ.பி.எல். ஒரு வக்கீல். 'பி. ஸ்ரீ' யின் சகோதரர். கம்பனை ஆர்வத்தோடு படிப்பவர்.

**வித்வான் பி. கே. அருணுசலக் கவுண்டர்,** கோயம் புத்தூர் கோபிசெட்டிபாளையத்தைச் சேர்ந்தவர். திருநெல்வேலியில் பதினைந்து வருஷ காலமாகத் தமிழ்ப்பேராசிரியராக இருப்பவர். வாக்கு வன்மை உடையவர். குழந்தை உள்ளம் உடையவர்.

**டி. எம். பாஸ்கரத் தொண்டைமான்** எம். ஏ. நல்ல தமிழ் அன்பர். கலை அன்பர். கவிதை சித்திரம் சிற்பம் என்ருல் உள்ளம் பறிகொடுப்பவர். மாஜிஸ்டிரேட் உத்தியோகம் பார்ப்பவர். இதை எழுதுபவர்.

**எஸ். மகாராஜன்** பி. ஏ. பி. எல். ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல பாண்டித்யம் உடையவர். ஜில்லா முன்சீப் உத்தியோகஸ்தர்.

**ஆ. முத்துசிவன்** எம். ஏ. தமிழ்ப்பேராசிரியர். நல்ல பேச்சாளர். 'அசோகவனம்' ஆசிரியர்.

**எஸ். சங்கரலிங்கம் பிள்ளை.** ராவ்சாஹிப் வையாபுரிப் பிள்ளை அவர்களின் சகோதரர். கிராம முன்சீப் உத்தியோகம் செய்பவர். கம்பன் புத்தகமும் கையுமாகவே அலைபவர்.

**எம். ஆர். எம். சுந்தரம்.** அகில இந்திய ரேடியோ நிலையம் - டில்லியில் வேலைபார்ப்பவர். தமிழ்ப் பற்றுள்ள ஒரு நல்ல இளைஞர்.

எம். பி. சோமசுந்தரம். சிறந்த சிறுகதைகள் பல எழுதியவர். பாரதி தங்கப் பரிசு பெற்றவர். திருச்சி ரேடியோ நிலையத்தில் உத்தியோகம் பார்ப்பவர்.

இது தவிர, ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், மிஸஸ் சாஸ்திரி, கல்கி, கே. பால சுப்பிரமணிய அய்யர், வி. வி. ஸ்ரீனிவாச அய்யங்கார், ஸ்ரீ ராவ்சாஹிப் வையாபுரிப் பிள்ளை, பி. என். அப்புஸ்வாமி அய்யர் எல்லோரும் 'கௌரவ விசிட்டர்கள்.' ஜாப்தாவில் கொடுத்திருக்கும் விவரங்களைப்பார்த்தால் பல்வேறு பட்ட துறைகளிலே ஈடுபட்டு வாழ்க்கையை நடத்திவரும் தமிழன்பர் பலர் கூடுகின்ற தனி இடம் இந்த வட்டத்தொட்டியாகும். இவர்கள் எல்லாம் டி. கே. சி யிடம் வெறும் அன்பும் மரியாதையும் உடையவர் என்பதோடு மட்டும் அல்ல, அவரிடம் பெரிய பிரேமையே கொண்டவர்கள்.

இவ்வாறு சிறந்த அங்கத்தினர்களும், மிகச் சிறந்த தலைவரான டி. கே. சி யும் வாரம் ஒரு முறை கூடும் வட்டத்தொட்டியின் குறுக்களவெல்லாம் சுமார் பதினைந்து இருபது அடிதான். ஆனால் இவர்கள் சஞ்சரிப்பதென்னவோ பெரிய காவிய உலகத்தில்த்தான். 1938ல் டி. கே. சி சென்றதின் காரணமாக தியாகராயநகரில் ஒரு இலக்கியப் பண்ணை. (நீலாவதி ராமசுப்பிரமணியம் நடத்தியது) கோகலே ஹாலில் ஒரு கம்பன் கழகம்,

எல்லாம் நிறுவப்பட்டுள்ளன. டி. கே. சி யின் பிரசாரத்தின் பயனாக, காரைக்குடியில் கம்பன் சம்பந்தமான ஆக்கவேலைகள் செய்யும் ஒரு மத்ய ஸ்தாபனமே ஏற்பட்டுவிட்டது. ஸ்ரீ சா. கணேசன் நடத்தும் கம்பன் கழகம், கம்பன் திருநாள் எல்லாம் தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே இடம் பெற வேண்டியவை. இன்னும் தமிழ்நாட்டில் இன்று எங்கு பார்த்தாலும் கம்பன் கழகங்கள். வருஷம் தோறும் கம்பன் திருவிழாக்கள். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும்கூட சிறப்பான பங்கெடுத்து இந்தச் சங்கங்களை நன்றாக நடத்தி வருகிறார்கள் என்று தெரிகிறது. இந்தச் சங்கங்கள், கழகங்கள் எல்லாம் திருநெல்வேலி, வண்ணார் பேட்டை வட்டத்தொட்டியின் கிளை ஸ்தாபனங்கள்தான். வட்டத்தொட்டியின் குறுக்களவு இன்று பதினைந்து-இருபது அடி அல்ல; நானூறு மைல். ஆனால் எல்லோருக்கும் தலைவர் என்னவோ டி. கே. சி தான். கம்பன் கவிதையை அனுபவிக்க, தமிழ்க் கவி நயத்தை அறிந்து கொள்ள இன்று தமிழ் அன்பர் எல்லோரும் எதிர்நோக்கும் ஒருவர் உண்டென்றால் அது டி. கே. சி தான்.

வட்டத் தொட்டியின் 'ஹெட்குவார்டர்ஸ்' தற்போது குற்றாலத்திற்கே மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் அன்பர் பலரும் இங்கே கூட நல்ல வசதி உண்டு. அன்பர் பலர் தொழில் முறையில் வேறு வேறு துறைகளில் ஈடுபட்டிருக்கலாம்.

அரசியலில் மாறுபட்ட அபிப்பிராயம் உடையவர்களாக இருக்கலாம். மேலும் எத்தனை எத்தனையோ பேதம் உடையவர்களாக இருந்தாலும், வட்டத்தொட்டி அங்கத்தினர்கள் ஆன உடனே ஒவ்வொருவரும் தங்களைத்தாங்களே மறந்து விடுகிறார்கள். எல்லோருக்கும் தமிழ் இலக்கியத்திலே ஒரு ஆர்வம். கம்பன் பேரிலேயோ ஒரே மோகம்; ஒரே வெறிதான்.

குற்றாலத்தில் 'சீசன்' ஆரம்பித்ததும் உடல் நலம் பெற விரும்பும் அன்பர் பலரும் விரைந்தோடி குற்றாலம் சேர்வார்கள். டி. கே. சியையும் சென்று காண்பார்கள். கம்பன் பாடல்களை முறையாகப் படிக்கக் கூட்டமும் கூடும். குற்றாலத்தில் உடல்நலம் மட்டுமல்ல உள்ளமே நலம் பெறும். எல்லாம் வட்டத்தொட்டித் தலைவர் டி. கே. சி யின் ஆதரவில்த்தான்.

## டி. கே சி யின் பேச்சு

கம்பர், ராமாயணம் பாடி சுமார் ஆயிர வருஷ காலம் ஆகிவிட்டது. கம்பனது கவிதையை இந்த ஆயிரம் வருஷகாலமாக எத்துணை எத்துணையோ பேர் எப்படி எப்படி எல்லாமோ அனுபவித்திருக்கிறார்கள். பல பாஷைகளில் பாண்டித்யம் பெற்றிருந்த சிறந்த ரஸிகர் வ. வே. சு அய்யர் கம்பனை ஹோமர், டாண்டி, வர்ஜில்,

ஷேக்ஸ்பியர் முதலிய உலக மகாகவிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கடைசியில் "கவிதா லோகத்தின் பேரரசர்கள் என்று சொல்லத் தகுந்தவர்கள் எல்லாம் கம்பனுடைய சன்னிதியிலே முடிசாய்த்து வணங்க வேண்டியதுதான்" என்று முடிவு கட்டுகிறார். வெள்ளகால் ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணியமுதலியார் அவர்களோ-கம்பன் கவியிலே காணும் சில அரிய கருத்துக்களை 'இப்படித்தான் கம்பன் கருதியிருக்க வேண்டும்' என்று எடுத்துக்கூறுகிறார். புதை பொருள்களையெல்லாம் அவர் வெளியிட்டுள்ள கம்பராமாயண சாரத்தில் விளக்குகிறார். ராவ்சாஹிப் ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை, ஸ்ரீ பி. ஸ்ரீ. ஆச்சார்யா, ஸ்ரீ ராபி. சேதுப் பிள்ளை, ஸ்ரீ ஏ. சி. பால் நாடார் முதலிய தமிழ் அறிஞர்கள் கம்பனைப் படித்துப் படித்து அவர்கள் கண்ட பெருமைகளையெல்லாம் புத்தக வாயிலாகவும், பத்திரிகைகளின் வாயிலாகவும் பல தடவை எடுத்துச் சொல்கிறார்கள். கருத்தை அனுபவித்தவர் ஒருவர். காவிய மாளிகையின் கட்டுக் கோப்பை - ரஸனையை, அனுபவித்தவர் ஒருவர். பாத்திரங்களை நடத்தும் கவிஞனின் நாடகப் பண்பை அனுபவித்தவர் ஒருவர். கம்ப சித்திரங்களிலே மெய் மறந்தவர் மற்றொருவர். இவர்கள் எல்லாம் கம்பனை அனுபவிக்கும் முறை ஒருவிதம். டி. கே. சி கம்பனை அனுபவிக்கும் முறை ஒருவிதம். டி. கே. சி கம்பனை அனுபவிக்கிறார்; ஆராய்ச்சி பண்ணுகிறதில்லை. மற்றவர்களை அனுபவிக்கும்படி செய்கிறார்;

ஆராய்ச்சி செய்யும்படி தூண்டுவதில்லை. அவர் கம்பன் கவிதையாகிய தேனிலே தோய்ந்து எழுந்து ரீங்காரம் செய்யும் வண்டுபோலப் பாடிப் பாடிக்களிப்பார். பாட்டு நாம் பன்முறை கேட்ட பாட்டாகத்தானிருக்கும். ஆனாலும் அந்தப் பாட்டைச் சுவைத்துச் சுவைத்து டி. கே. சி சொல்லும்போது, அந்தப் பாட்டில்தான் எவ்வளவு உயிர் உண்டாகி விடுகிறது! எவ்வளவு உணர்ச்சி உண்டாகிவிடுகிறது! டி. கே. சி பாட்டை எடுக்கிற எடுப்பும், பாடிக்காட்டுகிற முறையும் அதை முடிக்கிற முடிப்பும் ஒரு அலாதியான முறையாகவே இருக்கிறது. ஒரு பாட்டைத்தான் எத்தனை முறை பாடுவது என்று அவருக்குக்கணக்குக்கிடையாதா? 'ஆடுகின்றனர் பண் அடை இன்றியே' என்ற பாட்டை அவர் பாட ஆரம்பித்துவிட்டால் அதையே பாடிக் கொண்டிருப்பார் அரைமணி நேரம். ஏன்? ஒரு மணி நேரமும் ஆடிக்கொண்டேயிருப்பார்.

இராமனுக்குப் பட்டம் என்ற சுப செய்தியை அரண்மனையில் இருந்த எல்லோரும்தான் கேட்கிறார்கள். வேதவேதியர், அரசர்கள் எல்லோரும் ஒரு எக்களிப்பையே அடைகிறார்கள். அதோடு கோசலையின் தாதியர் நால்வர்காதிலும் இந்த நல்ல செய்தி விழுகிறது. ஆனந்த வெறியோடு, கூந்தல் அவிழ்ந்து தொங்குவதையும், கச்சு நெகிழ்ந்து வீழ்வதையும் கவனியாமல் ஒரு

வரை யொருவர் இடித்துக்கொண்டு, 'நான் முந்தி, நீ முந்தி' என விரைந்தோடுகிருர்கள் கோசலாதேவியின் அந்தப் புரத்தை நோக்கி. கோசலையிடம் செய்தியை எப்படித் தெரிவிக்கிருர்கள். கம்பர் வர்ணிக்கிருர் அதை. டி. கே. சி பேசுகிருர் இதைப்பற்றி.

ஆடு கின்றனர்,
பண் அடை இன்றியே
பாடுகின்றனர்,
பார்த்தவர்க் கேகரம்
சூடு கின்றனர்,
சொல்லுவ தோர்கிலர்,
மாடு சென்றனர்
மங்கையர் நால்வரே

என்பது பாட்டு. 'ராமனுக்குப் பட்டாபிஷேகம் அதுவும் நாளையே' என்ற செய்தியைத் தெரிவிக்க ஓடிவந்த தாதியர் ஆடுகிருர்கள், பாடுகிருர்கள். பாட்டிலே ராக தாளம் எல்லாம் இசைகிறதா என்று பார்த்தா பாடுகிருர்கள். இல்லை. பண் அடை இன்றியே பாடுகிருர்கள். வழியிலே சந்திப்பவர்களை யெல்லாம் கைகூப்பித் தொழுகிருர்கள். ஏன் தொழுகிருர்கள்? அது அவர்களுக்கே தெரியாது. 'என்ன இவ்வளவு உத்சாகம் உங்களுக்கு?' என்று கேட்டால் இவர்களுக்கு பேசவாவது முடிகிறதா, நாக்குழறுகிறது. விஷயம் என்ன என்றே சொல்ல முடியவில்லை. எல்லாம் ஆனந்த வெறியால் தன்வசமிழந்து காரணத்

தால்த்தான். தாதியர் அடைந்த வெறியைக் கம்பன் அடைந்தான். டி. கே. சி அடைகிருர் நம்மையும் இந்த ஆனந்த வெறியிலேயே திளைக்கப்பண்ணுகிருர். எத்துணை முறை எப்படி எப்படி எல்லாம் பாடுகிருர். பாட்டைச் சொல்லி முடிப்பதற்குள், பாட்டைக்கேட்கக் கூடியிருந்த அத்தனை பேரும் பாட்டை மனனம் பண்ணிவிடுவார்கள். கூடவே சேர்ந்து பாடவும் ஆரம்பித்து விடுவார்கள். பாட்டை அவர் பாடி முடிக்கிற போது, பாட்டைக்கேட்டு அனுபவித்த அத்தனை பேரும் அயோத்தி நகருக்கே, கோசலையின் அந்தப்புரத்திற்குள்ளேயே போய்விடுவார்கள் எல்லாக் கட்டுக்காவலையும் மீறி. ஆம். டி. கே. சி சொல்வன்மையின் துணைகொண்டுதான்.

கம்பனைப்பற்றி, தமிழ்க் கவிதையைப்பற்றி டி. கே. சி பேசும்போது டி. கே. சி நா பேசும், டி. கே. சி வாய் பேசும்; அடர்ந்த நெற்றிப் புருவம் பேசும்; செழித்து வளர்ந்துள்ள மீசை பேசும். எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய உள்ளமே நம்முடைய உள்ளத்தோடு பேசும்.

டி. கே. சி யின் ஒரு பேச்சை இப்போது அவர் பேசும் பாணியிலேயே தர முயல்கிறேன். திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சங்கரன்கோவிலில் 7—5—1942ம் தேதியில் ஒரு இலக்கிய சங்கத்தை ஆரம்பித்து வைத்தார் டி. கே. சி. 'கம்பனும் கவிதையும்' என்னும் பொருள்பற்றி அன்று

பேச்சு. இரவு ஒன்பது மணி. பேச்சு ஆரம்பமா கிறது.

"நானெல்லாம் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது தமிழ் வளருகிறது என்ருல் அது பள்ளிக்கூடத்திலேதான் என்று சொல் வார்கள். இப்படிச் சொல்லுவதெல்லாம் சப்பாத் திக்கள்ளி வளர்ச்சியை வளர்ச்சி என்று சொல் லுவதைப் போலத்தானே! இந்தச் சங்கரன் கோவிலிலே தமிழ் வளர்ந்தது என்று சொன்னுல் அது உண்மை. சங்கரன் கோவிலைப்பற்றி யெல் லாம் நாம் லேசாக நினைத்துவிடக்கூடாது. கொஞ்சகாலத்திற்கு முன்பெல்லாம் இந்த வட் டாரத்திலுள்ள புளியங்குடியில் எத்தனையோ புலவர்கள் இருந்திருக்கிருர்கள். அவர்களுடைய புலமை, இயல், இசை, நாடகம் முதலியவற்றில் எல்லாம் முற்றி இருந்திருக்கிறது. அவர்கள் எழு திய நாடகத்தை 'மந்தை நாடகம்' என்று கூறு வார்கள். அந்தக் கலையில் அவர்கள் மிகவும் கை தேர்ந்தவர்கள். சிறந்தவர்களும் கூட. அவர்கள் கையாண்ட இசையைப் பார்த்தாலும் ரஸமான விஷயங்கள் இல்லாமல் இல்லை. நாம் கீர்த்தனம் என்று இப்பொழுது கூறுகின்ருேமே அதைத் 'தரு' என்று இங்கே அழைப்பது வழக்கம். புல வர்கள் ராகங்களை யெல்லாம் பக்குவப்படுத்திப் பாடினுர்கள். இப்படித் தமிழ் இசையெல்லாம் வளர்ந்த இடம் இது.

"எந்த பாஷையிலும் அருமையான நூல்கள் குறைவாகவே இருக்கும். தமிழிலோ மற்ற பாஷைகளைவிட அருமையான நூல்கள் அதிகப் படிதான். இந்தச் சங்கரன்கோவில் மண்ணிலே அத்தகைய நூல்கள் எழுதிய கவிகள் எல்லாம் தோன்றியிருக்கிறார்கள். சுமார் ஏழுமைல் தூரத்திலே உள்ள **கரிவலம்வந்தநல்லூரில்** எத்தனையோ இலக்கியங்கள் உதித்திருக்கின்றன. குட்டித்திருவாசகம் என்று வழங்கப்படும் **கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி** முதலியவற்றை அவர்கள் சிருஷ்டித்திருக்கிறார்கள். இந்த இலக்கியங்கள் மிக அருமையானவை. இங்கேயுள்ள தமிழ்ப்பற்று பரம்பரை பரம்பரையாக வந்தவை. நிலவாசியோடு வந்தது அது. தமிழ் அனுபவிக்கக்கூடிய பாஷை தான். தமிழ்க்கவியையும் எல்லோரும் அனுபவிக்கலாம்தானே.

"ஆங்கில ஆசிரியர் ஒருவர் சொல்கிறார். இங்கிலாந்திலே ஒரு பெரிய கூட்டத்தைக் கலைக்க விரும்பினால் போலீசாரைக் கூப்பிடவேண்டாம், பிளேக் முதலிய தொத்து நோய்களையெல்லாம் வரவழைத்துப் பேசவேண்டாம், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொன்னால் போதும். அது என்ன விஷயம். ஆமா! 'கவி வருகிறது' என்று மட்டும் சொன்னால் போதும். உடனே கூட்டத்தில் உள்ளவர்கள் திக்கு திசை தெரியாமல் ஓடி விடுவார்கள். கூட்டமும் லேசாகக் கலைந்துவிடும்"

என்று. இது சும்மா வின்னியாசமாகச் சொன்ன வார்த்தையல்ல. ஆங்கிலேயருக்குக் கவி என்றால் அத்தனை பயம். போலீசுக்கும் 'ஹோஸ் பைப்புக்கும்' பயப்படாதவர்கள்கூட கவியைக் கண்டு பயப்படுவார்கள். இது உண்மை. காரணம் என்ன? ஆங்கிலக் கவிகளில் எளிமை இல்லை. நாடகத்திற்குப் போகிறோம். நடிகர்கள் பாடும் பாட்டுக்களையும், பேசும் வசனங்களையும் கேட்டுச் சலித்துப்போய்விடுகிறோம். இடையில் எங்கிருந்தோ ஒரு 'தரு' வருகிறது. இராமலிங்க சுவாமிகள் பாட்டு ஒன்று. குற்றாலக் குறவஞ்சியிலிருந்து ஒன்று. ஏதோ தமிழிலேயே ஒரு துக்கடா. உடனே நாடகம் பார்ப்பவர்களுக்கெல்லாம் ஒரே உத்சாகம். தூக்கம் போட்டவர்கள் கூட எழுந்து உட்கார்ந்துகொள்வார்கள். இப்படியெல்லாம் அனுபவிக்கத்தானே தமிழும் தமிழ்க்கவியும் இருக்கிறது.

"தமிழிலே கவி எப்படி அமைகிறது? தாளத்தினாலே (ரிதும்)தான். இதயத்தில் உண்டாகிற உணர்ச்சியை எல்லாம் தாள இயல் காட்டுகின்றது. தாளத்திலேதான் இருதய பாவமெல்லாம் அடங்கிக் கிடக்கின்றது. வின்ஸ்லோ என்பவர் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ் அகராதி ஒன்று எழுதினார். அதற்கு முகவுரை ஆங்கிலத்தில். அந்த முகவுரையில் 'மேல்நாட்டில் கவிக்கெல்லாம் சார்பான பாஷை கிரீக். ஆனால்

தமிழைப் பார்த்தால் இதன் நுட்பமும் மெருகும் கிரீக்கில் கூடக் கிடையாது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது' என்று எழுதுகிறார். இதை எப்படியடா இவர் கண்டுபிடித்துவிட்டார் என்று நாம் அதிசயப்பட வேண்டியிருக்கிறது. இதுபோன்ற ஒரு புகழ்ச்சியை வேறு எந்த பாஷைக்கும் சொல்லிவிட முடியாது. இதெல்லாம் உண்மைதானு என்று நாம் சில தமிழ்ப் பாடல்களைப் பார்ப்போம்.

"சாம்ராஜ்யம் வேண்டாம். கவி ஒன்றுமட்டும் கிடைத்துவிட்டால் போதும். கம்பனை உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது. கம்பனை சாமான்யமானவனுகச் சொல்ல முடியாது. அவன் கவி. 1340ம் வருஷத்தில் ஆங்கில ஆசிரியர் கார்லைல் ஒரு பிரசங்கத்தில் சொன்னார் 'இங்கிலீஷ்காரரே! உங்களிடம் ஒரு கேள்வி? உங்களிடம் மகாகவி ஷேக்ஸ்பியர் வேண்டுமா அல்லது இந்திய சாம்ராஜ்யம் வேண்டுமா என்று கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? உத்தியோகஸ்தர்கள் பதில் எப்படியெல்லாமோ வரலாம். ஆனுல் நான் சொல்லுவேன் நமக்கு இந்திய சாம்ராஜ்யம் வேண்டாம். என்றைக்காவது ஒருநாள் அது நம்மைவிட்டுப் போய் விடத்தான் செய்யும். ஆதலால் நாம் நமது ஷேக்ஸ்பீயரை விட்டுவிட முடியாது; ஷேக்ஸ்பீயர்தான் வேண்டும் என்றுதான் சொல்லுவோம்' என்று.

"அதைப் போலவே தமிழர்களாகிய நாம் கம்பனை விட்டுவிட முடியாது. அவனிடம் உள்ள பாவ லாகவங்கள், உணர்ச்சி லாகவங்களைப்பார்த்துக்கொண்டே யிருந்தால் போதும். கம்பனும் எவ்வளவோ பண்பாடுகளை யெல்லாம் நம்மிடம் சொல்லிவிடுவான். தமிழர்களாகிய நமக்குப் பண்பாடு எவ்வளவோ இருக்கின்றது. ஆயிரக்கணக்கான வருஷங்களாக அது வளர்ந்து வந்திருக்கிறது. இதை அறிந்தால்த்தான் உணர்ச்சி ஏற்படும்.

"கம்பன் கவிக்கு உரியவன். கவியரசி கவிதா தெய்வம் - ஒரு பிள்ளைக்காகத் தவம் கிடந்தாள். கடைசியாக அவள் பெற்றெடுத்த அழகான, உயர்வான குழந்தைதான் கம்பன். அவன் பாடிய பாடல்களில் ஒரு அற்புத சக்தி இருந்து கொண்டே பேசும். நல்ல வயதான வாலிபன் ஒருவன் இருக்கின்றான். அவனது பொருத்திலோ, மணிக்கட்டிலோ, குதிங்காலிலோ விரலை வைத்துப் பார்த்தால் எப்படி அவனது சுறு சுறுப்பான வாலிப நாடி பேசுகின்றதோ அதேபோல் கம்பனது கவிகளில் அவன் இதயத்தின் துடிப்பு இருக்கும். ஒரு கவியைப் பார்ப்போம்.

"அந்தக் காலத்தில் பேப்பரும் பேனாவும் ஏது? எல்லாம் ஓலை தர்பார்தானே. ஒரு ராஜ்யத்திற்குத் தூது அனுப்ப வேண்டுமானாலும்

ஒரு பனையோலைதான். மனுப்போட வேண்டுமா ஞலும் அதே பனையோலைதான். சரஸ்வதி பனை யோலைகளில்த்தான் சலசலத்துக் கொண்டிருந்தாள். கம்பன் பாடல்களும் அதிலேதான் அடங்கியிருந்தன.

"கம்பன் ஒரு கிராமத்தைநோக்கிப் பயணம் புறப்பட்டான். சென்ற இடமெல்லாம் நமது பண்டைய மூதாதையர் கொடுத்த செல்வங்கள் எல்லாவற்றையும் பிறருக்கு வழங்கிவந்தான். இந்தப் பிரயாணத்தில் அவனது 'மடக்கு' தொலைந்து போய்விட்டது. மடக்கு என்ருல் கத்தியும் எழுத்தாணியும் சேர்ந்த ஒரு ஆயுதம். நல்ல துவைச்சல் கொடுத்த எழுத்தாணி அது. இவ்விதம் துவைச்சல் கொடுத்து எழுத்தாணி செய்யும் கம்மாளர்கள் அங்கொருவரும் இங் கொருவருமாகத்தான் இருந்தார்கள். அக்காலத் தில் மடக்கு அரியவஸ்து. இதற்குச்சந்தனம் பூசி, மாலை சாத்தி வழிபடும் வழக்கம்கூட இருந்தது. கம்பன் காஞ்சீபுரம் பக்கமுள்ள மாவண்டூருக்கு வந்துசேர்ந்தான். மடக்குத் தொலைந்த விஷயத் தைக் கம்மாளன் ஒருவனிடம் சொன்ஞன் கம்பன். கம்மாளனும் அப்படியா! என்று கேட்டு, புதிதாக ஒன்றை மறுநாளே செய்து தருவதாகச் சொன்ஞன். கம்பனுக்கோ சந்தே கம். இது அவர்களுடைய குலதர்மத்துக்கே விரோதமாச்சே என்று எண்ணிஞன். 'நாளை' என்ருல் குறைந்தது ஒரு வருஷமாவது ஆக

வேண்டாமா? என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கும் போது. மறுநாளே, ஆம் மறுநாளே, மடக்கைச் செய்து கொண்டுவந்து கொடுத்துவிட்டான் கம்மாளன். நல்ல தந்தப்பிடி. பேஷான துவைச்சல். கம்பனுக்கோ பரமசந்தோஷம். ஓலையிலே எழுதிப்பார்த்தான். நன்றாக எழுதிற்று 'ரொம்ப பேஷ்!' என்று சர்டிபிக்கேட் கொடுத்தான். உத்சாகத்தில் வேறு ஒரு சர்டிபிக்கேட்டும் வந்தது. ஆமாம்! பாட்டில்த்தான்.

"கம்மாளன் பெயர் சிங்கன். மாவண்டூர் நத்தத்தில் அவன் உலைக்களம். அவன் உலைக்களத்திலே யாரெல்லாம் வந்து தவங்கிடக்கிறார்கள்? ஆழியான் - சக்கராயுதத்தையே ஏந்தும் விஷ்ணு, துஷ்டர்களை ஒழிக்கவேண்டும், அதற்குச் சக்கரம் கூர்மையாக இருக்கவேண்டாமா? அதற்காகச் சக்கரம் செய்து தரச்சொல்லி நிற்பான் ஒருபுறம். சிவன் இருக்கிறானே இவனுக்கு பகைவரை ஒழிக்கப் பெரிய சக்கரம் எல்லாம் வேண்டாம், ஒரு மொட்டை மழு ஒன்றிருந்தால்ப் போதும். 'சரி, விரைவாக ஒரு மழுவைத் தட்டிக்கொடுத்துவிடப்பா' என்று கெஞ்சிக் கொண்டே நிற்கிறான். அவனுக்கு அத்துணை அவசரம். இத்துணைக்கும் மேலே அரனுடைய மகன், இருக்கிறானே சின்ன முருகன், துடிதுடியாக நிற்கிறான். 'இவர்கள் இருவரும் கிழங்கள். குன்றினுள் இருக்கும் சூரபதுமனைத் தொலைத்து சம்

ஹாரம் செய்யவேண்டும். இதைவிடத்தான் வேறு அவசரமான காரியம் இருக்க முடியுமா? எனக்கு வேலடித்துக் கொடுத்துவிட்டு வேறு காரியம் பாரப்பா' என்று துடிக்கிறான் கோழிக் கொடியனான முருகன். அடுத்தாற்போல் வருகிறான் நான்முகன். எல்லோர் தலையிலும் அவரவர் தலையெழுத்தை எழுதுகின்ற ஜோலி அவனுக்கு. ஆஸ்பத்திரியிலே பிரசவிக்கப் போகும் குழந்தைகளின் தலையிலே யெல்லாம் அவன் எழுதித்தானே ஆகவேண்டும். குழந்தை பிறந்துவிட்டாலோ ஆஸ்பத்திரிக்குள்ளேயே நுழையவிட மாட்டாள் அங்கிருக்கும் நர்ஸ். எனவே அவனுக்கு மிக மிக அவசரம். அவன் அவசரப்படுவதில் ஆச்சர்யமில்லைதானே. 'எனக்கு எழுத்தாணியை அடித்துக்கொடப்பா கொஞ்சம் சீக்கிரமா. ஐயோ! அங்கே பிரசவ நேரம் ஆச்சே. நான் எழுதப்போக வேண்டாமா' என்றெல்லாம் வேதனைப்படுகிறான் விதி எழுத்தாளன் ஆகிய பிரமன்.

"இவ்வளவும் எங்கே? மாவண்டூர் சிங்கன் உலைக்களத்தில்தான். சும்மா வீட்டில் இருந்து கொண்டு உத்திரவு போட்டால் காரியம் பலித்து விடுமா? வீட்டிலிருந்து அண்ணுவித்தனம் பண்ணமுடியுமா? உலைக்களத்திற்குத்தான் இவர்களெல்லாம் ஓடவேண்டும். விஷ்ணுவின் செந்தாமரைக் கண்களிலும் பரமனது நெற்றிக் கண்ணி

லும், பிரமனின் எட்டுக் கண்களிலும் உலேக்களத்தின் தீப்பொறி விழவேண்டும். விழுந்து உறவாடத்தானே செய்யும். இனிப் பாட்டைப் பார்ப்போம்.

**ஆழியான் ஆழி**
**அரன் மழுத்தானென்பான்**
**கோழியான் குன்(று)**
**எறிய வேலென்பான் - ஊழியான்**
**அங்கை எழுத்தாணி**
**அருள் என்பான் மாவண்டூர்**
**சிங்கன் உலேக்களத்தே சென்று.**

என்றெல்லாம் கம்பனுல்த்தான் பாடமுடியும்.

"இது போகட்டும். நாம் சின்ன வயதில் ஆங்கிலத்தைப் படிக்கமுற்படுகிருேம். சாதாரணமாக "Twinkle Twinkle little star" லிருந்து ஷேக்ஸ்பியர் வரையிலும் படித்திருக்கின்ருேம். என்ருலும் கவிப்பொருள் யாதாயினும் நமக்குக் கிடைத்ததா? இதில் நாம் ஓட்டம்தான் பிடிப்போம். ஆனுல் கம்பன் பாட்டைப் படித்தால் அவன் நம்மோடு நேரில் பேசுகிறது மாதிரிதான் இருக்கும். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னுல் எழுதியது என்ரு தோன்றும்-தோன்றவே தோன்ருது. கம்பன் ராமாயணத்தில் எப்படிப் பேசுகிருன் என்பதைக் கவனிப்போம். எத்துணேயோ கட்டங்கள். ஆயிரக்கணக்கில்தானிருக்கும். அற்புதம் அற்புதமாகத்தான் வந்துவிடும். கம்பனே

நான் அனுபவிக்கிறவன், அந்த முறையிலே கம்ப னின் கவிதைக் கடலிலே மூழ்கி முத்துக்குளித் தால் எவ்வளவோ அருமையான முத்துக்கள் கிடைக்கும். முத்துக்களைப் பாம்பேக்கார ஷேட் டாலேயும்கூட வாங்கமுடியாது. அவ்வளவு உயர்ந்த தரமாயிருக்கும்.

"இராமாயணக் கதையைச் சொல்லவேண் டிய அவசியம் ஒன்றும் இல்லாதது பெரிய சௌகரியம். தனது தாய் ராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டாள் என்று கேட்ட மாத்திரத் திலே பரதன் வருத்தமும் துன்பமும் அடைகிறான். சித்திரகூடத்திற்கே சென்று இராமனிடம் ராஜ்யபாரத்தைக் கொடுத்துவிட எண்ணி ராமனை மகுடம் ஏற்றுக்கொள்ள மன்றாடுகிறான். ராமன் ஒப்புக்கொள்ளவில்லை. மனவருத்தத்துடனே நாட்டுக்குத் திரும்புகிறான். ஊருக்குள்ளேயே போகாமல் பாதுகைகளை வைத்து, தான் 'ரீஜெண்டாக' ராஜ்ய காரியங்களை மேற்பார்க் கிறான் பரதன். இதில் கடவுளது திருவடி நிழ லின் கீழ்த்தான் உலகமெல்லாம் அடங்கியிருக் கிற தென்ற உண்மை விளங்குகிறதல்லவா? பரதன் தெற்கு நோக்கிப் பார்த்துக்கொண்டே யிருக்கிறான். ராமன் வரவில்லை. பதினான்கு வருஷங்கள் கழிந்துவிட்டன. பஞ்சாங்கத்தைப் பார்த்து ராமன் வரவேண்டிய நாளையும் கணித்து வைத்துக்கொள்கிறான் முன்கூட்டியே. குறித்த

நாளும் வந்தது. ஆனல் ராமனைக் காணோம். கோபுரத்தில் ஏறிப்பார்க்கிருன். ராமன் வரவில்லை. தான் முன்னரே முடிவுகட்டி வைத்திருந்தபடி அக்னியை வளர்க்கச் சொல்கிருன். இனி இப்படிப்பட்ட துன்பத்தைப் பொறுக்க இயலாது என்கிருன். ராஜ்யபாரத்தை யாரிடம் ஒப்புவிப்பது? தானும் போய்விட்டால் ஊரில் மிஞ்சுபவன் சத்ருக்கனன்தானே. அவனிடம் ஒப்புவிக்க நினைக்கிருன். இராமயணக்கதையிலே சத்துருக்கனன் பேசி, நாம் கேட்டதே இல்லை இதுவரை. அவன் பேசாத் தம்பியாகத்தான் நமக்குப் படுகிறது. பேசாத் தம்பி பேசினுல் பெரும் பேச்சாகத்தானே இருக்கும். சத்துருக்கனன் வந்ததும் தனது தீர்மானத்தைக் கூறுகிருன் பரதன். தான் தீக்குளிக்கப்போவதையும் அவன் ராஜ்யபாரம் ஏற்கவேண்டியதையுமே கூறிவிடுகிருன். சத்துருக்கனனுக்கோ மிதமிஞ்சிய வருத்தம், திகைப்பு, துயரம். பேசாத் தம்பி பேசிவிட்டான். "ராமனே கானுளப் போய்விட்டான். எப்படி? தன்னை நம்பியிருந்த மனையாளான நிலமகளை வெறும் இடைவழித்தட்டிலே விட்டுவிட்டான். இதைவிடப் பாதகமான செயல் உண்டா? இவ்விதம் செய்த ராமனைப் பின் தொடர்ந்து போய்விட்டான் ஒரு தம்பி. மற்ருெரு தம்பியோ போனவர்கள் வருவார்கள் வருவார்கள் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருந்து, கடைசியில் ஏமாந்துபோய், உயி

ரையேவிடத் துணிந்துவிட்டான். ஆம். பரதனின் நொந்த உயிருக்குமே நல்லதொரு காலம் வந்து விட்டதாகத்தான் தோன்றுகிறது. அடுத்தாற் போலிருக்கிறுன் ஒரு தம்பி! ஆம் சத்துருக்கனன் தான். இவர்கள் எல்லாம் போனபின் ராஜ்யமாள ஆள் வேண்டாமா? அதற்காகத்தான் இருக் கிறுன் இவன். மானம் வெட்கம் எல்லாம் துறந்த ஒருவன் வேண்டாமா பின்னை! அரசாட்சியை அவன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அது தானே நியாயம், என்றெல்லாம் குமுறுகிறுன். தரை மகளுக்கே 'வக்காலத்து' வாங்கிச் சத்துருக் கனன் பேசுவதுபோல் இருக்கிறது அவன் பேச்சு. கம்பன் பேசுகிறுன் சத்துருக்கனன் மூலமாக. பாட்டில்த்தான்.

**கான் ஆள நிலமகளைக்**
**கைவிட்டுப் போனவனைக்**
**காத்துப் பின்பு**
**போனுனும் ஒரு தம்பி!**
**போனவர்கள் வரும் அவதி**
**போயிற் றென்னு**
**ஆனுத உயிர்விட என்(று)**
**அமைவானும் ஒருதம்பி!**
**அயலே, நாணுது**
**யானும் இவ்வரசாள்வன்**
**என்னே இவ்வரசாட்சி**
**இனிதே யம்மா!**

பேசாத் தம்பி பேசினுல், பேச்சு வெட்டொன்று துண்டு இரண்டுதான். இப்படியெல்லாம் பேசு

வான் கம்பன், பாத்திரங்கள் வாயிலாக. கம்பன் தனது ராமாயணத்தை தமிழ்நாட்டிற்கு 'உயில்' எழுதி வைத்துவிட்டான். தமிழ் மக்கள் எல்லோ ரும்தான் அவனுடைய 'வாரீசு'கள். உயிலும் நல்ல செப்புப்பட்டயம் தங்கப்பட்டயம்தான். பாவம் உணர்ச்சி லாகவம் எல்லாம் பொருந்திய பெரும் பொக்கிஷம்தான் அது. அந்தப் பொக்கிஷத்தைக் காப்பாற்றவேண்டியது, போற்றவேண்டியது தமிழர்களுடைய கடமை. இவ்வளவுதான் நான் சொல்லவேண்டியது"

பேச்சு நடந்தது மூன்று வருஷங்களுக்கு முன்னே. எல்லாம் நாற்பது நிமிஷப் பேச்சுத் தான். ஆனால் அதை இன்று நினைத்தாலும் உடல் புல்லரிக்கின்றது. முன்னூறு வருஷங்கழித்து நினைத்தாலும் உடல் சில்லிடத்தான் செய்யும். பேச்சைக் கூடுமான வரையில் டி. கே. சி பாணி யிலேதான் வெளியிட முயன்றிருக்கிறேன். முயற் சியில் வெற்றிபெறவில்லை என்பதும் எனக்குத் தெரியும். பாவத்தோடு பேசும் பேச்சை சும்மா எழுத்தில் வடித்தெடுத்துவிட முடியுமா! ஒரு வேளை 'ரிக்கார்டு' செய்திருந்தால் அனுபவிக்க லாம். அப்போதுகூடப் பேச்சின் பூரண அனுப வம் சித்திக்காது. டி. கே. சி யே நேரில் நின்று கையை ஆட்டி, கம்பீரமாகப் பேசியதைக் கேட் பதுபோல் இருக்குமா! என்ன இருந்தாலும்.

# செருகு கவிகள்

டி. கே. சி ஆங்கிலம் படித்த தமிழர். சாதாரணமாக, ஆங்கிலத்தில் இரண்டு எழுத்துப்பட்டம் ஒருவர் பெற்றுவிட்டால், அவர் நடப்பது காலால் அல்ல; தலைகீழாகத்தான். ஏதோ காணுததைக் கண்டுவிட்டவர்போல், 'ஓ! நமக்குத் தமிழில் பேசவராது; ஆங்கிலத்திலேதான் நன்ருய்ப் பேச வரும்; கிரீக் லத்தீன் பாஷையிலாலும் வெளுத்து வாங்கிவிடுவேன்' என்று கொஞ்சமும் வெட்கப்படாமல், பகிரங்கமாகவே சொல்ல ஆரம்பித்துவிடுவார். இது சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னுல் இருந்த ஆங்கிலம் கற்ற தமிழர் நிலை. இத்தகைய சூழாத்திடையே வளர்ந்தவர் டி. கே. சி. ஒன்றுக்கு இரட்டியாக ஆங்கிலத்தில் நான்கெழுத்துப் பட்டம் பெற்ருர். சட்டம் படித்தார். சென்னை சட்டசபை மெம்பர் ஆனுர். இந்துமத பரிபாலன போர்டில் கமிஷனர் உத்தியோகம் ஏற்ருர். இப்படியெல்லாம் இருந்தும்கூட தமிழ்ப்படிக்க அவர் மறந்துபோய்விடவில்லை. வள்ளுவரும், கம்பரும், முத்தொள்ளாயிரமும் திருவாசகமும் அவர் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தன.

வக்கீல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போதே அவருக்கு 'மலேரியா' சுரம் வந்தது. படுத்த படுக்கைதான் பல நாட்களாக. மலேரியா சுர

நிவிர்த்திக்கு மருந்தாயிருந்தது கொயினா மாத்திரையல்ல, அவரே பிரமாதமாகப் பிரசாரம் செய்யும் பச்சைத் தண்ணீர் ஸ்நானமும் அல்ல. கம்பராமாயணந்தான். ஆர அமர இருந்து கம்பனைப் படித்துப் படித்துச் சுவைத்தார் படுக்கையில் படுத்துக்கொண்டே. கம்பனை உண்மையாகவே அனுபவித்தார். தான் அனுபவித்ததை மற்றத் தமிழர்களுடனும் பங்கிட்டுக்கொள்ள வெளிவந்தார். மலேரியா சுரத்தைப் போக்கியது கொயினாவா? பச்சைத் தண்ணியா? அல்லது கம்பனா? என்பது ஒரு பிரச்னைதான் என்றாலும் மலேரியா சுரத்தைத் தமிழர்களாகிய நாம் வாழ்த்தவேண்டும். டி. கே. சி யைமட்டும் அந்த இளமையிலே மலேரியாசுரம் வந்து பிடிக்காதிருந்தால் அவர் சட்டப் புத்தகங்களுக்குள்ளேயே புதைந்து தமிழர்களுக்குச் செய்யவேண்டிய பணியில் முனைந்திருப்பாரா என்பது சந்தேகம். மலேரியா சுரம் வந்தாலும் வந்தது, தமிழ்நாட்டுக்கே ஒரு பெரிய ரஸிகரை அளித்துப் போய்விட்டது. இந்தக் காலத்தில் அவர் கம்பனைப் படித்து அனுபவித்த முறையை அவர் சொல்லியே நாம் தெரிந்துகொள்ளலாம்.

“முதலில் ஏதோ ஒரு படலத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். சில பாகங்கள் மிக மட்டமாயிருந்தன. சில பாகங்கள் பிரமாதமாய் இருந்தன. ஏன் இப்படிப் பெருத்த வித்தியாசம்

இருக்கிறது என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. துணிச்சலாய் ஒரு யுக்தி செய்தேன். தள்ளவேண்டியதை யெல்லாம் தள்ளி நல்ல பாகங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு ஒரு படலம் பூராவையும் முறையாய்ப் படித்தேன். கதையின் கட்டுக்கோப்பு, பாட்டுகளின் ஒழுங்கான கதி பாவம் இவைகளெல்லாம் மேலே மேலே ஆகாயத்தை நோக்கி ஏறுவதுமாதிரி இருந்தது. கம்பரது அற்புதமான கவிதாசக்தி மனதில் பட்டுவிட்டது. ஆகவே இதேமாதிரி பல படலங்களையும் தள்ளுவதைத்தள்ளி கொள்ளுவதைக் கொண்டு படித்த போது பொன்மயமானதோர் கோபுரத்தில் அநேக பாகங்கள் இடிந்தும் தகர்ந்தும் போயிற்றென்றும், அப்படி இடிந்து தகர்ந்த பாகங்களை ஏதோ ஒருவகைச் சாந்தினல் மறுபடியும் கட்ட சிலர் முயன்றிருக்கிருர்கள் என்றும் இன்னும் சிலர் புதிய புதிய சுவர்களையே எழுப்பிக் கோபுரத்தின் உண்மையான அழகையே கெடுக்கப் பார்த்திருக்கிருர்கள் என்றும் தெரியவந்தது. காரணம் பல பாடல்கள் சிதைந்தும் விட்டுப் போனதும்தான். அத்துடன் செருகி வைக்கப் பட்ட கவிகளுக்கும் குறைவில்லைதான். இப்படியாக யெல்லாம் கம்பரை இனங்கண்ட பிறகு, அவருடைய காவியத்தை நாம் கற்ருேம் என்று சொல்லமுடியாது. அவரே தனித்தமுறையில் தனித்த குரலோடு நம்மிடம் பேசுகிருர் என்ற உணர்ச்சி வந்தது.”

இப்படி யெல்லாம் அவர் கம்பனை அனுபவித்து அனுபவித்துப் படித்துத்தான், இன்று நம்மை எல்லாம் அவனுடைய கவிதையை அனுபவிக்கும்படி செய்கிறார். முப்பது முப்பத்தைந்து வருஷ அனுபவத்திற்குப்பின்புதானே அவர் கம்ப ராமாயணத்தில் செருகு கவிகள் ஏராளம் என்று கூறினார். அவைகளைத் துணிவுடனேயே அவருடைய கம்பராமாயணப் பதிப்பிலிருந்து நீக்கினார். கம்பரது ராமாயணத்தில் செருகு கவிகள் எப்படிச் செருகி வைக்கப்பட்டன? அவைகளை அறிவது எப்படி? என்றெல்லாம் எழும் கேள்விகளுக்கு டி. கே. சி நல்ல பதில் சொல்கிறார். அவருடைய கம்பராமாயண முகவுரையிலே. அதையே கொஞ்சம் பார்க்கலாம்.

"கம்பருடைய கவிகளுக்குத் தனியான ஒரு சுவை உண்டு. செய்யுளினங்கள் பூர்வமானவை தான். ஆனால் இதய பாவத்தை உட்கொண்ட செய்யுள்கள் அடியெடுத்து வைக்கும்போது தனியான கதி நயங்களைக் காண்கிறோம். அவைகளின் பாவமும் வேகமும் எங்கேயோ இருந்து வந்த மாதிரி புத்தப் புதியவையாய் இருக்கும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு தனியான ரஸம். கவிக்கு ஏதோ நவரசம் என்கிறார்கள்; ஆனால் கம்பருடைய கவிகளைப் பார்க்கும்போது ஆயிரக் கணக்கான ரஸங்கள் உண்டென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

“இப்படித் தனித்த ரஸம் வாய்ந்த, உயிர்த் தத்துவம் வாய்ந்த கவிகளாய் இருப்பதாலேயே கம்பருடைய கவிகளை இனம் கண்டுகொள்ள முடிகிறது.

“கம்பராமாயணத்தில் காண்கின்ற மாதிரி வேறு எந்த நூலிலும் காணமுடியாத வஸ்து ஒன்று உண்டு. அதுதான் செருகு கவி. கம்ப ராமாயணப் புஸ்தகம் செருகு கவி மயம் என்று சொன்னால் குற்றமில்லை. எப்படிச் செருகு கவிகள் வந்துசேர்ந்தன என்பதைப் பார்க்கலாம்.

“கம்பர் பாடிய கவிகள் அபூர்வமான பாவங் கொண்டவைகளாய்இருந்ததனால் படிப்பவர்களு டைய இதயத்தைப் பற்றிக்கொண்டன. சதாப் பாடிக்கொண்டே இருக்கும்படி தூண்டின. அதிலிருந்து ஒரு மயக்கம் உண்டாகி போலிச் செய்யுள்களையும் இயற்றும்படி சிலரைத்தூண்டி விட்டன. இப்படி இயற்றிய போலிச் செய்யுள் களைப் புஸ்தகத்திலே கட்டம் கட்டமாகப் பார்க் கலாம்.

“ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

“குடிகளைக் காப்பது பெரிய தர்மம் என்றே எண்ணுகிறான்; மிக்க சிரத்தையோடும் ஆர்வத் தோடும்தான் காத்து வந்ததாகவே சொல்கிறான். ஆனாலும் தனக்குக் கொஞ்சம் ஓய்வுவேண்டு மென்றும், ராமன் அந்த உயரிய தர்மத்தை

நடத்தவேண்டுமென்றும் சொல்கிறுன். ராஜ்ய பரிபாலனத்தை இகழ்வது என்று ஏற்பட்டுவிட்டால், ராமனே ஏற்றுக்கொள்ளும்படி பரிவுடன் சொல்லுகிற வார்த்தை பொருந்துமா? பொருந்தவே பொருந்தாது. போலிக் கவி ஒன்று வந்து, தசரதனுடைய இதமான, நளினமான பேச்சை எப்படிக் கெடுக்கிறதென்று பாருங்கள்.

கச்சையங் கடகரிக்
    கழுத்தின் கண்ணுறப்
பிச்சமும் கவிகையும்
    பெய்யும் இன்னிபுல்
நிச்சயம் அன்றெனில்
    நெடிது நான் உண்ட
எச்சிலே நுகர்வது
    இன்பம் ஆகுமோ?

அயோ—மந்திரப் படலம்

இது மாதிரிப் போலிக் கவிகளே எழுதிய ஆசாமி இந்தக் கட்டத்தில் ஏழோடு விட்டுவிட்டார். எழுபது எழுநூருகக் கயிறு விட்டிருக்கலாம். ஏதோ கருணையினுல் அப்படிச் செய்யவில்லே.

செருகு கவி வந்துவிழுவதற்கு இன்னெரு காரணம். அதுவும் விசித்திரமானதே. யோசித்துப் பார்க்கும்போது, எல்லோருக்கும் தெரிந்த கதையைக் கம்பர் ஏன்தான் கையாண்டாரோ என்று வருந்தவேண்டி யிருக்கிறது. ராமாயணக்

கதையை, வால்மீகி ஒரு விதத்தில் நடத்தினர். வேறு பலரும் வேறு வேறுவிதமாக நடத்தினர்கள். இந்தக் கதைகளை யெல்லாம் கேட்டுவந்த ஆசாமிகள் கம்பராமாயணத்தை வாசிக்க நேர்ந்தது. கம்பர் தம்முடைய பாத்திரங்களுக்கும் லட்சியங்களுக்கும் தக்கவாறாக, ஆங்காங்குக் கதையையும் போக்கையும் மாற்றியிருக்கிறார். அப்படி மாற்றியதின் காரணமாகவே பாத்திரங்களுக்குத் தனியான வேகமும், கட்டங்களுக்குத் தனியான தெளிவும் ஏற்படுகின்றன. இதையெல்லாம் கண்டாரா அந்த ஆசாமி? தம்முடைய ஏதோ கோணலான குறுகிய அளவுகோலைக் கொண்டுவந்து கம்பர் போட்ட பாதையில் வைத்தார். பொருந்தவில்லை. அப்படியே கட்டத்தை மாற்றி எதுகை மோனைகளோடு, செய்யுள்களாகக் கொட்டி நிரப்பிவிட்டார்.

"மிதிலைக் காட்சிப் படலத்தில், ராமன், லக்ஷ்மணன், விசுவாமித்திரர் மூவரும் ஜனகனது அரண்மனைக்குப் போகிறார்கள். அவர்களைச் சதானந்த முனிவர் வரவேற்கிறார். அவர்களும் உட்காருகிறார்கள். முதலில் ராமனைப் பற்றி விசுவாமித்திரர் புகழ்ந்து பேசிவிடுகிறார். அப்பாவி சதானந்தர் பேச்சுக்கு விஷயம் அகப்படாமல் திண்டாடுகிறார். ராமனைப் பார்த்தே விசுவாமித்திரரைப் பற்றி (இத்தனை நாளும் உடன் வந்த விசுவாமித்திரரைப் பற்றி!) ஒரு புராணமே

பாடித்தீர்த்து விடுகிறார். மிதிலைக் காட்சி 91 முதல் 137 வரையுள்ள புராணந்தான் அது. (பழைய பதிப்புகளின்படி) இந்த அருமையான கைங்கர்யத்தைச் செய்தவர், கம்பருடைய உண்மையான பாட்டுக்கள் அடங்கிய எத்தனை ஓலைகளைக் கிழித்தெறிந்தாரோ சொல்ல முடியாது. நமக்கு வருத்தமெல்லாம், இப்படித் தொலைந்துபோன கவிகளைப் பற்றித்தான். போலிக் கவிகளையோ சுண்டிப்பார்த்து மட்டம் என்று தள்ளிவிடலாமே!

"செருகு கவிகள் வந்து புகுவதற்கு இன்னொரு காரணம்: கம்பரது காவியத்தை ஆயிரம் வருஷத்துக்குமுன் ஓலைச்சுவடிகளில் எழுதிவைத்தார்கள். சுவடிகளை வைத்த இடம், மண் தளம், மண் சுவர் கூரை மேடு இவைகளாலாகிய சாமானியக் கட்டிடங்கள்தான். மழைக்காலத்தில் மேலே யிருந்து ஒழுகும்; கீழேயிருந்து ஈரமும் கறையானும் ஏறும். இது காரணமாக, எத்தனையோ ஏடுகள் கெட்டுப்போயிருக்க வேண்டும்.

மேலும். சுவடிக்காக அவ்வப்போது சேர்த்த ஓலைகளில்ச் சில, பதனுக்கு வராத குருத்தோலைகளாகவும் முற்றிய ஓலைகளாகவும் இருந்திருக்கக் கூடும். அந்த ஓலைகளெல்லாம் மக்கி உதிர்ந்து போயிருக்கலாம். இத்தகைய ஓலைகளின் காரணமாகவும் கறையான் ஈரம் இவைகளின் காரணமாகவும் எத்தனை எத்தனையோ கவிகளும், பட

லங்களுமே ஒழிந்துபோய்விட்டன. கம்பராமா யணத்தைப் பாடிப்பாடி, அதில் ஈடுபட்ட சிலர், தொலைந்து போனவைகளுக்குப் பதிலாக, செய் யுள்களை ஏதோ எழுதிச் சேர்த்தார்கள். இப் படிச் சேர்த்ததில் மனப்பாடமாயிருந்த சில செய் யுள்களை அங்கொன்று இங்கொன்ருக அப்படியே வைத்தும் இருக்கிருர்கள்.

எல்லாம் சேர்ந்து எப்படியோ கம்பரது உண்மையான பாடல்களைக் குறைத்துவிட்டன.

“இந்த விஷயங்களை யெல்லாம் பிற்காலத் தவர் ஒருவர் கண்டு ஒரு கதை கற்பித்தார். அது தமிழ் நாடெங்கும் வழங்குகிற கதை.

“கம்பர் ஏதோ ஒதுங்கலான ஒரு குக்கிரா மத்தில் ஒரு பிரபுவோடு தங்கியிருந்தார். மாலை யில் ஒரு புலவர் கோயிலில் கம்பராமாயணப் பிர சங்கம் செய்யப் போவதாகவும் அதற்குப் போய் வரலாம் என்றும் கம்பரிடம் சொன்ஞர். கம்ப ரும் இசைந்தார். இருவருமாகப் போஞர்கள். புலவர் வெகு தடபுடலாய்ப் பிரசங்கம் செய்தார். அநேக பாடல்களை அபாரமாக அனுபவித்துப் பாடிஞர். பிரசங்கம் முடிந்ததும், புலவருக்குக் கம்பரை அறிமுகப் படுத்திஞர் பிரபு. புலவர் ரொம்ப ரொம்ப சந்தோஷப் பட்டவராய்க் கம்ப ரைப்பார்த்து ‘அடடா, தங்கள் கவிகள் அனைத் தும் அற்புதமாய் அமைந்திருக்கின்றன. அன்னே

கலைமகளின் அருள் கொழித்த அருமைக் கவிகள் தான் அவை' என்று பாடினார். அதற்குக் கம்பர் 'தாங்கள் பாடிய பாடல்களில் ஒன்றிரண்டு என்னுடையதாகவும் இருக்கின்றன. ரொம்ப சந்தோஷம்' என்று பதில் சொன்னார்!

"இதிலிருந்து செருகு கவிகள் எவ்வளவோ கம்பராமாயண ஏட்டுக்குள் முன்னமேயேபுகுந்து விட்டன என்று தெரிகிறதல்லவா?"

இப்படிப்பட்ட செருகு கவிகளை யெல்லாம் கம்பராமாயணப் பதிப்பிலிருந்து நீக்குவதற்கு எவ்வளவோ துணிச்சல் வேண்டும். அந்தத் துணிவுடனேதான் அவைகளை நீக்கியிருக்கிறார் அவருடைய பதிப்பிலே. 'ஐயோ! ஆயிரம் ஆயிரமாக எண்ணி, நான் கட்டி வைத்திருந்த தெல்லாம் போய்விட்டதே' என்று அங்கலாய்ப்பவர்களுக்கெல்லாம் நான் ஒரே யொரு ஆறுதல் சொல்லக் கூடும். டி. கே. சி ஏன் இத்துணை பாட்டைச் செருகு கவி என்று தள்ளுகிறார்? எல்லாம் கம்பன் பெருமைக்கு ஒரு மாசு மறு ஏற்பட்டுவிடக்கூடாதென்பதற்காகத்தானே. **கவிச் சக்கரவர்த்தி கம்பன், மகாகவி கம்பன்** என்றெல்லாம் பறை சாற்றிவிட்டு அவன் காவியத்திலும் குறையில்லாமல் இருக்குமா? அவனும் மனிதன்தானே என்றெல்லாம் சொல்வதில் அர்த்தமே இல்லை யல்லவா! கம்பராமாயணத்திலிருந்து செருகு கவிகளை யெல்லாம்

நீக்கிவிட்டால் கம்பன் பாடல்களின் எண்ணிக்கை அப்படி ஒன்றும் குறைந்துவிடாது. மேலும் கம்பன் கவிதையின் பெருமை அக்கவிதையின் நயத்தில் இருக்கிறதா அல்லது அதன் எண்ணிக்கையில் இருக்கிறதா. டி. கே. சி யோடு ஒத்துப் போகிறவர்கள் அப்படியே போகட்டும். இல்லை, அவரோடு ஒத்துப்போக இஷ்டப்படாதவர்கள், டி. கே. சி பதிப்பை, ஒரு கம்பராமாயணக் கோவை என்று வைத்துக் கொள்ளலாம். அதனால் கம்பனுக்கும் நஷ்டமில்லை டி. கே. சிக்கும் நஷ்டமில்லைதானே.

## கம்ப ராமாயணத் திருத்தங்கள்

டி. கே. சி பேரிலே இன்னொரு பெரிய புகார். கம்பன் பாட்டுக்களை—கம்பராமாயணம் என்று இதுவரை வெளிவந்திருக்கும் நூல்களில் காணும் பாடல்களை—அவர் திருத்துகிறார் என்று. கம்பன் பாடல்களை அவர் திருத்துவது பெரிய அபசாரம் என்று நினைக்கிறார்கள் இவர்கள். இதற்காகக் கண்டனங்கள் எழுதுகிறார்கள்—இல்லை—பாடுகிறார்கள். ஏன்? தூற்றவும்கூட ஆரம்பித்துவிடுகிறார்கள். இந்தப் புகாருக்கு அவசியமுண்டா? என்பது கேள்வி.

இதுவரை கம்பராமாயணத்திற்கு வந்த பதிப்புக்கள் எல்லாம் பிழையில்லாத பதிப்புக்கள்

என்று யாராவது உறுதிகூற முடியுமா? கம்பன் கவிதையைத் தமிழ்நாட்டில், சென்ற சுமார் ஆயிரம் வருஷ காலமாகப் பாடியும் ஏடுகளில் எழுதியும் வந்திருக்கிறார்கள். பாடியவர்களும் எழுதியவர்களும் சிறந்த வித்வான்களாக இருந்திருக்க முடியாது. எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்றெல்லாம் நாம் அறிந்துதானிருக்கிறோம். கம்பனைப்போன்ற ஒரு மகாகவி, எக்காரணத்தையிட்டும் அபத்தமாகப் பாடியிருக்கவே முடியாது என்று டி. கே. சி போன்ற ரஸிகர்கள் எண்ணுவது இயல்பு. அது வாஸ்தவமும் கூடத்தான். ஆகவே கம்பன் உண்மையாகவே எப்படிப் பாடியிருக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ள வேண்டியது தமிழன் ஒவ்வொருவனுடைய கடமை. கவிகளில் ஒரு எழுத்தோ ஒரு சொல்லோ மாறி விழுந்துவிட்டால் அதைப்படிக்கும் ஒரு ரஸிகனுக்கு அது எவ்வளவு வேதனையைக் கொடுக்கும்? கம்பன் கவிதையைப் பாடிப் பாடி அதன் தாள லயத்திலே(Rhythm)தன்னை மறந்து இருக்கும் ஒரு பண்பட்ட உள்ளம், ஒரு தவறான பாடத்தைச் சகிக்கமுடியுமா? நல்ல கவிதையையே கேட்டும் படித்தும் அனுபவித்த டி. கே. சி க்கு எந்த இடத்திலே தாளம் தவறுகிறது, சொற்கள் மாறிவிழுகின்றன, கவி உருவமே குலைகிறது என்பது மிகவும் எளிதாகத் தெரிந்துவிடக்கூடும். அப்படிப்பட்ட பாட்டுக்கள்

அவர் காதில் விழுகின்றபோது அவர் முகம் சுழிக்கிறார்; உள்ளத்தில் வேதனைப்படுகிறார்; இதற்கு ஒரு நல்ல பாடம் இராதா என்று ஏங்குகிறார்; பாட பேதங்களை யெல்லாம் துருவித் துருவிப் பார்க்கிறார்; இவ்வளவு செய்தும் அவருக்குத் திருப்தி ஏற்படாவிட்டால்த்தான் பாட்டைத் திருத்த முனைகிறார். அப்படி அவர் திருத்தி அமைத்துவிட்டால் அந்தப் பாட்டு ஆச்சரியகரமான ரூபமே பெற்றுவிடுகிறது. பாத்திரம் பேசுகின்ற பாவம், எளிதாகத் தெரிந்துவிடுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, கவிதைக்கு முக்கியமான அம்சம் ஆகிய தாளலயம் (Rhythm) அமைந்துவிடுகிறது. அப்படித் திருத்தப்பட்ட பாட்டைப் படிக்கும்போது, நமது உள்ளத்தில் இல்லாத உணர்ச்சிகள் எல்லாம் உண்டாகிவிடுகிறது. கம்பன் இப்படித்தான் பாடியிருக்க வேண்டும். அப்படிப் பாடியிருக்க முடியாது என்று நாமும் டி. கே. சி யுடன் கூத்தாடவே ஆரம்பித்துவிடுகிறோம்.

பார்க்கலாம் ஒன்றிரண்டு திருத்தங்களை. ஆம்! கம்பராமாயணத்தில்த்தான்.

பாலகாண்டம் குலமுறை கிளத்து படலத்தில் கடைசிப்பாட்டு பழய கம்பராமாயணப் பதிப்புகளில்.

கோதமன்றன் பன்னிக்கு
முன்னை யுருக் கொடுத்ததிவன்
போது நின்ற தெனப்பொலிந்த
பொலன் கழற்கவிதை பொடிகண்டாய்
காதலென்றனுயிர் மேலும்
இக் கரியோன் பாலுண்டால்
ஈதிவன்றன் வரலாறும்
புயவலியும் என உரைத்தான்

என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. சந்தர்ப்பம் எல்லோருக்கும் தெரியும். விஸ்வாமித்திரன் ராமனையும் லக்ஷ்மணனையும் ஜனகனிடம் அறிமுகப்படுத்துகிருன். 'ராமன் பேரில், என் உயிர்மேல் வைத்திருக்கும் காதலைவிட அதிகமான காதலை வைத்திருக்கிறேன் பார்த்துக்கொள்' என்று விஸ்வாமித்திரன் தடபுடலாகத் தன்னையே தெரிவித்துக்கொள்வதாக மூன்ருவது அடி அமைந்திருக்கிறது. இப்படியெல்லாம், ராமனை அறிமுகப்படுத்தும் வாயிலாகத் தன் அளப்பரிய அன்பையே விளம்பரப்படுத்திக்கொள்கிருன் விஸ்வாமித்திரன் என்று சொல்வதுசரியா? மேலும் "காதலென்றன் உயிர்மேலும் இக்கரியோன் பாலுண்டால்' என்னும்போது 'ரிதும்' நம் காதுகளில் சரியாகவா ஒலிக்கிறது. தாளலயம் எங்கேயோ தவறுகிறது போலல்லவா இருக்கிறது. அந்த மூன்ருவது அடியைத்தான் அப்படியே மாற்றுகிருர் டி. கே. சி. விஸ்வாமித்திரன் ஜனகனைப்பார்த்து நேரே அழைத்துப் பேசுவதாக

அமைத்துவிடுகிறார். "வேதம் என்ற உருவுடையாய், மிதிலையர் தம் உயிர் அனையாய்! என்று ஜனகனை விஸ்வாமித்திரன் அழைப்பதில்த்தான் என்ன பொருத்தம்? தாளலயம்தான் என்ன என்ன ஜாலம் எல்லாம் செய்கிறது இந்த அடியில்

கோதமன் தன் பன்னிக்(கு)
  முன்னை உருக் கொடுத்த(து), இவன்
போது வென்ற தெனப் பொலிந்த
  பொலன் கழற்கால்ப் பொடிகண்டாய்!
வேதம் என்ற உருவுடையாய்,
  மிதிலையர் தம் உயிர் அனையாய்!
ஈ(து) இவன்தன் வரலாறும்
  புயவலியும் என உரைத்தான்

என்பதுதான் டி. கே. சி பதிப்பிலுள்ள பாட்டின் முழு உருவம். இப்போது பாடிப்பாருங்கள். பாட்டு எப்படி இருக்கிறது என்று. எது கம்பன் பாட்டாயிருக்க முடியும் என்று தீர்ப்புச்சொல்லுங்கள் நன்றாய்ப் பாடிப்பார்த்த பின்னால்.

ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறது என்பதை அறிந்த மக்கள் எப்படி இருக்கிறார்கள்? அதை வர்ணிக்கிறார் கம்பர்.

மாதர்கள் கற்பின் மிக்கார்
  கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வசிட்டன் ஒத்தார்
  வேறுள மகளிர் எல்லாம்

*சீதையை ஒத்தார் அன்னாள்*
*திருவினை ஒத்தாள்; அவ்வூர்*
*சாதுகை மாந்தர் எல்லாம்*
*தயரதன் தன்னை ஒத்தார்*

என்பது பழையபிரதிகளில் உள்ள பாட்டு. ‘மாதர்கள் கற்பின் மிக்கார்’ என்றவர் பின்னால் ‘வேறுள மகளிர் எல்லாம்’ என்று சொன்னால் எந்த மகளிரைக் குறிக்கிறார் கம்பர் என்ற கேள்வி எழுவது இயற்கை. அயோத்தி நகரத்தில் உள்ள பெண்களை ‘கற்புடைய மாதர்’ ‘மற்ற மாதர்’ என்று பாகுபாடு செய்வார். இது எவ்வளவு அசம்பாவிதம்? இதை அறிந்துதான் டி. கே. சி

மாதர்கள் வயதின் மிக்கார்
*கோசலை மனத்தை ஒத்தார்;*
*வேதியர் வசிட்டன் ஒத்தார்;*
*வேறுள மகளிர் எல்லாம்*
*சீதையை ஒத்தார்; அன்னாள்*
*திருவினை ஒத்தாள்; அவ்வூர்*
*சாதன மாந்தர் எல்லாம்*
*தயரதன் தன்னை ஒத்தார்.*

என்று திருத்துகிறார். அடே! பெரிய அபவாதத்தை யல்லவா எவ்வளவோ லேசாக மாற்றிவிடுகிறார் டி. கே. சி. இந்தத் திருத்தத்திற்கா ஆக்ஷேபம்? இதையா திருத்தம் என்று சொல்வது? கம்பர் எப்படிப் பாடியிருப்பார், அதை எப்படித் தப்பும் தவறுமாய்ப் பின்னால் எழுதியிருப்பார்கள் என்று இப்போ தல்லவா தெரிகிறது.

மேலும் ராமனைக் காலைக் கட்டளை இடுகிறாள் கைகேயி. 'அது அரசன் ஆணை' என்று வேறே சொல்லிக்கொள்ளுகிறாள் அவள். 'தனக்குப் பட்டம்' என்று தழைக்கும் உள்ளத்தோடு வரும் ராமன் எப்படி இக் கட்டளையை ஏற்றுக் கொள்கிறான்? அவன் முகமாகிய தாமரை கட்டளையைப் பெறுவதற்கு முன்னால் எப்படி இருந்தது? கட்டளையைப் பெற்றபின் எப்படி இருக்கிறது? என்று தெரிவிக்க விரும்புகிறார் கம்பர். இதைத்தான்,

இப்பொழு தெம்மனோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத் திராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பு அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்றதம்மா

என்ற பாட்டாகப் பழய பிரதிகளில் பார்க்கிறோம். இந்தப் பாட்டில் சின்னத் திருத்தங்கள் சில செய்கிறார் டி. கே. சி.

இப்பொழு(து) எம்மனோரால்
இயம்புதற்(கு) எளிதோ யார்க்கும்
செப்பரும் குணத் திராமன்
திருமுகச் செவ்வி நோக்கி
ஒப்பதே முன்பு, மற்(று) அவ்
வாசகம் உணர்ந்த பின்னர்
அப்பொழு(து) அலர்ந்த செந்தா-
மரையினை வென்ற(து) அம்மா!

இதுதான் டி. கே. சி திருத்தியபடி உள்ளபாட்டு. 'முன்பு பின்பு' என்பதற்கெல்லாம் எப்படி எப்படி எல்லாமோ வின்னியாசமாக அர்த்தம் சொல்வதை எல்லாம் கேட்டுக் காது புளித்த நமக்கு, இந்தத் திருத்தங்கள் எவ்வளவோ இனிமையாக இருக்கின்றன. பொருளேயும் எளிதாக அருமையாக விளக்குகின்றதல்லவா? இப்படித் தான் அவர் திருத்தங்கள் செய்கிருர். இல்லே. கம்பர் எப்படி எழுதியிருப்பார் என்பதைக் கண்டு பிடிக்கிருர்.

"சாதாரண அறிவிற்குப் பொருத்தமான திருத்தங்களேயுமா செய்யக்கூடாது? இத்தனே வருஷங்களாகத் தனித்தும் பல பேர்களேக் கூட்டி வைத்தும் திரும்பத் திரும்பக் கம்பனேப் படித்த நான் அக்கிரமமாக ஏதேனும் திருத்தம் செய்யத் துணிவேனு? எனக்கு இலக்கிய மனச்சாட்சி (Literary Conscience) கிடையாதா?" என்று டி. கே. சி நம்மிடம் கேட்கும் போது நாம் வாயடைத்துப் போகிறும். 'பாட்டைத் திருத்து கிருர்! பாட்டைத் திருத்துகிருர்!' என்று புகார் சொல்லும் அன்பர்களுக்கு அவர் தன் பண் பட்ட உள்ளத்தை அப்படியே திறந்து காட்டு கிருர். அப்படி யிருந்தும் சிலருக்கு அவரிடம் ஏன் குரோதம் என்றுதான் தெரியவில்லே.

இந்த இடத்தில், புகார் சொல்வதோடமை யாது டி. கே. சி மனது புண்படும்படி எழுதியும்

பேசியும் வருகிற நண்பர்களைப் பார்த்து ராஜாஜி சொல்வதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா?

* "கொஞ்சநாளாக ஸ்ரீ டி. கே. சிதம்பர நாத முதலியாரைச் சிலர் வெகு கோபமாகத் தாக்கி வருகிறார்கள் என்று தெரிகிறது. தமிழ் என்றால் என்ன, கவிதை என்றால் என்ன என்பதை எனக்கு ஓரளவு புகட்டிய ஆசிரியரிடத்தில் எனக்கு வரம்பற்ற அன்பும் பட்சபாதமும் இருக்கத்தான் செய்யும். ஆகையால் நான் அவருக்காகப் பரிந்து பேசினால் அதற்கு ஒரு வேளை மதிப்பு இராது. ஆயினும் என் பேச்சல்ல, - நானே ஒரு அத்தாட்சி யாவேன் - டி. கே. சி யின் தமிழ்ப் பணிக்கும், பெருமைக்கும், பேச்சைவிடப் பொருட்சான்றே வலியதாகும். என்னைப்போன்ற ஒருவனையும்கூடத் தமிழாசை கொள்ளச் செய்தவர் டி. கே. சி தான். இதை இப்போது பலர் அறியச் சொல்கிறேன்; உபசாரமல்ல - உண்மை.

"என்னைத் தள்ளுங்கள்; - தமிழ்நாட்டில் தமிழ்ப் பணிக்கு நல்ல வீரச்சேனை சேருமாறு இக்காலத்தில் ஊக்கம் உண்டாக்கியவர் டி.கே.சி என்றே சொல்லுவேன். பலர் பல அரிய பணிகள் செய்திருக்கிறார்கள். செய்தும் வருகிறார்கள். ஆனால் டி. கே. சி யின் தமிழ்ப்பணி ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அதை வேறு யாரும் செய்த

* 'கல்கி'யில் பிரசுரிக்கப்பட்டது.

தில்லை: இதயதத்துவமும் கவிதையின் தனிப் பண்பும் அறிந்து பெரும்பணி செய்பவர் டி.கே.சி.

"மகனைப் பறிகொடுத்ததையும் உடல் நோயையும் ஆத்ம சக்தியைக்கொண்டு மறந்து துக்கங்களுக்கும் துன்பங்களுக்கும் இடையில் யோகியைப்போல் நின்று தமிழ்ப்பணி செய்து வருகிறார். அவர் மனது புண்படச்செய்வது வீரிய மல்ல; தமிழ்ப் பணியுமல்ல, சுத்த அறியாமை.

"எந்த அபிப்பிராய பேதத்தைக் கொண்டு இப்போது தாக்கப்படுகிறார் டி. கே. சி? கம்பர் எவ்விதக் குற்றமும் குறையுமில்லாமல் விளங்கும் தெய்வீக அறிவும் உணர்ச்சியும் சிருஷ்டியும் சக்தியும் கொண்ட ஒரு கவியாவார். ஆகையால் அவருக்கு எது அழகாகத் தோன்ற வில்லையோ, எது பூரண ஒளியின்றி மங்கிவிளங்கு கின்றதோ அதை அவர் கம்பர் எழுத்தல்ல என்று நீக்கிவிடுகிறார். அவசரத்தில் அல்ல, நிதானமாக ஆராய்ந்தே இவ்வாறு செய்யத் துணிகிறார். ஏட் டில் பக்திவைக்காமல், தான் கண்ட கம்பரின் மேல் அபார பக்திவைத்துப் பாட்டுக்களைத் திரட் டுகிறார். இது இஷ்டதேவதை பூசனைக்கிரமம் 'அவரவர் தம தம தறி தறி வகை வகை' என்று ஆழ்வார் பாடிய முறையில் பக்தியுடன் ஆராதிப் பவர் ஒருவரை யாரும் தாக்குதல் கூடாது.

"அச்சியந்திரமும் காகித ஏடுகளும் இல்லாத பழயகாலத்தில் ஒரு பெரிய காவியம் எவ்வாறு

மக்களிடை வழங்கி வந்தது என்பதை இந்தக் காலத்தில் கற்பனை செய்து கொள்வது கஷ்டம். கற்பனை செய்து சாந்தமாக ஆய்பவர்களுக்கு டி. கே. சி சொல்லும் அபிப்பிராயங்களில் ஏதும் வியப்புத் தோன்ருது.

"அபிப்பிராய பேதமிருந்தாலும் அது எவ்வளவில் நிற்கும்? டி. கே. சி 'இந்தப் பாட்டு அல்லது இந்த வரி அழகில் குறைந்திருக்கிறது. இதை நம் கம்பர் எழுதியிருக்கமாட்டார்' என்கிருர். மற்றவர்கள் 'இதையும் கம்பர் எழுதினுர் என்றே எண்ண முடியும்; எப்போதும் ஒரே உன்னதப்படியில் நிற்க யாராலும் முடியுமா? சில சமயம் கம்பர் இத்தகைய பாடலும் பாடினுர் என்று வைத்துக்கொள்வதில் கம்பரின் மகிமை குறையாது, பல நாட்களாக நாம் படித்துவந்த ஏட்டை அவமதிக்க வேண்டியதில்லை' என்று வாதிக்கலாம்.

"இவ்வளவேதான். இதில் பெரிய ஆபத்தான வித்தியாசம் ஒன்றும் இல்லை. டி. கே. சியின் பணிக்கு இடைஞ்சல் செய்யாமலும் தமிழ் நாட்டில் அவர்மேல் அபார அன்பும் பக்தியும் கொண்டிருக்கும் கணக்கற்ற தமிழன்பர்களின் மனதைப் புண்படுத்தாமலும் வேண்டுமானுல் விவாதத்தை நடத்தலாம்.

"டி. கே. சி வெளியிட்ட கம்பரை, செருகு கவிகள் நீங்கிய உண்மைக் கம்பராக வைத்துக்

சொல்வோர் அவ்வாறு வைத்துக்கொள்ளட்டும். 'செருகு என்பதே கிடையாது, டி. கே. சி சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது, ஓலை யேடுகள் ஒருவாறு அச்சிடப்பட்ட பிறகு அதைப்பற்றி விவாதமே கூடாது' என்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள் டி. கே. சி யின் வெளியீடுகள் ஒருவித காவிய சங்கிரகம் என்றே வைத்துக்கொள்ளலாம். அவ்வாறு வைத்துக்கொண்டு, விட்டுப் போன பாடல்கள் கம்பருடையதா அல்லவா என்கிற கேள்வியையே பெரிய கேள்வியாகச் செய்துவிடாமல் டி. கே. சி பொறுக்கித் திருத்தி வெளியிட்டிருப்பதை மட்டுமே எல்லாரும் படித்தால் தற்காலத் தமிழ் மக்களுக்கு அதுவே போதுமல்லவா. அவகாசமும் ஆற்றலும் உள்ள புலவர்கள் முழுக் கம்ப ராமாயணத்தையும் ஏடுகளில் உள்ளபடி படித்துத் தெளிவடைவதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லையே.

"முக்கியமாக ஒரு மகான், சிறந்த பணியாற்றுகிறவர் - அவருடைய மனது புண்படத் தாக்குதல் கூடாது. புதிதாக வெளிவந்திருக்கும் முத்தொள்ளாயிரப் பதிப்பையும் அதில் டி. கே. சி அவர்களால் வரையப்பட்டிருக்கும் கண்ணைத் திறந்து காட்டும் அற்புதமான விளக்கத்தையும் படித்து அனுபவித்தவர்கள் என் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரிப்பார்கள்.

"பொருள் என்ற உயிருக்குச் சொற்கள் என்ற தாதுக்களைக்கொண்டு தகுந்த ஒரு உடலை

யாத்து, உயிரும் உடலும் கூடி, உணர்ச்சியும் அழகும் பொருந்திய உருவத்தோடு நிற்பது கவிதை. இத்தகைய சிருஷ்டியை - நன்னூலார் கூறுகிறபடி - 'உணர்வினில் வல்லோரே' மக்களுக்கு ஆக்கித்தர முடியும். உணர்வு என்றால் அறிவு மட்டுமல்ல; இதயத் துடிப்புகளும் கலந்த ஜீவ இயக்கம்.

"கவிதை என்றால் என்ன என்பதை வெகு சிலரே உணர்வார்கள். தாம் உணர்ந்ததைப் பிறரும் உணருமாறு விளக்கும் ஆற்றல் படைத்தவர்கள் அதிலும் குறைந்தவர்கள். ஆற்றல் படைத்தவர்களாயினும் விடா முயற்சியுடன் சொந்த துக்கங்களையும் நோய்களையும் கவனியாமல் பணி செய்பவர்கள் மிக மிகச் சிலர். அவர்களில் ஒருவர் டி. கே. சி; அவருடைய பணியும் புகழும் குறைவின்றி ஓங்கவேண்டும்."

## டி. கே. சி திருத்தங்கள்—மற்றவை

கம்பன் பாடல்களைத் திருத்துவது இருக்கட்டும். சாதாரணமாக ஒரு தனிப்பாடலைக் கூட அவர் திருத்தி அமைத்தால் அதற்கு ஒரு தனி உருவமே ஏற்பட்டுவிடுகிறது. உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளைச் சப்த சித்திரத்திலே முறையாக அமைத்துக் காட்டுவதுதான் உண்மையான கவிதை என்றால், அத்தகைய உண்மையான கவி ஒன்றில், சொற்கள் சிதைந்து உருமாறிக்கிடந்தால் அதைத் திருத்தி அமைத்துப் பார்ப்பது நல்லதே அல்லவா?

ஒருமனிதன் அவசரம் அவசரமாக மச்சுப்படி இறங்கி வரும்போது தடுமாறி அவன் கால் சுளுக்கிக்கொள்கிறது என்று வைத்துக்கொள்வோம். காலில் ஏதோ ஒரு தசை இடம் பெயர்ந்து மற்றொரு நரம்புடன் சிக்கிக்கொள்கிறது என்றால் அதனால் ஏற்படும் வேதனைதான் எவ்வளவு? அவனுக்கு ஏற்படும் வேதனை இருக்கட்டும். அப்படிச் சுளுக்கிய காலோடு அவன் நொண்டி நொண்டி நடப்பதுதான் எவ்வளவு விகாரமாகப் படும்? இந்தச் சுளுக்கைச் சுளுக்கெடுத்து நல்ல வண்ணமாக அவன் காலை நிமிரும்படி செய்கின்ற ஒரு டாக்டர் வேலை எவ்வளவு மகத்தானது. அதைக்

குறைகூற முடியுமா? டி. கே. சி கவிதைகளில் காணும் சுளுக்கை எடுப்பதில் ஒரு பெரிய சமர்த்தர். நல்ல டாக்டரும் கூட.

சில உதாரணங்களைப் பார்க்கலாம். 'கருப் பூரம் நாறுமோ' என்று தொடங்கும் ஆண்டாள் பாசுரம் நல்லதொரு பாட்டு. அந்தப் பாட்டு 'திவ் யப் பிரபந்தப் புத்தகத்தில்'

*கருப்பூரம் நாறுமோ? கமலப் பூ நாறுமோ?*
*திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?*
*மருப் பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்*
*விருப்புற்றுக் கேட்கின்றேன், சொல்லாழி வெண்சங்கே!*

என்று அச்சாகி இருக்கிறது. இதில் வருகிற 'நாற்றம்' நன்றாயில்லைதானே? அதைத் திருத்தி அமைத்துவிடுகிறார் டி. கே. சி.

*கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ*
*திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்(து) இருக்குமோ!*
*மருப்பொசித்த மாதவன்தன் வாயமுதும் வாசமும்*
*விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண் சங்கே!!*

திருத்திய பாட்டின் உருவம் இது. நாட்டியக் கலையில் பிரபலம் பெற்றுள்ள ஸ்ரீமதி பாலசரஸ்வதி உள்ளிட்ட எல்லா ரஸிகர்களும் இந்தப் பாடத்

தையே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பாட்டின் பாவம் சிதையாத முறையில் இந்தப் பாட்டு திருத்தப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச நாள் சென்றால் இந்தப் பாடமே நிலைத்துவிடும். ஏன்? நிலைக்கத்தானே வேண்டும்.

நந்திக்கலம்பகத்தில் ஒரு பாட்டைப் பார்க்கலாம்.

வாரூரும் மென்முலை, வார்த்தைகண்
டூரும் மதிமுகத்தில்
வேரூரும் மேனி வியன் தளிரூரும்
விஜயனுக்குத்
தேரூரும் மானந்தி தேசபண்டாரி
தெள்ளாறை வெற்பில்
காரூர் குழலிக்குக் காதளவூரும்
கடைக்கண்களே

பாட்டின் முந்தைய உருவம் இது.

வாரூரும் வெம்முலை தேனூரும்
செவ்விதழ் வாள்முகத்தில்
வேரூரும், மேனி தளிரூரும்
போரில் விஜயனுக்காத்
தேரூரும் மானந்தி தேசபண்டாரி
தெள்ளாறை வெற்பில்
காரூர் குழலிக்குக் காதளவூரும்
கடைக் கண்களே!

திருத்தப்பட்ட பாட்டின் உருவம் இது. எது சுவையுடையது என்று மேலும் மேலும் சொல்

லவா வேண்டும். பாடிப்பார்த்தால் தானே தெரிந்துவிடுகிறது உண்மை.

இன்னும், ஒரு தனிப்பாட்டை டி. கே. சி திருத்தியமைத்ததைப்பற்றி மட்டும் கூறி அவர் திருத்தம் செய்யும் முறையை விளக்க விரும்பு கிறேன். எங்கள் வட்டத்தொட்டி அங்கத்தின ரில் ஒருவர் ஸ்ரீ ஆண்டியப்ப பிள்ளை. பழுத்த கிழம். நல்ல பாட்டு ஒன்று எங்காவது தப்பித் தவறிக் கிடைத்தால் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற சிந்தனையோடு பாட்டை வட் டத் தொட்டியில் சமர்ப்பித்து விடுவார். எல்லோ ரும் அவர் தமிழ் ஆர்வத்தைக்கண்டு அதிசயித்து நிற்பார்கள். இவர் ஒருநாள் ஒருபாட்டைக் கொண்டுவந்தார்.

**எய்யவந்த காமா நீ இங்குவர வேண்டாம் காண்**
**உய்யவந்தா னோ(டு) உறவானேன் - பையவே**
**தேரைவிடு, பூவைமுடி, தின்றுவிடு, வெண்கரும்பை**
**மீனையொரு காசாக வில்**

என்பதுதான் பாட்டு. இது ஒரு பழம்பாட்டு; பாடியவர் பெயர் தெரியாது. இதை டி. கே. சி தனித்திருக்கும்போது சமர்ப்பித்தார் ஸ்ரீ ஆண் டியப்ப பிள்ளை. டி. கே. சி முதலில் படித்துப் பார்த்தார். பின்னால் கொஞ்சம் பாடிப் பார்த் தார். பாட்டு நன்றாயிருக்கிறதே என்றார். சரி. என்று ஒரு 'பிளாக் போர்டை' எடுத்து பாட்டை அதில் எழுதினார். பின்னால் வந்து

சேர்ந்த ஒன்றிரண்டு பேர்களுக்குப் பாடிக்காட்டினார். 'பாட்டின் முதல் இரண்டடி சரியாய்த் தானிருக்கிறது; கடைசி இரண்டடியும் என்னவோபோல் இருக்கிறதே; ஏதோ தட்டுவது போல் இருக்கிறதே: அது என்ன என்றுதான் சொல்லத்தெரியவில்லை' என்றார் வந்தவரில் ஒருவர். ஆண்டியப்ப பிள்ளையும் 'ஆம்! பின் இரண்டடி என்னவோ மாதிரிதான் இருக்கிறது. எல்லாம் தாங்கள் பாடிக்காட்டியபின் அல்லவா தெரிகிறது' என்று ஒத்துக்கொண்டார். பார்த்தார் டி. கே. சி. கொஞ்சநேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பாட்டிற்கு வயித்தியம் பார்க்க ஆரம்பித்து விட்டார். கொஞ்ச நேரத்திலே பாட்டிலே யுள்ள சுளுக்கு நிமிர்ந்துவிட்டது. பாட்டு புதிய உருவம் பெற்றுவிட்டது. பிளாக் போர்டைத்திருப்பினார். புதிய உருவத்தை எழுதினார் அதில்.

எய்யவந்த காமா! இனியுனக்கு வேலையிங்கென்?
உய்யவந்தான் தன்னோடு றவானேன் - பையவே
தேரைவிட்டு, மென்கரும்பைத் தின்றுவிட்டுச்
போரைவிட்டுப் பூமுடித்துப் போ. [செய்யவந்த

என்பதுதான் டி. கே. சி யால் திருத்தப்பட்ட பாட்டின் உருவம். மாலையில் வட்டத்தொட்டி கூடியது. பாட்டும் அதன் திருத்தமும் சபையில் அரங்கேற்றப்பட்டது. பின் இரண்டடியின் முன்னைய உருவத்தையும் பிந்திய உருவத்தையும் பார்க்கவேண்டும். கொஞ்சம் பாடியும் பார்க்க வேண்டும். அப்போது தெரியும் உண்மை. டி. கே. சி செய்யும் டாக்டர் வேலை.

# டி. கே. சி ஒரு கலாரஸிகர்

'ஆயிரம் வருஷங்களுக்கு ஒருதரம்தான் உலகத்தில் ஒரு மகாகவி தோன்றுகிறுன்' என்பார் ஒரு ஆங்கில ஆசிரியர். அது உண்மைதான் என்று நமக்கும் நன்ருய்த் தெரிகிறது. தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டில் கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்குப்பின் ஒரு மகாகவி இதுவரை தோன்றவே இல்லையல்லவா? ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு தரம்தான் ஒரு மகாகவி தோன்றுகிருன் என்ருல் இரண்டாயிரம் வருஷங்களுக்கு ஒருமுறைதான் டி. கே. சி போன்ற ஒரு மகா ரஸிகர் தோன்றுகிருர் என்று லேசாகச் சொல்லிவிடலாம். அவர் ஒரு வர ரஸிகர். கவிதைச் சுவையையும் கலைச் சுவையையும் அவர் அனுபவிக்கிற அளவு வேறு யாரும் அனுபவித்துவிட முடியாது. சாதாரணமாகக் கவிதையையோ அல்லது கலா நிலையங்களையோ தம் உள்ளுக்குள்ளேயே ரஸித்துத் தாம் மட்டும் அனுபவித்துக்கொண் டிருக்கும் ரஸிகர்கள் பலர் இருக்கலாம். ஆனுல் கவிதைச் சுவையைத் தாம் அனுபவிப்பதோடு மட்டுமல்லாமல் தம்மைச் சூழ்ந்துள்ள பிறரையும் அனுபவிக்கும்படி செய்யும்சமர்த்தர்கள் டி.கே.சி யைப்போல ஒருவருமே இல்லை. நாம் பல பண்டிதர்கள் மூலம் கவிச் சுவையை அறியலாம், கவிதை நயங்களை அவர்கள்

எடுத்துக் கூறும்போது அவர்களுடைய கல்வித் திறமையைக் கண்டு அப்படியே அதிசயிக்கலாம். ஆனால் கவியின் ஹிருதயத்தை அறிவது அவர்களுக்கும் சாத்தியமாயில்லை. நமக்குக் காட்டுவதும் அவர்களுக்கு இயலாத காரியமாகவே போய் விடுகிறது. ஆனால் இவர்களுக்கெல்லாம் மாறாக டி.கே.சி கவிச்சுவையைப் பிறரை அனுபவிக்கும்படி செய்யும்போது தன்னுடைய 'கெட்டிக் காரத்தனம்' ஒன்றையும் காட்டுவதில்லை. எப்படியோ கவியின் உள்ளத்தை அறியும்படி மட்டும் செய்து விடுகிறார். எல்லோராலும் சாதாரணமாகச் செய்யமுடியாத காரியம் ஒன்றை அவர் எளிதாகச் செய்துவிடுகிறதினால்த்தான் அவரை வர ரஸிகர் என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.

இந்த வர ரஸிகர் கவிதையை மட்டுமா அனுபவிக்கிறார்? இல்லை. மற்ற கலைகளையும் அனுபவிக்கிறார். 'தமிழ்நாட்டுக்கு நிலையாய் உள்ள செல்வங்களாகப் பல கோவில்களும் கோபுரங்களும் இருக்கின்றன. அவைகள் தங்களிடம் பொதிந்து வைத்துள்ள பண்பாடு மிக அபூர்வமானது. ஆயிரக் கணக்கான வருஷங்களாக வந்த பண்பாடுகள் கல்லுகளுக்குள்ளே ஊறிக் கிடக்கின்றன. நம்முடைய கடமை அந்தப் பண்பாட்டுச் செல்வங்களை (Culture) அந்தக் கல்லுகளுக்குள்ளிருந்து பிழிந்தெடுத்துப் பருகவேண்டியதுதான். செல்லரித்த மத சம்பிரதாயங்களின் சிறைகளாகக்

கோயில்களை நாம் மதியாமல் கலைச் செல்வப் பொக்கிஷமாகக் கண்டு அனுபவிக்க வேண்டும்' என்று அவர் சொல்லும்போது அவருடைய கலா ரஸனை எவ்வளவினது என்று நாம் தெரிந்து கொள்கிறோம் அல்லவா?

டி. கே. சி யிடம் பேசுபவர் பலர் அவர் அடிக்கடி 'Form-இலக்கிய உருவம்' என்ற வார்த்தையை உபயோகிப்பதைக் கேட்டிருப்பார்கள். கவிதைக்கு வேண்டிய முக்கியமான அம்சங்களில் ஒன்று உருவம் (Form) என்று குறிப்பிட்டு அவர் பல முறை விளக்கினாலும்கூட அதன் விளக்கம் பலருக்கும் குப்தமாகவேதான் இருந்தது. இதைப் பற்றி அவருடைய கருத்துக்களை அவருடைய வார்த்தைகளிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

* "உண்மை எப்போதுமே பிரயோஜனம் தான். உண்மை யல்லாதது பிரயோஜனமே இல்லை. ஒருவருடைய இதயத்தில் உண்டாகிற உண்மையைக் காண்பதில் நமக்கு – மனுஷ்யனுக்கு - ஓர் அபார ஆசை. அதைத் தெரிந்த மாத்திரத்திலேயே இன்பம் உண்டாகிறது. கவி, சித்திரம், இசை முதலிய கலைகளில் நாம் காண்பது என்ன? கலைஞனது மனத்தில் நிகழும் உண்மையான உணர்ச்சியை வெளியிடக் கலைஞன்

---

* அற்புத ரஸம் என்ற புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டது.

ஆத்திரம் கொள்ளுகிறான்; பாடுபடுகிறான். சில வேளை வெற்றியும் பெற்றுவிடுகிறான். அவன் உணர்ந்த உணர்ச்சி, வெளியிடக்கொண்ட ஆத்திரம், பாடுபட்ட சிரமம், அடைந்த வெற்றி இவைகளை நாமும் ஒரு கவியிலோ, சித்திரத்திலோ, இசையிலோ, உணர்ந்து விடுகிறோம். இந்த உணர்ச்சி ஒரு உருவமே பெற்றுவிடுகிறது. இது ஒன்றுதான் கலைஞனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம். இந்த அனுபவ ஒற்றுமையை - அந்த அனுபவ ஒற்றுமையால் ஏற்படும் இலக்கிய உருவத்தைத்தவிர்த்து வேறு விஷயங்களைக் கருதுவது என்றால் ஒரு பெண்ணை விரும்பும் இளைஞன் ஒருவன் அவளுடைய அழகிய உருவத்தில் ஈடுபடாதபடி தசைமாமிசங்களில் (நரமாமிச பட்சணியைப்போல) ஈடுபட்ட கணக்குத்தான்

ஃ ஃ ஃ

"கவிக்கு உருவம் அமையவேண்டும். அமைந்துவிட்டால் பிரமாதமான காரியந்தான். செய்யுளிலே பாவமான உருவம் அமைந்து வர வேணும். சும்மா எதுகை மோனை வைத்துக் கட்டிவிட்டால் கவி ஆகிவிடும் என்று எண்ணி விடக்கூடாது. ரோஜா புஷ்பத்தை இதழ்வேறு, காம்பு வேறாகப் பிய்த்து உரலில் போட்டு இடித்து எடுத்துவந்து 'இந்தாருங்கள் ரோஜாப்பூ' என்று சொன்னால் நமக்கு எப்படி இருக்கும்?- உருவம் என்றால் உணர்ச்சியின் சாயல் வரவேண்டும். விஷயத்தைச் சொன்னால் காணாது. விஷ

யம் அல்ல முக்கியம். உணர்ச்சியும் அல்ல. விஷயமும் உணர்ச்சியும் உருவத்துக்காக உபயோகப் படும் காரியங்கள். உரம், மண், தண்ணீர் எல்லாம் எப்படி புஷ்பத்துக்காக உதவுகின்றனவோ அதேமாதிரி விஷயம், உணர்ச்சி, சிருஷ்டி செய்வதில் ஏற்படும் உத்சாகம் எல்லாம் சேர்ந்து உருவத்தை உண்டாக்கித் தந்தன என்றுதான் சொல்லவேண்டும்" என்றெல்லாம் நல்ல பீடிகை போட்டு, அவர் கவியிலுள்ள உருவத்தைப் பாடிப் பாடி விளக்கும்போது நமக்கு அவர் 'Form' என்று அடிக்கடி வற்புறுத்தும் விஷயம் விளங்கி விடுகிறது.

ஆனந்தமான அதிசயத்தை, அற்புத ரஸத்தை விளக்குவதற்கு ஒரு கவியை எடுத்துக் கொள்வார். எல்லாம் சடகோபர் அந்தாதிப் பாட்டில் ஒன்றைத்தான். 'நம்மாழ்வார் ஆயிரம் பாடல்கள் திருமாலைக் குறித்துப் பாடினார். திருமால் பாற்கடலில் எங்கோ ஓரத்தில் கிடக்கிறார். எந்த இடமென்று தெரியாது. அவருக்கு வந்த யோகத்தைப் பார்த்தீர்களா? எப்பேர்ப்பட்ட யோகம் அது?' என்று ஆரம்பிப்பார். 'சாதாரணமாக லக்ஷ்மியின் கடைக் கண் நோக்கு இருந்தாலே செல்வமெல்லாம் ஒருவருக்கு வந்துவிடும். பக்கத்திலேயே சதா அவள் இருக்கும்படியான பாக்கியம் கிடைத்துவிட்டால் யோகத்தைப் பற்றிச் சொல்லவா வேணும்!' என்று மேலும் மேலும் பேசுவார். அதன் பின்வரும் பாட்டு.

சேரா தனஉள
வோ! திருச் சேர்ந்தார்க்கு;
வேதம் செப்பும்
பேரா யிரம், பொன்
முடியாயிரம் நரை
பெய் துளவத்
தாராயிரம் நம்
திரு குருகூர்ச் சட
கோபன் சொன்ன
ஆரா அமுதக்
கவியாயிரம் அவ்
அரியினுக்கே.

"ஆரா அமுதக் கவியாயிரம் அவ்வரியினுக்கே" என்கிற கடைசி அடி வரும்போது அற்புத ரஸம் வந்து நம் இதயத்தில் பெருக்கெடுக்கும், இதயம் விம்மும், கவி உருவத்தையே கண்டு விடுகிறோம். என்று முடிப்பார். ஆம். அவரோடு சேர்ந்து கவிக்கு உருவம்தான் முக்கியம். உருவம் இல்லாத கவி, கவியே யல்ல என்றுதான் நாமும் கை கொட்டுவோம்.

இப்படி யெல்லாம்-நல்ல கலா ரஸனையோடு கவிதையையும்-அந்தக் கவியையே உருவாக்கும் உருவத்தையும் நம்மை யெல்லாம் அனுபவிக்கும் படி செய்யவல்ல ஒருவரை 'வர ரஸிகர்' என்று குறிப்பிடாது வேறு என்ன சொல்லிக் குறிப்பிடு கிறது. ஆம்? அவர் ஒரு கலாரஸிகர். அதிலும் ஒரு வர ரஸிகர்தான்.

# பரதநாட்டியம்

'துள்ளி ஓடுகின்ற உணர்ச்சியிலேதான் பெரிய உண்மைகள் பிறக்கின்றன; உயர்ந்த சங்கீதங்கள் வழிகின்றன; ஓவியங்கள் உயிர் பெற்று எழுகின்றன; காவியங்கள் விரிகின்றன' என்று எங்கேயோ படித்த ஞாபகம். ஒரு நல்ல பரதநாட்டியக் கச்சேரியை, அதிலும் நாட்டியப் பெண்ணின் அபிநயங்களையெல்லாம் கூர்ந்து கவனித்து ரஸித்தோமானால் இந்த உண்மை நன்கு விளங்கும். பரதநாட்டியமே உணர்ச்சி யிலே பிறந்து, பார்ப்பவர் உள்ளத்திலெல்லாம் உணர்ச்சியை ஊட்டி, எல்லோரையும் உணர்ச்சி மயமாகவே ஆக்கிவிடுவதுதானே!

'பரதநாட்டியம் லளிதமும் எழிலும் நிறைந்த கலை. இந்தக் கலையின் மூலம் விதவிதக் கோலங் களையும் அற்புதக் கனவுகளையும், அபூர்வ தாள இசைகளையும் உள்ளச் சாயல்களையும் சிருஷ்டிக் கலாம். புதுப் புதுக் கற்பனைகளையும், ரஸ பாவங் களையும் மிகச் சுலபமாக வெளிப்படுத்தலாம். இந்தக்கலை நிரந்தர அழகு நிரம்பியது. அது ஒரு தனி உலகைச் சேர்ந்ததாகும்....இந்தக் கலையை வர்ணிக்க முயல்வது வஸந்தத்தின் எழிலையும் உதயத்தின் பரவசத்தையும் வர்ணிக்க முற்படு

வது போலத்தான்' என்று ஒரு ரஸிக நண்பர் கூறுகிறார். இப்படிப்பட்ட ஒரு அபூர்வமான, அதிசயமான கலை தமிழர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஏதோ இடைக்காலத்தில் இக்கலை கொஞ்சம் வீழ்ச்சி அடைந்திருந்தாலும் இப்போது புத்துயிர் பெற்றிருக்கிறது என்றே சொல்லவேண்டும். ஸ்ரீமதி பாலசரஸ்வதி, பந்தநல்லூர் ஜெயலக்ஷ்மி முதலியவர்கள் எல்லாம் தமிழ்நாட்டின் பல பாகங்களில் பரதநாட்டியக் கச்சேரி நடத்தி பெரும்புகழ் மட்டுமல்ல, பெரும் பொருளையே ஈட்டி வருகிறார்கள். கலைக்காகவே வாழ்கின்ற ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் அம்மையோ இக்கலையை புனர் உத்தாரணமே செய்கிறார். பெரிய பெரிய கௌரவமான குடும்பங்களில் எல்லாம் குழந்தைகளுக்கு பரதநாட்டியம் கற்பிக்கப்பட்டு வருகிறது. கலை விழாக்களிலும் இசையரங்குகளிலும் இச்சிறு பெண்கள் பெரும் பங்கெடுத்து விழாவைச் சிறப்பிக்கிறார்கள். சென்னையில் ஸ்ரீ C. K. விஜயராகவன் I. C. S அவர்களின் புத்திரி ஹேமா மாலினி, 'கல்கி' சதாசிவம் இவர்களின் மக்கள் ஆனந்தி, ராதா, நெல்லையில் ஸ்ரீ ஹனுமந்த ராவ் (Dt. Health Officer) அவர்களின் மகள் லலிதா முதலியவர்கள் எல்லாம் பரதநாட்டியத் துறையில் நல்ல புகழ்பெற உரியவர்கள் என்று தெரிகிறது. இதற்கெல்லாம் காரணம் யார் என்று கேட்டால் டி. கே. சி என்றுதான் எனக்குப் பதில் சொல்லத்தோன்றுகிறது.

1928 முதல் டி. கே. சி சென்னையில் இந்து மத பரிபாலன போர்டின் கமிஷனராக இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். அதற்கு முன்னமேயே ஸ்ரீமதி பாலசரஸ்வதி (வீணை தனம்மாளின் பேத்திதான்) சென்னையில் இருக்கத்தான் செய்தாள். அவளுக்குக் கைவந்துள்ள கலையை அதுவரை யாரும் அவ்வளவு பிரமாதமாக அனுபவித்து விடவில்லை. ஏதோ ஒருநாள் டி. கே. சி **மிஸஸ் ஹரிஜன் சாஸ்திரி** முதலிய சகாக்களுடன் பாலசரஸ்வதியைச் சென்று கண்டார். அவளும் இவர்கள் முன்னிலையிலே ஒன்றிரண்டு பதங்களுக்கு அபிநயம் பிடித்துக்காட்டினாள். அவ்வளவுதான பார்த்தவர்கள் பரவசம் அடைந்தார்கள். ஒரு புதிய உலகத்தையே கண்டது போலிருந்தது அவர்களுக்கு. அன்றுமுதலே டி. கே. சி பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார் பாலசரஸ்வதியைப்பற்றி. 'எல்லாம் பிரமாதம்' என்பதுதான் பாலசரஸ்வதியின் அபிநயத்தைப் பற்றி அவர் கூறும் விமர்சனம்.

பாலசரஸ்வதியின் புகழ் பரவிற்று. திருநெல்வேலி வரைகூட எட்டிற்று. 1935ல் திருநெல்வேலியில் ஒரு கல்யாணவீட்டிற்கே பாலசரஸ்வதியை வரவழைத்தார் அவர். வட்டத் தொட்டியிலேயே ஒரு அபிநயக் கச்சேரி வேறே நடந்தது. வட்டத்தொட்டி அங்கத்தினர்களை யெல்லாம் அன்று மாலையிலேயே கூட்டிவைத்து பதங்களைப்

பாடிக்காண்பித்தார். பின்னால் கச்சேரி ஆரம்பமாயிற்று. பதங்களோ மேலும் மேலும் சென்றன. ஐயம்மாள் பின்னிருந்து பாவபூர்வமாகப் பாட பால சரஸ்வதி தன்னை மறந்து அபிநயம் பிடித்தாள். பார்த்தவர்களோ தங்களையே மறந்தார்கள். ஆனந்த வெள்ளத்திலேயே மிதந்தார்கள் கொஞ்சநேரம். ஆந்திர சர்வகலாசாலை வைஸ் சான்ஸலர் டாக்டர் சி. ஆர். ரெட்டி முதலியவர்கள் எல்லாம் அன்று விஜயம் செய்து அபிநயத்தை அனுபவித்தார்கள். வட்டத் தொட்டி அங்கத்தினர்களோ "அவள் பரதநாட்டியம் ஆடினுள் - நாங்கள் பரதவித்து உளம் வாடினோம்" என்று திருக்கச்சூர் நொண்டியுடன் சேர்ந்து பாட ஆரம்பித்துவிட்டார்கள். பல சொல்வானேன்? டி. கே. சி யின் வீட்டு வேலைக்காரிகூட 'அட! பாதகத்தி மகள் என்ன ஆட்டம் ஆடுருள்' என்று சொல்லி மூக்கின்மேல் விரலை வைத்து விமரிசனமே செய்துவிட்டாள்.

அன்று முதல் வட்டத் தொட்டியினருக்கு பரத நாட்டியப் பயித்தியமே பிடித்தது. தூத்துக்குடியில் பாலசரஸ்வதியின் பரத நாட்டியமா, வட்டத் தொட்டியே டி கே. சி யின் தலைமையில் அங்கு சென்று சேரும். சென்னையில் பரத நாட்டியக் கச்சேரியா ஒருநடையே கட்டலாமா? என்றுதான் தோன்றும். இப்படியேதான் டி. கே. சி. யின் அடிச்சுவடுபற்றி பாவபூர்வமான

இசையை, உணர்ச்சி மயமான பரதநாட்டியத்துடன் அனுபவித்தோம் நாங்கள்.

டி. கே. சி தமிழ்நாட்டுச் சங்கீதத்தையோ அல்லது பதங்களையோ பற்றிப் பேசினால் கேட்டுக்கொண்டே இருக்கலாம். 'அது தெய்வகானம் ஐயா! தெய்வகானம். தமிழர் சங்கீதம்தான் பாவத்திற்குரியது, உணர்ச்சியோடு இதயத்தில் பாயக்கூடியது' என்ற பீடிகையோடு பதங்களைப் பற்றிப் பேச ஆரம்பிப்பார். 'தமிழ்ப் பதங்கள் ஆயிரக்கணக்கானவை தமிழ்நாட்டில் உண்டு. பதங்களை நேரில் பாடக்கேட்டு பாவங்களை அனுபவிப்பதே முக்கியம். அனுபவிக்க அனுபவிக்க பாவம் இதயத்தில் ஏறிநிற்கும். உணர்ச்சி ஒன்றை மாத்திரம் விடாது பற்றிக்கொள்வோமேயானால் பாவசங்கீதமாகவே பாடவும்வரும். பதங்களில்த்தான் ராகங்களின் மூர்ச்சைகளைத் தெளிவாய் தெரியக்காணலாம்' என்று முடிப்பார். பதங்களில் அவருக்குள்ள ஈடுபாடும் அவைகளைத் தான் அனுபவிப்பதுடன் மற்றவர்களையும் அனுபவிக்கச்செய்யும் திறனும் இன்று தமிழ் உலகம் நன்கறியும்.

பரத நாட்டியத்தின் மூலமாய்த்தான் பெண்ணின் பெருமையை உணர்கிறார் அவர். 'கலை என்றால் அது பெண்களுக்கு உரியது. அதை வளர்க்கக் கூடியவர்களும் அவர்களே. காரணம்: அவர்கள் எல்லாம் உணர்ச்சி வயப்பட்டவர்கள்.

வீண்படாடோபத்தில் மயங்காதவர்கள். எதைச் சொன்னாலும் உணர்ச்சியோடு ஒட்டி நோக்கு கிறார்கள். உணர்ச்சியோடு ஒன்றியே அனுப விக்கிறார்கள். அவர்களுக்குக் கவிதை, கலை முத லிய விஷயங்களையெல்லாம் பற்றிச் சொல்வது எவ்வளவோ எளிதானதாயிருக்கிறது' என்று டி. கே. சி சொல்லும் போதெல்லாம், 'கலைகளைப் பற்றி நாம் எவ்வளவோ தெரிந்திருக்கிறோம்' என்று எண்ணுகின்ற ஆடவர்கள் கொஞ்சம் நாணித் தலைகுனியத்தான் வேண்டியிருக்கிறது.

## கம்பனை மாத்திரமா ரஸிக்கிறார்?

'டி. கே. சி கம்பனைத் தவிர வேறு ஒரு புலவரையுமே ரஸிக்கமாட்டார். தமிழில் நல்ல பாட்டு என்று ஒன்றிருந்தால் அதைக் கம்பன் தான் பாடியிருக்கவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வார்' என்று ஒரு நண்பர் குறிப்பிட்டார். இப்படிச் சொல்லிய நண்பர், தாம் டி. கே. சி யின் கம்பன் பக்தியைப் பாராட்டிச் சொல்வதாக நினைத்துக்கொண்டார். ஆனால் அது டி. கே. சி யின் உண்மையான அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பதல்ல.

பழைய உரையாசிரியர்களின் மேற்கோள் கவிகளை அவர் அனுபவிக்கிற அளவு வேறு யாரும் அனுபவிக்கிறதை நான் இன்றுவரை பார்க்கவில்லை. ஔவை பாட்டு, அப்பர் பாட்டு, மாணிக்கவாசகர் பாட்டு, காரைக்காலம்மையார் பாட்டு ஏன்? பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாட்டு முதலிய பாட்டுக்களையும் அவர் அனுபவிக்கத்தான் செய்கிறார். இங்கொன்றும் அங்கொன்றுமாக அவர் பழைய பாட்டுக்கள், புதிய பாட்டுக்கள் எல்லாவற்றையும் சேர்த்து வைத்துக்கொண்டு அவர் தம்மைச் சுற்றியிருக்கும் தமிழ் அன்பர்களை அப்படியே அநாயாசமாக இந்தக் கவிகளை அனுப

விக்கும்படி செய்துவிடுகிறார். கவிதையின் உண்மையான சாயலை அவர் கண்ட கண்ட இட மெல்லாம் போற்றத் தயங்கியதே இல்லை.

*வெய்தாய் நறுவிதாய் வேணளவும் தின்பதாய்*
*நெய்தானளவி நிறம் பசந்து - பொய்யே*
*அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்*
*கடகம் செறிந்த கையார்.*

என்ற ஔவை பாடலை அவர் பாடிக்காட்டுகின்ற உற்சாகத்தோடு வேறு யாரும் பாடிக்காட்டி யதை நான் கேட்டதே இல்லை. பாட்டுப் பாடி முடிந்ததும் சின்னப் பிள்ளைகள்கூட அந்தப் பாட்டை மனனம் பண்ணிவிடுகிறார்கள். அதன் பின் அவ்வளவுதான். வீட்டிலெல்லாம் அதே பாட்டுத்தான். கீரைக்கறிக்கு அன்றைய தினத்தி லிருந்து ஒரு 'மவுஸ்' ஏற்பட்டுவிடுகிறது; குழம்பு கறி பரிமாறப்படும் பொழுதெல்லாம் 'வெய்தாய் நறுவிதாய்' என்ற அடிகள்தான் அந்தக் குழந்தை கள் வாயிலே.

நந்திக்கலம்பகம், கலிங்கத்துப் பரணிப் பாட் டுக்களை யெல்லாம் அவர் பாடிக்காட்டுவார். தேவார திருவாசகங்கள் எல்லாம் அவருக்கு விலக் கானவை யல்ல.

*கிளைகளாய்க் கிளைத்த பல*
*கொப்பெலாம், சதுர்வேதங்கிளைகளின்ற*
*களையெலாம் சிவலிங்கம்,*
*கனியெலாம் சிவலிங்கம், கனிகளின்ற*

சுனையெலாம் சிவலிங்கம்,
வித்தெலாம் சிவலிங்க சொரூபமாக
விளையுமொரு குறும்பலவின்
முளைத்தெழுந்த சிவக்கொழுந்தை
வேண்டுவோமே

'சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டிவைக்கும் அண்ணலார்'

என்ற குற்றாலக் குறவஞ்சியின் அடிகள் எல்லாம் தமிழ் நாட்டில் டி. கே. சி யால் பிரசித்தி யடைந்தவை.

'டி. கே. சி சங்ககாலத்துக் கவிகளை யெல்லாம் அறவே ஒதுக்கிவிடுவார். வழக்கொழிந்த பாஷை என்று அவை தள்ளப்படும். அவருடைய உரைகல்லில் சங்ககாலத்துச் செய்யுள்களுக்கு ஏழரை மாற்றுக்கூடத் தேருது' என்று சிலர் சொல்வார்கள். அது வாஸ்தவம்தான். சங்கச் செய்யுள்களில் பெரும்பான்மையானவை டி. கே. சி. உரைகல்லில் அடையும் கதி இதுதான் என்றாலும், உண்மையான பாவம் நிறைந்த கவி, அது சங்ககாலத்துக் கவியாகவே இருந்தாலும் சரி அவர் கும்மாளிதான் போடுவார். அதை வைத்துக்கொண்டு, புறநானூற்றில் ஒரு பாட்டு. பாரதம் பாடிய பெருந்தேவனுர் பாடியது. காப்புச் செய்யுளாகத் தொகுக்கப்பட்டது.

கண்ணி கார் நறுங்
　　கொன்றை, காமர்
வண்ண மார்பின்
　　தாரும் கொன்றை;
ஊர்தி வால் வெள்
　　ஏறே,-சிறந்த
சீர்கெழு கொடியும்
　　அவ் ஏ(று) என்ப;
கறை மிட(று) அணியலும்
　　அணிந்தன்(று), அக்கறை
மறை நவில அந்தணர்
　　நவிலவும் படுமே
பெண் உரு ஒருதிறன்
　　ஆகின்(று), அவ்வுருத்
தன்னுள் அடக்கிக்
　　கரக்கினும் காக்கும்;
எல்லா உயிர்க்கும்
　　ஏமம் ஆகிய
நீர் அற(வு) அறியாக்
　　கர கத்துத்
தாழ்சடைப் பொலிந்த
　　அருந்தவத் தோனே!

என்பது பாட்டு. இந்தப் பாட்டை ஒருநாள் மாலை டி. கே. சி எங்களுக்கெல்லாம் பாடிக் காட்டினர்-அவருக்கே சொந்தமான பாணியிலே தான். சமயத்திலுள்ள பண்பாட்டை எல்லாம் விளக்கி, தமிழ்ப்பா ஷை செய்கின்ற கும்மாளியை எல்லாம் எங்களுக்குச் சொன்னபோது என் பக்கத்திலிருந்த நண்பர், 'என்ன சார்! நம்ம

காதையே நம்பமுடியவில்லையே, டி. கே. சி யா இப்படிப் புறநானூற்றுப் பாட்டை அனுபவிக்கிறார்? அவர்தான் சங்ககாலத்துச் செய்யுள்களையெல்லாம் மன்னார் குடாக்கடலில்கொண்டு போய்ப் போடுங்கள் என்று சொல்பவர் ஆச்சே. இவர் என்ன சார் இந்தப் பாட்டை வைத்துக் கொண்டு இந்தக் கும்மாளி போடுகிறார். இது அதிசயமாக அல்லவா இருக்கிறது' என்றார். ஆம்! அதிசயப்பட வேண்டியதுதான். அவரை உண்மையாய் அறியாதவர்கள் அதிசயம்தான் படுவார்கள். டி. கே. சி யைப் பற்றிப் பலர் பல சொல்லுவார்கள். நேரிலே அவரை ஒருதரம் கேட்டவர்கள்கூட 'என்ன இவர் இப்படி இப்படிஎல்லாம் ஒரே போடாகப் போடுகிறாரே?' என்றுதான் அங்கலாய்ப்பார்கள். பலநாள் அவருடன் பழகவேண்டும். பலபாக்களை அவர் பாடிக் கேட்கவேண்டும். அப்போது தெரியும் உண்மை. உண்மையான கவிதையின் உத்தம நண்பர் அவர் என்று தெரியும். ஆனால் அதே சமயத்தில், வெறும் போலிக் கவிதையைக் கண்டோ அல்லது படாடோபத்தைக் கண்டோ அவர் மயங்காதவர் என்பதும் தெரியும். அவரை நல்லவண்ணம் தெரிந்து கொண்டவர்களுடைய மதிப்பில்-அவரும் அவருடைய பண்பாடும் சிறந்ததொரு ஸ்தானமே பெறும். அவருடைய மதிப்பும் வானளாவ உயரும்.

**'பூவே பூ புளியம்பூ**
**பொன்னிறக் கொண்டைக்குத் தாழம்பூ'**

என்ற நாடோடிப் பாட்டில் என்ன இருக்கிறது என்று நாம் நினைப்போம். ஆனால் டி.கே.சி யோ இதில் எத்தனை எத்தனையோ தத்துவங்களைக் காண்பார். இதைப்பாடும் குழந்தைகள் உள்ளத் துக்குள்ளேயே புகுந்து விடுவார். அவர் கண்ணு க்கு மாடுமேய்க்கும் சிறுவன் வருவான்; அவன் தலையில் புளியம்பூ ஒட்டிக்கொண்டிருப்பது தெரி யும்; அதைக்கண்டு சுள்ளிபொறுக்கும் சிறுமி'லை யாண்டி'பண்ணுவதெல்லாம் அவர்காதுகளுக்குக் கேட்கும். எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு குழந்தைகளின் உள்ளம் எப்படி எப்படி எல்லாம் கற்பனை பண்ணும் திறமுடையது என்பதைக் கற்பனை பண்ணிவிடுவார் அவர்.

நாடோடிப் பாடல்களைச் சேகரிப்பதில், ஸ்ரீ தேவேந்திர ஸத்யார்த்தியின் அடிச்சுவடுகளைப் பற்றி, எத்தனையோ பேர் இன்று முனைந்து வேலை செய்கிறார்கள். சமூகத்தின் ஜீவநாடி இந்தப் பாடல்களிலே துடிப்பதைக் கேட்பார்கள் அவர் கள். இப்பணியில் ஈடுபட்டு உழைப்பவர்களுக் கெல்லாம் ஒரு நல்ல வழிகாட்டி டி. கே. சி

சில்லென்று பூத்த
சிறு நெரிஞ்சிக் காட்டுடே
நில்லென்று சொல்லி
நிறுத்தி வழி போனீரே!

ஊரான் ஊரான் தோட்டத்திலே - யாரோ
ஒருத்தன் போட்டானும் வெள்ளரிக்காய்-அதைக்
காசுக்கு ரெண்டு விற்கச்சொல்லிக்
காயிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்

முதலிய பாட்டுக்களெல்லாம் டி. கே. சி யால் தமிழ் நாட்டில் பிரபலம் அடைந்தவை.

தேன் பெருகும் சோலைத்
    தென்னன் வள நாடு
கனி உதிரும் சோலை
    கன மதுரை நன்னாடு
வடகாஞ்சி முத்திறங்கும்
    வட மதுரைப் பட்டினமாம்
தென்காஞ்சி முத்திறங்கும்
    தென்மதுரைப் பட்டினமாம்
வாழை வடக்கீனும்
    வான் கமுகு தெற்கீனும்
கரும்பும் இள நீரும்
    கண் திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும்
    கதிர் உழக்கு நெற்காணும்
அரிதாள் அறுத்துவர
    மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக
    ஐங்கலத்தேன் கூடுகட்டும்
மாடுகட்டிப் போரடித்தால்
    மாளாது செந்நெல்லென்று
ஆனை கட்டிப் போரடிக்கும்
    அழகான தென்மதுரை

என்ற அல்லியரசாணிமாலை அம்மானைப் பாட்டை அவர் அனுபவிக்கிறார். நாட்டின் வளத்தையே அவர் அந்த அடிகளிலே காண்கிறார்.

ஆற்று வெள்ளம் நாளைவரத்
தோற்றுதே குறி
மலையாள மின்னல் ஈழமின்னல்
சூழ மின்னுதே

என்ற முக்கூடற் பள்ளுப் பாட்டை அவர் பாடினால் - அதில் ஒரு புதிய சுவையையே காண்போம் நாம்.

இதையெல்லாம் பார்த்தால் அவர் கம்பனை மாத்திரம் ரஸிக்கிறவர் அல்ல, சங்க நூல்களைத் தள்ளுகிறவர் அல்ல, நாடோடிப் பாட்டுக்களைக் கூட அவருக்கு நன்றாய் அனுபவிக்கத் தெரியும் என்ற உண்மைகள் எல்லாம் தெரிகிறதல்லவா?

## விருந்தோம்பல்

டி. கே. சி யின் தமிழ்ப்பற்று, கம்பன் மோகம் இவைகளை யெல்லாம் அனுபவித்தவர் சிலர்தான் உண்டு. ஆனால் அவர் வீட்டு விருந்தை அனுபவித்தவர்களோ பலர். வீட்டுக்கு வருபவர்களை உபசரிப்பதில், டி. கே. சி, அவர் மனைவி **ஸ்ரீமதி பிச்சம்மாள் அண்ணி**, ஏன்? பேரன் **நடராஜன்**, தவசுப்பிள்ளை முத்துசாமி எல்லோருமே பங்கெடுத்துக் கொள்வார்கள்.

இடம் குற்றாலம்; நேரம் இரவு பத்து மணி; அந்தச் சமயத்தில்த்தான் முன்னறிக்கையில்லாமலே நாலைந்து நண்பர்கள் வந்துசேருவார்கள். முன்னமேயே நாலைந்து நண்பர்கள் டி. கே. சி உடனிருந்து தமிழ்க்கவி ஒன்றை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். டி. கே. சி புதிதாக வந்த நண்பர்களை யெல்லாம் வரவேற்றபின் 'இலை போடச் சொல்லலாமா?' என்றுதான் கேட்பார். 'இந்த நேரத்தில் இத்தனை பேருக்குச் சாப்பாடு தயாராயிருக்குமா' என்று சிறிது சந்தேகிப்போம் நாம். ஆனால் உடனே இலை போடப்படும். எல்லா நண்பர்களும் ஒன்றாய்த்தான் உட்காருவார்கள். கூட்டத்தில் பிராமணர் இருப்பார்; கிறிஸ்தவர் இருப்பார்; முகம்மதியர்

இருப்பார்; இன்னும் ஹரிஜனத் தோழர்கூட ஒருவர் இருப்பார். எல்லோரும் சமபந்திதான் அங்கே. அருமையான விருந்து, நான்கைந்து வகைக் கறிகளுடன், வத்தல் வடகங்களுடன், சுவை மிகுந்த மாம்பழங்களுடன் அந்த நேரத்திலே நடக்கும். 'இப்படி இந்த நேரத்திலே இத்தனை நண்பர்கள் வருவார்கள் என்று டி.. கே. சிக்குத் தெரியுமா? அல்லது அவருடைய வீட்டில் ஏதாவது 'அட்சய பாத்திரம்' உண்டா?' என்றெல்லாம் நமக்கு அதிசயமாய்த்தா னிருக்கும். ஆனால் அதிசயம் ஒருநாள் நடந்தால் சரி. தினசரி நிகழ்ச்சியும் இதே விதம்தானே. சாப்பாடோ, பலகாரமோ, பத்து இருபது பேருக்கு எப்போதுமே தயார். நண்பர்கள் வராத குறை தான் டி. கே. சிக்கு. 'இன்று உடன் இருந்து உண்ண அதிகமான நண்பர்கள் இல்லையே?' என்பதுதான் அவருடைய அங்கலாய்ப்பு. அதிகப்படியான நண்பர்கள் வந்துவிட்டார்களே என்று அண்ணியாவது அல்லது தவசுப்பிள்ளையாவது மயங்கியதே கிடையாது. எல்லாம் அண்ணியின் மேற்பார்வையில் ஏக சம்பிரமமாக நடைபெறும் தினசரிவிருந்து.

விருந்தினர் பக்கத்தில் இல்லாமல் ஒருநாளாவது டி. கே. சி தனியாகச் சாப்பிட்டிருப்பாரா என்பது சந்தேகம்தான். 'அடையாத வாயில் அகம்' என்றெல்லாம் தமிழ்ப் பாக்களைப் பாடித்

தெரிந்து கொண்டிருக்கிறோம். டி. கே. சி யின் வீடு அடையாத வாயில் அகம்தான். அவர் சென்னையில் இருந்தாலும் சரி, குற்றாலத்தில் இருந்தாலும் சரி எங்குபோனாலும் இலக்கிய அன்பர்கள் சூழ்ந்தே இருப்பார்கள். செவிக் குணவு தாராளமாகக் கிடைப்பதுபோல வயிற் றுக்கு உணவும் ருசியாகவே கிடைக்கும். சாப்பிட் டுக் கொண்டிருக்கும் போதே தமிழ்ப்பாட்டு வேறே வந்துவிடும். அவ்வளவுதான். பாட்டை அனுபவிப்பதா அல்லது சாப்பாட்டை அனுப விப்பதா என்றாகிவிடும் நண்பர்களுக்கு.

சுமார் ஏழு எட்டு வருஷம் இருக்கும். திருநெல்வேலியில் ஒருநாள் மத்தியானம் நானும் இன்னும் சில அன்பர்களும் டி. கே. சி யுடன் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். சாப்பிடுவது பத்துப்பேர்தான் என்றாலும் பரி மாறுவதற்கு இருந்தவர்கள் நான்கைந்து பேர். ஸ்ரீமதி பிச்சம்மாள் அண்ணி, டி. கே. சி யின் மறு மகள், டி. கே. சி யின் வளர்ப்புப் புத்திரி ஜானகி எல்லோரும் ஆளுக்கொரு தட்டேந்தி தவசுப் பிள்ளையோடு போட்டி போட்டுக்கொண்டே பரிமாறினார்கள். சாப்பிட்டு முடியும்போது தமிழ்ப்பாட்டு ஒன்று வந்துவிட்டது. டி. கே. சி பாட்டைப்பாட ஆரம்பித்துவிட்டார். வழக்கம் போல் பிரமாதமான 'செட்டிங்' எல்லாம் கொடுத்துத்தான் விளக்கினார். சாப்பிட உட்கார்ந்

தவர்கள் என்ற பிரக்ஞையே இல்லாமல் எல்லோரும் பாட்டை அனுபவித்துக்கொண்டேயிருந்தோம். கை உலர்ந்ததுகூட ஒருவருக்கும் தெரியவில்லை. டி. கே. சி யோ மேலும் மேலும் பாடிக்கொண்டே இருக்கிறார். பாட்டின் விளக்கமும் பரிபூரணமாக முடிந்தது. உடனே 'சரி! சாப்பிட்ட இலையை எடுத்துவிட்டு டிபனுக்கு இலை போடச் சொல்லவா?' என்று அண்ணி டிபனைப் பற்றி ஞாபகப்படுத்திய போதுதான் நாங்கள் எல்லாம் மத்தியானச் சாப்பாட்டிற்கு உட்கார்ந்தவர்கள் என்ற உணர்ச்சி வந்தது. மத்தியானம் ஒரு மணிக்கெல்லாம் இலை முன் உட்கார்ந்தவர்கள் நாலு மணிவரை அப்படியே உட்கார்ந்திருக்கிறோம் என்று பின்னால் கடிகாரத்தைப் பார்த்துத்தான் தெரிந்துகொண்டோம். இது ஒரு நாள் அனுபவம்.

ஒரேயொரு எச்சரிக்கை. ரயிலுக்குப்போக வேண்டியவர்களோ அல்லது கோர்ட்டில் ஆஜராகவேண்டியவர்களோ டி. கே. சி யுடன் இருந்து சாப்பிட விரும்புதல் கூடாது. அப்படி உடன் இருந்து சாப்பிட்டு, அவர் சொல்லும் பாட்டிலே மெய்மறந்து ரயிலைத் தவறவிட்டாலும், கோர்ட்டிலே குறித்தநேரத்தில் ஆஜராகத் தவறி அதற்காக அபராதம் கொடுத்தாலும் அது ஆச்சர்யமில்லைதான். இதற்கெல்லாம் துணிந்தவர்கள் டி. கே. சி யுடன் இருந்து உண்பதில் ஆக்ஷேபனை எதுவும் இல்லை.

•

டி. கே. சி உணவை ஊட்டுகிறாரா, அல்லது கவியை ஊட்டுகிறாரா? என்றால் அதெல்லாம் அப்படி லேசாகச் சொல்லிவிடக்கூடிய காரியமில்லை. உணவுச் சுவையையும் கவிச்சுவையையும் சேர்த்து ஒன்றாகவே ஊட்டிவிடுகிறார் அவர் என்பதுதான் என் அனுபவம்.

இன்னும் ஒரே யொரு விஷயம். '**டி. கே. சியின் புகழ்பெற்ற தோசை**'யைப் பற்றிச் சொல்லா விட்டால் இந்த அத்தியாயம் சரியானபடி எழுதப்பட்டதாகாது. 'டி. கே. சி வீட்டில் செய்யப்படும் தோசை தின்பதற்காகவே சென்னையிலிருந்து குற்றாலத்திற்கு ஒரு பயணம் புறப்படலாம்' என்றார் ஒரு நண்பர். தோசை என்றால் உங்கள் வீட்டுத்தோசை எங்கள் வீட்டுத்தோசையல்ல. தோசைக்கென்றே ஒரு தனியரிசி; குலைவாழை என்று பெயர். அதைப் பயிரிட்டு வைத்திருக்கிறார் அபரிமிதமாக. அந்த அரிசியோடு அளவான உழுந்து. அந்த அரிசி மாவையும் உழுந்த மாவையும் ஆட்டுவதற்கென்றே தனி உரல், நல்ல அகலமானது. இவ்வளவிற்கும் மேலே அந்தத் தோசை சுடுகின்ற 'நைஸ்' **ஸ்ரீமதி பிச்சம்மாள் அண்ணி** ஒருவருக்குத்தான் அந்தத் தோசையைச் சுடத்தெரியும். தவசுப்பிள்ளையெல்லாம் அடுப்பங்கரையை விட்டு அந்த நேரம் ஒதுங்கிக்கொள்ளவேண்டியதுதான். அடுப்பின் முன்னாலே ஒரு 'ஸ்டூலைப்' போட்டு அதில் வீற்

றிருந்து தோசை சுட ஆரம்பித்தால் அதே ஒரு கலே. ஐம்பது தோசை சுட்டாலும் சரி அறு நூறு தோசை சுட்டாலும் சரி எல்லாம் ஒரே 'சைஸ்'. 'காம்பஸ்'வைத்து 'சர்க்கிள்'போடுபவருக் குக்கூட கொஞ்சம் கை பிசகும். அண்ணி சுடும் தோசையெல்லாம் நல்ல பூரணச் சந்திரன் போன்ற வட்ட வடிவமே. இதையெல்லாம் விட, தோசையின் மெதுவு. அனிச்ச மலர் மிகவும் மென்மை வாய்ந்தது என்று கேள்வி. பார்த்த தில்லே என்று சொல்லலாம். அனிச்சமலர் எப் படி இருக்கும் என்ருல் டி. கே. சி வீட்டுத் தோசையைப்போல என்று சொல்வது அனிச்ச மலருக்கு ஒரு நல்ல விளக்கம் கொடுத்ததாகும். தோசையுடன் சட்னி, 'கொத்சு', பல நாளாய்ப் பக்குவமாகத் தயாரித்த ஊறுகாய் எல்லாம் சேர்ந் தால் அன்னத் துவேஷம் உள்ளவன்கூட ஐந்தாறு தோசை தின்றுவிடுவான். யாரேனும் நண்பர் களுக்கு இந்தத் தோசை தின்னும் பாக்கியம் இதுவரை கிடைக்காவிட்டால் அவர்கள் இந்த இகலோக இன்பத்தில் அடையவேண்டிய பாக்கி யத்தில் ஒன்றை இன்னும் பூரணமாக அடைய வில்லே என்றுதான் நான் சொல்வேன்.

# தமிழ் இசை இயக்கம்

தமிழ்நாட்டில் தமிழ் இசை இயக்கம் இன்று தலைதூக்கி நிற்கிறது. செட்டிநாட்டு ராஜா சர் அண்ணாமலை செட்டியார், கோயம்புத்தூர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலிய பெரியார்கள் எல்லாம் இந்த இயக்கத்தில் பெரிய பங்கெடுத்து வேலைசெய்து வருகிறார்கள். சென்னையிலிருந்து நடைபெறும் 'கல்கி' பத்திரிகை, செட்டிநாட்டு 'குமரன்' முதலிய பல பத்திரிகைகள் எல்லாம் நல்ல முறையிலே பிரசாரம் செய்து வருகின்றன.

நமது முன்னோர்கள் இசையை நன்றாகவே அனுபவித்திருக்கிறார்கள். இசையை அனுபவிக்க நல்ல காதும் இருந்திருக்கிறது என்றெல்லாம் சரித்திரம் நமக்குச் சொல்கிறது. சங்க இலக்கியங்களில் காணுகின்ற கானல்வரி, வேட்டுவவரி முதலிய வரிப்பாட்டுகள் என்ன? ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலிய குரவைப் பாட்டுகள்தான் என்ன?—ஏன்? குறவஞ்சி பள்ளுப்பாட்டு முதலியவைகள்தான் என்ன? இவைகளெல்லாம் தமிழனுக்குப் பண்டைக் காலத்திருந்தே நல்ல சங்கீதத்தை அனுபவிக்கும் திறமை இருந்திருக்கிறது; நல்ல சங்கீதம் தமிழர்களுக்கும் உரியதுதான், என்றெல்லாம் தெரிய

வைக்கிறது. இறைவனையே 'ஏழிசையாய் இசைப் பயனாய்க்' கண்டவர்கள் அல்லவா தமிழ் பக்தர்கள். தேவாரப்பண்கள் எல்லாம் உள்ளம் உருக்குவனவாய் அமைந்திருக்கின்றனவே.

ஆனால், எப்படியோ இந்தத் தமிழன் வாழ்விடை படாடோபம் வந்து புகுந்துகொண்டது. தமிழ்நாட்டிலே தமிழ்மொழியிலே பாடுவது அனுசிதம் என்று கருதப்பட்டது. 'சுந்தரத் தெலுங்கு' தமிழ்க் கச்சேரிகளிலே அதிகமான இடம் பெற்றது. பாகவதர்களோ தெலுங்குப் பாட்டுகளுக்கும் கன்னடப் பாட்டுகளுக்கும் முக்கியமான இடத்தைக்கொடுத்து, தமிழ்ப்பாட்டுக்களை 'துக்கடா' என்று ஒதுக்கித்தள்ளினர். உள்ளம் உருக்கும் பாவம் கலந்த இசையை எல்லாம் மறந்து, வெறும் நாதசுகத்திலேயே தங்களை மறந்தனர். பாடுகிற பாட்டுக்களுக்கோ பாடுகிறவர்களுக்குப் பொருள் தெரியாது; கேட்கிறவர்களுக்கோ பொருள் தெரியவே தெரியாது. சுரம் நிரவல் முதலிய சிலம்படி வித்தைகளுக்கோ குறைச்சல் கிடையாது, இதைக்கண்ட ஒரு சிலர் நெஞ்சம் குமுறினார்கள். இதயத்தைத் தாக்கும் பாவம் கலந்த இசையே தமிழர்களுக்கு வேண்டும் என்று பத்திரிகைகளில் எழுதினார்கள்; மேடைகளில் பேசினார்கள்.

இப்படிப் பேசியவர்களில் முதன்மையானவர் டி. கே. சி. 'எனக்கு சங்கீத ஞானம் கிடை-

யாது என்று பாகவதர்கள் வேண்டுமானால் சொல்லிக்கொள்ளட்டும். நான் ஆடம்பரமான வெற்றொலியிலே மயங்கிவிடமாட்டேன். பாடுகின்ற பாட்டின் பொருள் பாடுகிறவர்களுக்கும் தெரியவேண்டும்; கேட்கிறவர்களுக்கும் தெரியவேண்டும். அப்போதுதான் பாட்டிலே வருகிற பாவம் தெரியும், பாட்டையும் கேட்பவர்கள் அனுபவிக்க முடியும்' என்று யாருக்கும் அஞ்சாமல் பேசினார்; எழுதினார். இப்படிப்பட்ட ஒரு பிரசாரம் செய்ததின் பலன் என்ன ஆயிற்று? செட்டிநாட்டு அரசர் பெருந்தகை ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் இப்படியே நினைத்தார்கள். தமிழிசை வளர்ச்சிக்கு பதினாயிரக்கணக்கான தொகைகளைப் பரிசுகொடுக்க முன் வந்தார்கள். அதன் காரணமாகத் தமிழிசை வளர்ச்சிக் கிளர்ச்சி ஒரு பெரிய இயக்கமாக மாறிவிட்டது.

எதிர்ப்புகள் அங்கங்கே தோன்றத்தான் செய்தன. எதிர்ப்பு இல்லாவிட்டால், சாரமற்றுப் போய்விடாதா எந்த இயக்கமும்? இந்தத் தமிழிசை இயக்கம் தமிழ்நாட்டிலுள்ள மக்களைத் தட்டி எழுப்பிற்று. தமிழ் அன்பர் பலர் தமிழிசை வளர்ச்சியில் முனைந்து ஈடுபட ஆரம்பித்தார்கள். அந்த முயற்சியின் முதற்படிதான் தேவகோட்டையில் நடந்த தமிழிசை மகாநாடு. 1941ல் நடந்த தமிழ் இசை மகாநாட்டிற்கு டி. கே. சி தலைமை

வகித்தது எவ்வளவு பொருத்தம். 'கலைகள் சம்பந்தமாக டி. கே. சி அபிப்பிராயமே என்னுடைய அபிப்பிராயம். அவர் சொல்வதையெல்லாம் நான் சொல்வதாகவே நினைத்துக்கொள்ளலாம்' என்று ராஜாஜி செய்த ஆசீர்வாதத்தில்த்தான் எவ்வளவு உண்மை இருந்தது.

தேவகோட்டைக்கு, மற்ற இடங்களும் சளைக்கவில்லை. எங்கு பார்த்தாலும் தமிழிசைச் சங்கங்கள், தமிழ்இசை அரங்குகள், ஏன்? தமிழ் இசை மகாநாடுகள்தான். காயன கந்தர்வ சங்கீத சாம்ராட் செம்பை வைத்தியநாத பாகவதர் முதலிய 'பெரிய கை'கள் எல்லாம் தமிழ் இசை இயக்கத்தில் கலந்துகொள்ள வந்துவிட்டனர். கச்சேரி சென்னையில் நடந்தாலும் பம்பாயில் நடந்தாலும் எங்கும் தமிழ் மணம்கமழ்கின்றது. சாஹித்யங்களுக்கும் பஞ்சமில்லை என்று தெரிந்துவிட்டது. எத்தனை மகாநாடுகள் எங்கு நடந்தாலும் சரி அங்கெல்லாம் டி. கே. சி இருப்பார். எல்லா இடத்திலும் அக்ரஸ்தானம் டி. கே. சிக்குத்தான்.

இந்த இயக்கத்திற்கே சிகரம் வைத்ததுபோல் சென்னையில் சென்ற கிறிஸ்மஸ் விடுமுறையில் ஏக அமர்க்களமாக மகாநாடும் இசையரங்கும் நடைபெற்றுவிட்டன. இனித் தமிழ் நாட்டில் தமிழரிடையே தமிழில்த்தான் பாடவேண்டும் என்ற பிரசாரத்திற்கே அவசியமில்லை. எல்லாம் டி. கே. சி செய்த சேவையின் பயன்.

# எல்லாம் தமிழில் முடியும்

'புத்தம் புதியகலைகள் பஞ்ச
    பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே, அம்
    மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவும் கூடுவதில்லை அவை
    சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை'

என்று யாரோ உரைத்ததாக கவி பாரதியார் அங்கலாய்க்கிறார். வாஸ்தவம். இப்படிச் சொன்னவர்கள் தமிழ்நாட்டில் இருபது வருஷங்களுக்கு முன்தான் இருந்தார்கள் என்றில்லை. அன்று அநேகர் அவ்விதம் சொல்லிக்கொண்டிருந்தால், இன்றும் சிலர் அதே பல்லவியைப் பாடிக் கொண்டு தானிருக்கிறார்கள்.

நமது பள்ளிக்கூடங்களிலே 'சயன்ஸ்' முதலிய அறிவியற் பாடங்களையெல்லாம் தாய் மொழியாகிய தமிழிலேதான், சொல்லிக்கொடுக்க வேண்டும் என்ற கிளர்ச்சி எழுந்தபோது இந்தப் பாடங்களை ஆங்கில மொழி மூலமாகக் கற்பிப்பதனுல் சிறந்த பலன் ஏற்படாது என்று அபிப்பிராயப்பட்டவர்களும், 'அறிவியற்கலைகளை தமிழ் மொழிமூலம் கற்பிக்க இயலாதே, அக் கலைக்குரிய சொற்கள் தமிழ்மொழியில் இல்லையே'

என்றுதான் கையை விரித்தார்கள். இக்குறையை நிவர்த்திக்க 'கலைச் சொல்லாக்கக் கழகங்கள்' அமைத்தார்கள். கலைச் சொற்களைத் தேடித்தேடி அலைந்தார்கள். வடமொழிச் சொற்கள் சில உதவின. ஆனால் தனித்தமிழ் காதலுடைய சிலர், வடமொழியை விலக்கிவிட்டு, வழக்கில் இல்லாத, பொருள் விளங்காத தனித்தமிழ்ச் சொற்களைக் கொண்டு அறிவியல் கலைகளை விளக்க முயன்றார்கள். இவர்களுடைய முயற்சியினால் எல்லாம்-அறிவியற்கலை விளங்கினாலும் - இவர்கள் வடித்தெடுத்த சொற்கள் விளங்குவதாயில்லை. இப்படியெல்லாம், எல்லோரும் குட்டையைக் குழப்பிக் கொண்டிருந்த போது, சர்வகலாசாலையார்-'கமிஷன்' ஒன்றை நியமித்தார்கள். கமிஷனிலோ வெள்ளைக்காரர் பலரும், தமிழ்நாட்டுப் பேராசிரியர்கள் பலரும் இடம் பெற்றிருந்தார்கள். 'விஞ்ஞான சாஸ்திரத்தைத் தமிழ் மொழியில் சொல்லித்தர முடியுமா?' என்பதுபற்றித் தமிழ்நாட்டின் பிரமுகர்களின் சாட்சியத்தைச் சேகரிக்க ஆரம்பித்தார்கள் இவர்கள்.

இந்தக் கமிஷனர்கள் முன்னிலையிலே, 'எல்லாம் தமிழில் முடியும், தமிழில் சொல்ல முடியாத காரியம் ஒன்றுமே இருக்காது' என்ற திடமான கொள்கையுடைய டி. கே. சி ஆஜர் ஆனார். இவரும் அப்போது ஒரு கமிஷனர். ஆம்! இந்துமத தரும ஸ்தாபன பரிபாலன சபையின் கமிஷனர்

தான். டி. கே. சிக்கோ இந்தப் பிரச்னை எளிதில் தீர்க்கக்கூடியதாய்ப்பட்டது. 'அறிவியற் கலைகளை அதாவது சயன்சை தமிழர்களாகிய நாம் அறிய வேண்டும் என்பதுதான் முக்கியமே ஒழிய, தமிழ்ச் சங்கேதச் சொற்கள் மூலம்தான் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதில்லை; இதற்காக தமிழ்சங்கேதச் சொற்களை உற்பத்திசெய்து வீண் காலம் போக்குவது அவசியமில்லை; விஷயத்தை நேர்முகமாய் விளக்க ஆங்கிலச் சொற்களையே உபயோகித்தால் குற்றமில்லை; விளக்கம் மட்டும்தான் தமிழில் இருக்கவேண்டும்' என்றெல்லாம் எண்ணினர் டி. கே. சி. இனி ஆரம்பமாகிறது சாட்சியம். அந்த ரஸமான சம்பாஷணையை அப்படியே கொடுப்பதுதான் நல்லது.

**கமிஷன் அங்கத்தினரில் ஒரு வெள்ளைக்காரர்:-**

உங்கள் 'வெர்ஞகுலரில்' சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் இல்லையல்லவா? அது உண்மைதானே?

**டி. கே. சி:-** இந்தக் கேள்விக்கு இடமேயில்லையே.

**கமிஷனர்:-** ஏன் இடமில்லை!

**டி. கே. சி:-** தமிழில் சயன்ஸ் இருந்தால் அல்லவா அக் கலைக்குரிய சொற்கள் இருக்கும். கலையே

இல்லாதபோது சொற்கள் எங்கிருந்து வரும்.

**கமிஷனர்:-** ஏது? எங்கள் வேலையையே எளி தாக்கி விடுவீர்கள் போலிருக்கிறதே. சயன் ஸும் இல்லை; சொற்களும் இல்லை. ஆகவே சயன்ஸை தமிழில் கற்பிக்க முடியாதென்று முடிவு கட்டவேண்டியதுதானே.

**டி. கே. சி:-** ஆமாம் முடிவுகட்ட வேண்டியது தான். நூறு நூற்றைம்பது வருஷங்களாக வெள்ளைக்காரர்களாகிய நீங்கள் வந்து எங் களுக்குக் கல்வி கற்பித்துக் கொடுத்தும் நாங்கள் கண்ட பலன் என்ன? எங்களுக்கு சயன்ஸ் கிடையாது; சயன்ஸ் தெரியாது என்பதுதானே—சரி, தமிழில் சயன்ஸ் சொற்கள் இல்லை என்று சொன்னேன். நீங்களும் தலையை ஆட்டிவிட்டீர்கள். போகட்டும்-தமிழ் எப்படியாவது போகட் டும். உங்கள் வெர்ணுகுலரான ஆங்கிலத் தில் சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் உண்டோ?

**கமிஷனர்:-** என்ன சார் இது? ஏன் இல்லை? இல்லாமலா இத்தனை நாளும் நாங்கள் சயன்ஸ் படித்திருக்கிறோம்; அதைப்பற்றிய ஆராய்ச்சி யெல்லாம் நடத்தி வருகிறோம்?

டி. கே. சி:- *ஆம் ஐயா! ஆராய்ச்சிகள் எல்லாம் பலமாய்த்தான் நடத்தி வருகிறீர்கள். அது வாஸ்தவம்தான். ஆனால் அந்த அறிவியற் கலைகளின் பெயர்களையே கொஞ்சம் பாருங் களேன்.*

கமிஷனர்:- *பார்த்தால்?*

டி. கே. சி:- *உங்கள் அறிவியற்கலைகள் எல்லாம் என்ன, அரித்மெடிக், பிசிக்ஸ், பிஸியாலஜி, பையாலஜி, ஸுவாலஜி, ஸைகாலஜி, இன்னும் என்ன என்ன 'யாலஜி' களெல்லாமோ சொல்கிறீர்கள். இந்தப் பெயர்கள் எல்லாம் ஆங்கிலமா? இல்லையே. கிரேக்க மொழியி லும் லத்தீன் மொழியிலும் இருந்துவந்த பெயர்கள்தானே. கலைகளின் பெயர்களே உங்கள் வெள்ளைகுலருக்குச்சொந்தமில்லையே, கலைகள் மட்டும் எப்படிச் சொந்தமாகி விடும். உங்கள் வெள்ளைகுலரே இப்படிக் கடன் வாங்கிப் பிழைக்கும்போது எங்கள் தாய்மொழியும் இதேபோல பெயர்களைக் கடன் வாங்கினால் என்ன? பிராமிசரி நோட் எழுதிக்கொடுக்க ஸ்டாம்பும் தாளும் எங்களிடம் கிடையாதா? இல்லை கிரீக்கும் லத்தீனும் கடன் தரமாட்டோம் என்று சொல்லுமா? இல்லை—இந்தச் சொற்கள் உங்கள் வெள்ளைகுலரில் வந்த பிறகு எப்படி*

வாயில் நுழையமுடியாது தவிக்கிறதோ அப்படியே எங்கள் தமிழிலேயும் தவிக்கட்டுமே? என்ன ஐயா குறைந்துவிடும்?

கமிஷனர்:- (கொஞ்சம் திணறிப்போய் பின்னால்) நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். என்றாலும் விஞ்ஞானக் கருத்துக்களை உங்கள் தாய்மொழியில் விளங்கும்படி சொல்லமுடியாது என்பதையாவது ஒத்துக் கொள்கிறீர்கள் அல்லவா?

டி. கே. சி:- யார் ஒத்துக்கொள்கிறார்கள்? அடிப்படையான விஞ்ஞானக் கருத்து எதையுமே, அது எவ்வளவு சிக்கலான விஷயமானதாயிருந்தாலும் தமிழில் விளங்கும்படி அழகாகச் சொல்லிவிட முடியும்.

கமிஷனர்:- முடியுமா?

டி. கே. சி:- முடியும் ஐயா முடியும். நீங்கள் யாரேனும் ஒரு கடினமான விஞ்ஞானக் கருத்தை ஆங்கிலத்தில் சொல்லுங்கள். நான் அதைத் தமிழர்களுக்கெல்லாம் புரியும்படியான தமிழில், தமிழ் நடையில் சொல்கிறேன் பாருங்களேன். [எல்லோரும் மௌனம் சாதிக்கிறார்கள்.]

சரி நீங்களோ ஒன்றும் சொல்லவில்லை; நானே சொல்கிறேன். ஆங்கிலமும் சொல்லி

தமிழில் மொழிபெயர்த்துக் காட்டுகிறேன். பையாலஜி என்ற உயிர் நூல்க்கலையில் ஒரு முக்கியமான உண்மை. அதாவது 'Ontogeny is the recapitulation of phylogeny' ஆங்கிலம். இதற்குத் தமிழ் சொல்கிறேன் கேளுங்கள். 'ஆண்டாஜனி என்பது பைலாஜனியைப் பிண்டமாய்க் கூறுவதாகும்.' என்ன விளங்குகிறதா?

கமிஷனர்:- (சிரித்துவிட்டு) என்ன விசித்திர மான தமிழ் ஐயா உம்முடைய தமிழ்?

டி. கே. சி:- உங்கள் இங்கிலீஷ் மட்டும் விசித்திர மாயில்லையோ? ஆண்டாஜனி, பைலாஜனி யெல்லாம் உங்கள் பேரனார் வீட்டு வார்த் தையா என்ன? அவை உங்கள் வெர்னு குலரான ஆங்கிலமல்லவே.

கமிஷனர்:- சரிதான் ஐயா! இந்த உண்மையை எங்கள் வெர்னுகுலரில் 'The history of the individual will reveal the history of the race' என்று சொல்லமாட்டோமா? சொல்லி எல்லோருக்கும் விளங்கச்செய்ய மாட்டோமா?

டி. கே. சி:- ஒகோ! ரொம்ப சரி. பெரிய உண் மையை ஆங்கிலத்தில் சொல்லித்தான் விட் டீர்கள். நானும் தமிழில் சொல்கிறேன்

கேளுங்கள். ஒரு பிராணியின் பிறப்பு வளர்ப்பே இனத்தின் பிறப்பு வளர்ப்பைக் காட்டும்' என்று சொல்லலாம் அல்லவா? அப்படிச் சொன்னால் தமிழ் பேசுகிறவர்களுக்கு எல்லாம் விஷயம் என்ன என்று விளங்கத்தானே செய்யும்.

**கமிஷனர்:-** *சரிதான்! எங்கள் வெர்னகுலரில் எதை எதைச் சொல்லமுடிகிறதோ அதையெல்லாம் தமிழிலும் சொல்லமுடியும் என்றுதான் கூறுகிறீர்.*

**டி. கே. சி:-** *ஆமா! அதற்கும் சந்தேகமா? தமிழில் சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் இல்லைதான். அதனால் சயன்ஸையே தமிழ்மொழியில் மாணவர்களுக்குக் கற்பித்துவிட முடியாது என்று கருதுவது எவ்வளவு தவறானது என்று இப்போதாவது தெரிகிறதா?*

சாட்சியம் இவ்வாறு முடிவடைந்தது. வெள்ளைக்காரக் கமிஷனருக்கு எப்படியோ உண்மை கொஞ்சம் விளங்கிவிட்டது. ஆனால் 'கால் குழாய் மாட்டிய கருத்த துரைகளாகிய' நம்மவர்களுக்கோ (கமிஷனர்களாக இருந்தவர்களுக்குத்தான்) விஷயம் விளங்கவில்லை. ஆங்கிலத்தை விட்டுவிட முடியுமா? ஆங்கிலத்தைத் தமிழாக்கிக் கொண்டால் என்ன அனர்த்தம் விளைந்து விடுமோ? என்றுதான் ஏங்கினார்கள் என்று கேள்வி.

டி. கே. சி

'எல்லாம் தமிழில் முடியும்' என்று கட்டியம் கூறுபவர் டி. கே. சி. அதை நிரூபித்துக் காட்டவும் அவரால் முடிகிறது. சங்கேதச் சொல் அல்ல முக்கியம். சொற்கள் காட்டும் உண்மை தான் முக்கியம் என்றுதானே அவர் சொல்கிறார்.

# தமிழ்வசனமும் தண்ணீர் ஸ்நானமும்

'டி. கே. சி ஒரு Fad; எதை எடுத்தாலும் பிரமாதப் படுத்துவார்; எல்லாம் Exaggeration தான்' என்றுகூடப் புகார் சொல்பவர்கள் உண்டு.

"கவிதையா, கம்பன் ஒருவனுல்த்தான் பாட முடியும்; தமிழ் வசனமா, கல்கி ஒருவர்தான் தமிழ் வசனம் எழுதுகிருர். சங்கீதமா ஸ்ரீமதி M. S. சுப்புலக்ஷ்மி சங்கீதம் ஒன்றுதான் சங்கீதம். அது தான் Soul-subduing music என்றெல்லாம் சொல்கிருரே, வானளாவப் புகழ்கிருரே, இதெல்லாம் Exaggeration இல்லாமல் வேறு என்னவாம்" என்று கோபத்தோடு கேட்கிருர் 'நடுநிலை' விமர்சகர் ஒருவர்.

உண்மைதானே; இதற்கெல்லாம் அவர் பதில் சொல்லித்தானே ஆகவேண்டும். இதைப் பற்றி அவரையே கேட்டேன் ஒருநாள். "ஆமாம்! நான் அப்படித்தான் சொல்கிறேன். நான் சொல்வதெல்லாம் உண்மைதானே! உண்மையைச் சொன்னுல் அது Exaggeration ஆகுமா? கம்பன் ஒருவன்தான் உண்மையான கவிஞன்; கல்கிதான் சிறந்த வசனகர்த்தா; கோகிலகான M. S. சுப்புலக்ஷ்மிதான் நல்ல சங்கீத விதூஷி என்பதில்

இந்த விமர்சகர்களுக்கு கோபம் இல்லை. டி.கே.சி ஏன் இப்படிச் சொல்கிறார் என்பதில்த்தான் கோபம். ஆம்! பெண்சாதியைப் புருஷன் அடித்தால் அதனால் பெண்சாதிக்குப் புருஷன் பேரில் கோபம் இல்லை. அதைப் பார்த்து அடுத்த வீட்டுக்காரி சிரித்தால்த்தானே கோபம்" என்று நையாண்டியுடனே பதில் சொன்னார்.

தமிழ் வசனத்தைப்பற்றி டி. கே. சி யின் அபிப்பிராயம் என்ன என்பதை நாம் கொஞ்சம் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்.

* "தமிழில் பாஷை தோன்றிய நாளிலிருந்தே வசனம் உண்டென்று சொல்லவேண்டும். தமிழில் மாத்திரம் அல்ல, பேசப்படுகிற எந்தப் பாஷையிலுமே வசனம் என்பது எப்போதும் உள்ளது. பாஷை எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பாஷை என்றால் மக்கள் உள்ளத்தில் நிகழ்வதை வெளிப்படுத்துவதுதான். கோபமோ, ஆத்திரமோ, சோகமோ, கருணையோ, மனசில் உண்டானால் அதை அப்படியே வாய்திறந்து மனிதன் சொல்லி விடுகிறான். அவ்வாறு சொல்வதே வசனம்.

"தமிழ் மக்கள் தங்கள் உள்ளக்கிடைகளை ஆயிரக்கணக்கான வருஷங்களாக வெளியிட்

* கனையாழியின் கனவு - முகவுரை.



10957

டிருக்கிறார்கள். எத்தனையோ விதத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி வெளியிடுவதிலெல்லாம் ஒரு தொடர்பு, ஒரு முறை நாளடைவில் ஏற்பட்டு தமிழ் வழக்கு என்றும் ஒன்று உண்டாகி யிருக்கிறது. இந்தத் தமிழ் வழக்கு என்பது தமிழ் மக்கள் நாவிலேயே இருக்கிறது. உண்மையில் தமிழ் பாஷையே ஆடவர் பெண்டிர் பிள்ளைகளான தமிழ் நாவிலே கிடப்பதுதான். நாவைவிட்டு ஏடுகளில் மாத்திரம் கிடக்குமானால் அது தமிழ் அல்ல. பாஷைகளின் அமைப்பையும் மர்மத்தையும் ஆராய்ந்தறிந்த நிபுணர்கள் 'ஒரு வார்த்தையோ, முடிபோ வழக்கிழந்து விட்டது என்றால், காரியத்தை சாதிக்க அதனால் முடியவில்லை என்று ஆகும். ஆகவே அது ஒழிந்து போனது நல்லதே' என்று சொல்லுகிறார்கள்.

"இப்படித் தமிழில் எத்தனை எத்தனையோ வார்த்தைகள் வழக்கிழந்து போயிருக்கின்றன. புதிதான வார்த்தைகளும் முடிவுகளும் நெடுகிலும் பாஷைக்குள் வந்து புகுந்து தங்கி இருக்கின்றன. புறப்பொருள் வெண்பா மாலையிலுள்ள பாடலை ஒரு புறமும் திருவரங்கக் கலம்பகத்துப் பாடலை மறுபுறமும் வைத்துப்பார்த்தால், தமிழ் பாஷை எவ்வளவு தூரத்துக்கு வேறுபட்டிருக்கிறது என்பது சாமான்யமாகத் தெரிந்துவிடும். வேறொரு பாஷைதானோ என்று பழந்தமிழில் பழகாதவர்கள் சந்தேகிக்கவும் கூடும். இருந்தா

லும் மாறுபாடுகளுக்கு ஊடெல்லாம் தமிழ்ப் பண்பு என்ற தனித்த பண்பொன்று தொடர்ந்து வந்திருக்கிறது. இந்தப் பண்பு, வழக்கில் உள்ள சொற்களிலெல்லாம், இதர பாஷைகளிலிருந்து வந்த திசைச் சொற்களில் எல்லாம்கூட ஊறி நின்று தமிழர் செவிக்குச் சுவை தந்திருக்கிறது. தமிழ்ப் பண்போடு கூடிய சொல்லுக்கே - பேச்சானாலும் சரி, எழுத்தானாலும் சரி-இனிமையோ வேகமோ ஏற்படக்கூடும். இப்படிப்பட்ட தமிழ் வசனத்தை எழுபது வருஷத்துக்கு முன்பே மேல் நாட்டார் ஒருவர் நன்றாகத் தெரிந்து அனுபவித்திருக்கிறார். தமிழ் அகராதிக்கெல்லாம் அதிகார கர்த்தா என்று சொல்லக்கூடிய வின்ஸ்லோ ஆசிரியர் தன்னுடைய தமிழ் அகராதியின் முகவுரையிலே தமிழ் வசனத்தைப்பற்றிச் சொல்லி வருகையில் 'தமிழின் வளத்தையும் வலிமையையும் கருதும்போது அதோடு ஒப்பிடுவதற்குத் தற்கால ஆங்கில ஜெர்மன் பாஷைகளைத்தான் சொல்லவேண்டும்' என்று அழுத்தமாகச் சொல்லுகிறார். 'பழகு தமிழ்ச் சொல்லருமை' என்று புலவர் ஒருவர் உடல் புளகித்துச் சொல்லியிருக்கிறார்".

இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான் டி. கே. சி மக்கள் பேசும் பாஷையில் எழுதும் கல்கியின் வசனத்தை 'வசனம்' என்கிறார். ஏனைய மக்களுக்கும், ஏனைய பாஷைக்கும் இல்லாத, தமிழ் மக்களுக்கும், தமிழ்

பாஷைக்குமே உரிய தனித்த பண்பைக் காட்டு வன அவர் வசனம் என்கிறார். இதையெல்லாம் வெறும் Exaggeratian என்று யாராவது ஒதுக் கித் தள்ளிவிட முடியுமா? என்ன?

டி. கே. சி எதையுமே Exaggerate பண் ணுகிறவர்தான் என்பதற்கு நண்பர்கள் அவரு டைய 'பச்சைத்தண்ணீர் சிகிச்சை முறை'யை யும் அடிக்கடி உதாரணமாக எடுத்துக்காட்டு வார்கள். "என்ன சார்! உங்கள் டி. கே. சி எதற்கெடுத்தாலும் பச்சைத்தண்ணீர் ஸ்நானம், ஸ்நானம் என்று உயிரைவிடுகிறாரே? இது சாத்தியமா சார்" என்று நொந்துகொண்டார் ஒரு நண்பர். இவருடைய அறியாமையைக் கண்டு நாம் நொந்துகொள்ள வேண்டியிருக் கிறதே யொழிய டி. கே. சி யின் சிகிச்சை முறை யைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதே யில்லை. பச்சைத்தண்ணீர் ஸ்நானத்தின் மகிமையைப் பற்றி இன்று மேல்நாட்டார் பெரிய பெரிய புரா ணமே பாடியிருக்கிறார்கள். 'Dr. Kuhnee's System of Water Cure' எல்லாம் நாம் படித்த வைதான். ஆனால் நம்பிக்கையோடு இந்த வைத் தியம் செய்ய முனைகிறதில்லை. டி. கே. சி யோ அவருக்கு எப்போதும் உண்டான துணிச்சலுட னேயே இந்த சிகிச்சை முறையையும் துணிந்து கையாண்டு பார்த்தார். முறையில் வெற்றியை யும் கண்டார். அதைவிடாப்பிடியாகப் பிடித்

துக்கொண்டு பிறர்க்கும் உபதேசிக்கிறார். அவ்வளவுதான்.

டைபாயிட் காய்ச்சலா? அல்லது மலேரியா சுரமா? வைசூரியா அல்லது டயாபடிக் கார் பங்கிளா? ஜலதோஷமா அல்லது மண்டையிடியா? வயிற்று வலியா அல்லது கீல்வாதமா? எல்லா வற்றிற்கும் ஒரே மருந்துதான் அவரிடம். எல்லாம் பச்சைத்தண்ணீர் ஸ்நானம்தான். குடம் குடமாகத்தான் தலையில் தண்ணீர் கொட்ட வேண்டும். வியாதிக்குத் தக்கபடி தண்ணீர் குடங்களின் எண்ணிக்கைதான் கூடும் குறையுமே ஒழிய மருந்தென்னவோ ஒரே மருந்துதான். இதுதான் அவர் செய்யும் தீவிரப் பிரசாரம். இதைப்பற்றி 'தமிழ் வசனகர்த்தர்' கல்கியே ஒரு நல்ல குறிப்பைக் கொடுத்திருக்கிறாரே!

* "ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியாரைப்பற்றி விகடன் நேயர்கள் ஏற்கனவே நன்கறிவார்கள். சென்ற வருஷம் மழைகாலத்தில் ஒருநாள் அவருக்கு உடம்பு சுரமென்றும், படுத்த படுக்கையாய் இருக்கிறார் என்றும் கேள்விப்பட்டதின்மேல், அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவர் வீடு அடைந்ததும் நான் கண்ட காட்சி - அதைக்குறிப்பிட 'திகைப்பு'

---

* ஆனந்தவிகடனில் வெளிவந்தது

'பிரமிப்பு' என்பனவெல்லாம் சரியான வார்த்தைகள் அல்ல. அப்போது 'சோ' வென்று மழை பெய்து கொண்டிருந்தது. கம்பளிச் சட்டை போட்டுக்கொண்டு போயிருந்தேன் நான். ஆனால் சுரமாய்க் கிடப்பவர் என்று நான் கேள்விப்பட்ட கனவான் செய்ததென்ன? முற்றத்தின் மூலையில் மாடியில் பெய்த ஜலம் கொட கொட வென்று தாரையாய்க் கொட்டிக்கொண்டிருந்தது. அந்தத் தாரையில் அவர் சாவதானமாக உட்கார்ந்து ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்!

"ஸ்நானம் முடிந்ததும் 'உங்களுக்குச் சுரம் என்று சொன்னார்களே!' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். 'ஆமாம்; சுரந்தான். நேற்று 104 டிகிரி இருந்தது. இன்று 102 டிகிரி இருக்கிறது' என்றார். 'பின், அதற்குள் பச்சை ஜலத்தில்........' என்று நான் இழுக்க

'ஆமாம் சுரத்துக்கு இது சிகிச்சை. குளிர்ந்த ஜல ஸ்நானத்தினால்த்தான் நேற்றைவிட இன்று குறைந்திருக்கிறது. நாளைக்குப் பூராவும் சொஸ்தமாகி விடும்' என்று முடித்தார்.

"பிறகு,தமது 'மலேரியா' சுரத்தின் கதையை ஆரம்பித்தார். பதினைந்து வருஷ காலம் மலேரியாவினால் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், எவ்வ

ளவோ சிகிச்சைகள் செய்தும் பயனில்லை என்றும், கடைசியாக குளிர்ந்த ஜல ஸ்நானத்தின் மூலந்தான் மலேரியாவை வெற்றிகொண்டதாகவும் கூறினார்.

"இவ்வளவுக்குப் பிறகு என்னுடைய பெருமையை நான் சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியுமா? என்னுடைய ஜலதோஷத்தின் சரித்திரத்தை எடுத்துவிட்டேன். ஸ்ரீமான் முதலியாருடைய முகத்தில் சந்தோஷம் தாண்டவம் ஆடிற்று. தம்முடைய ஜலசிகிச்சை முறையைச் சோதனை செய்வதற்கு இவ்வளவு நல்ல பாத்திரம் கிடைத்ததே என்று போலிருக்கிறது. 'தினம் இரண்டு தடவை காலையிலும் மாலையிலும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து வாருங்கள். ஜலதோஷம் நீங்காவிட்டால் என்னைக் கேளுங்கள்' என்றார் அவர். 'ஆள் உயிரோடிருந்தாலல்லவா உங்களைக்கண்டு கேட்பதற்கு?' என்றேன். பிறகு குளிர்ந்த ஜலஸ்நானம் சம்பந்தமாக என்னுடைய அனுபவங்களைக் கூறினேன். ஒரு தரம் குளிர்ந்த தண்ணீரில் குளித்து ஜலதோஷம் அதிகமாகி குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்துக்கே முழுக்குப் போட்டதை எல்லாம் சொன்னேன். 'ஸார்! நீங்கள் ஒருதடவை ஸ்நானம் செய்துவிட்டு நிறுத்தியதுதான் தவறு, தொடர்ந்து மறுபடியும் மறுபடியும் செய்திருக்கவேண்டும் என்றார் ஸ்ரீமான் முதலியார்'.

"நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அவரோ நான் அங்கிருக்கும் போதே மறுபடியும் சென்று முற்றத்தின் மூலையில் உட்கார்ந்து மழைத்தாரையில் ஸ்நானம் செய்துவிட்டு வந்தார். அல்லாமலும் வீட்டிலுள்ள ஏழுவயதுப் பெண் குழந்தையைக் கூப்பிட்டார். 'அம்மா! உனக்கு சுரம் கிரம் வந்தால் என்ன செய்வாய்?' என்று கேட்டார். 'குளிர்ந்த ஜலத்தில் குளிப்பேன்' என்றது குழந்தை. இதற்குப்பிறகு என் உயிருக்குத் துணிந்தேன். தும்மலுடன் வீட்டுக்குள் நுழைந்தவன் கொட்டுகிற மழையில் நேரே குழாயடிக்குச்சென்று உட்கார்ந்தேன். அன்று என் வீட்டில் ஏற்பட்ட அல்லோல கல்லோலத்தைச் சொல்ல முடியாது. ஏறக்குறைய ஒன்பது மாதம் ஆகிறது தினந்தோறும் தவறாமல் இரண்டு தடவை குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்துவருகிறேன். உயிரோடிருக்கிறேன் என்பது வெளிப்படை. குளிர்ந்த ஜலம் வெற்றி பெற்றுவிட்டது. ஜலதோஷத்துக்குத் தோல்விதான்"

இதுதான் **கல்கியின் குறிப்பு**, என்ன? தமிழ் வசனமும் தண்ணீர் ஸ்நானமும் எப்படி இணைந்து போய்விடுகிறது பார்த்தீர்களா?

# சமய தத்துவம்

சிலமாதங்களுக்கு முன் ஒரு பிரசங்கம் கேட்க நேர்ந்தது. பேசியவர் ஒரு சைவசமயப் பிரசாரகர். பொருளோ, 'கடவுளைக்காட்டுகின்றார்' என்பதாகும். ஏதடா! இத்தனை நாளாகக் கடவுள் நம் கைக்குள் அகப்படாமல் தப்பித்துக் கொண்டே இருக்கிறாரே, இன்றாவது அவரைப் பிரசங்கி காட்டியதும், கைப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ளலாம், என்றுதான் போனேன். 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' என்று நாவுக்கரசர் எல்லாம் கையை விரிக்கிற போது இவர் எளிதாகக் கடவுளைக்காட்டுகிறதென்றால் அதில் எனக்கெல்லாம் உத்சாகம் இருந்ததில் வியப்பில்லை அல்லவா! ஆனால், பிரசங்கத்தில் எவ்வளவு ஏமாற்றம். பிரசங்கியார் அழகாக ஞானசம்பந்தப் பெருமானின் கதையை விஸ்தாரமாகவே எடுத்துரைத்தார். சீர்காழியில் சிவ பாத இருதயர் மகனாக அவர் அவதரித்தது, மூன்று வயதில் தந்தையுடன் நீராடச் சென்றது, தந்தை நீரில் மூழ்கியபோது 'அம்மையே அப்பா' என்று அழுதது, மூவுலகிற்கும் தாயாகிய பார்வதி தேவி குழந்தைக்குப் பாலூட்டியது, குழந்தையாகிய சம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்று

பாட ஆரம்பித்தது, 'பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே!' என்று வான வீதியைச் சுட்டிக் காட்டியதை எல்லாம் சாங்கோபாங்கமாக விளக்கித்தான் கூறினர். இப்படிப்பட்ட சிவபெருமானே முழுமுதற் கடவுள், அவனைச்சுட்டிக்காட்டுகின்றார் சம்பந்தர் என்ற அளவிலே பிரசங்கம் முடிந்துவிட்டது. இதுதானு கடவுள்த் தத்துவத்தை விளக்குகின்ற முறை, இதற்குத்தானு 'கடவுளைக் காட்டுகின்ருர்' என்றெல்லாம் விளம்பரம் என்று எண்ணிய போதுதான் சமயதத்துவத்தைப் பற்றிப் பேசுவது அவ்வளவு லேசான காரியம் இல்லை என்று தெரிந்தது.

ஆனல் டி. கே. சி யிடம் போய்க் கொஞ்சம் பேசிப் பாருங்கள். எவ்வளவோ சிக்கலான சமய தத்துவங்களை யெல்லாம் எவ்வளவு எளிதாக அவர் சொல்லிவிடுகிருர் என்று தெரியும். 'நாம் வாழும் இந்த உலகம், மண், தண்ணீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆகியது. இந்த அகண்டமான பிரபஞ்சத்திலே முதலில் எங்கும் ஆகாயமே வியாபித்திருந்தது. அந்த ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து தண்ணீரும், தண்ணீரிலிருந்து நிலமும் தோன்றின என்று அறிவாளிகள் சொல்கிருர்கள். இப்படித்தோன்றிய பஞ்சபூதங்களையும் பாகுபாடு செய்துகொண்டே போனல்

பகுக்கப்பட முடியாத ஒரு நிலை வரும். அந்த நிலையில் உள்ள பொருளைத்தான் 'அணு' என்று குறிப்பிடுகிறோம். அந்த அணுவும்கூட எல்லாம் வல்ல இறைவன் கட்டளைப்படியேதான் இயங்குகிறது. அந்த அணுவின் உடம்பாகவும் உயிராகவும் உணர்ச்சியாகவும் நின்று தொழிற்படும் சக்தி ஒன்றிருக்கிறது. அணுவுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து, இவ்வுலக காரியங்களையெல்லாம் நடத்திவைக்கிறது அந்தச் சக்திதான். அதையே பெரியவர்கள் கடவுள் என்று சொல்லுவார்கள். இப்படியெல்லாம் கடவுள் தத்துவத்தை நல்ல பீடிகையோடு விளக்கிப் பின்னால்,

**வான் நின்(று) இழிந்து வரம்பிகந்த**
**மாபூதத்தின் வைப்(பு) எங்கும்**
**ஊனும் உயிரும் உணர்வும் போல்**
**உள்ளும் புறத்தும் உளன் என்ப;**

என்ற கம்பர் பாட்டைச் சொல்வார்.

**வான் கெட்டு மாருதம் மாய்ந்து**
**அனல் நீர் மண் கெடினும்**
**தான்கெட் டலின்றிச்**
**சலிப்பறியாத் தன்மையனுக்கு**
**ஊன்கெட்டு, உயிர்கெட்டு**
**உணர்வு கெட்டு என் உள்ளமும்போய்**
**நான் கெட் டவா பாடித்**
**தெள்ளேனம் கொட்டாமோ!**

என்ற திருவாசகத்தையும் மேற்கோளாகக் காட்டி மேலும் மேலும் விளக்குவார் விஷயத்தை. இவ் வளவுதானு? இல்லை. இன்னும்

'சாணினும் உளன், ஓர்தன்மை
அணுவினைச் சத கூறிட்ட
கோணினும் உளன்'

என்றெல்லாம் மறுபடியும் கம்பரையே சான்று காட்டுவார். பகுக்க முடியாதது அணு என் றில்லை அதையும் பகுத்து 'எலக்டிரான்ஸ்' 'புரோ டான்ஸ்' என்றெல்லாம் நிர்ணயித்து அந்த அணு விற்கும் அணுவாய் விளங்கும் 'கோணி'லும் இறைவன் இயங்கும் தன்மையை எல்லாம் அவர் விளக்கிஞல் அந்த விஷயத்தைப் பற்றி முடிவான தீர்ப்பே சொல்வது போலத்தானிருக்கும். அவ்வளவு எளிதாகப் பெரிய விஷயத்தை எடுத் துச் சொல்லிவிடும் திறன் அவரிடம் உண்டு.

கடவுள் தத்துவத்தை விளக்கியபின் கடவுளுக்கும் நமக்கும் உள்ள சம்மந்தம் தெரிய வேண்டுமா?

அதற்கும் வரும் ஒரு பாட்டு.

விரகில்த் தீயினன்
பாலிற்படு நெய்போல்
மறைந்து நின்றுளன்
மாமணிச் சோதியன்

உறவுகோல் நட்(டு)
உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக்
கடையமுன் நிற்குமே

என்ற பாட்டைப் பாடுவார். 'நாம் கடவுளுடனேயே ஒன்றியிருக்கிறோம். வேறாகத் தனித்து நிற்கவில்லை என்ற உண்மையைச் சதா மனசில் வைத்து ஆர்வத்தோடும் ஆனந்தத்தோடும் சிந்திப்போமானால் மறைந்து நின்றுள்ள மாமணிச் சோதியான் முன்னிற்கும்' என்றெல்லாம் விஷயம் விளக்கப்படும்.

இப்படிப் பெரிய சமயதத்துவங்களையெல்லாம் நன்றாக அறிந்தவர் நம்மையெல்லாம் போலவே உருவவழி பாட்டிலும் ஈடுபடுவார்.

ஆலயங்கள் ஏனையா
அபிஷேகங்கள் ஏனையா
கோலங்கொடிகள் ஏனையா
கொட்டுமுழக்கம் ஏனையா
பாலும் பழமும் வைத்து நிதம்
பணிந்து நிற்பதேனையா
சீலம் பேணும் உள்ளத்தை
தெய்வம் தேடி வாராதோ ?

என்றெல்லாம் கேள்வி கேட்கமாட்டார். உருவ வழிபாட்டைப்பற்றி அவருடைய எண்ணங்களை நான் கூறுவதைவிட முத்தொள்ளாயிரத்தில் ஒரு பாட்டுக்கு முன்னுரை எழுதும் முகத்தால்

அவர் கூறுவதையே நேரில் தெரிந்து கொள்வதே நல்லது.

"சமயத்தில் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒன்று, தத்துவ உண்மை; அதாவது கடவுள், இறுதியில்லாத இடமெங்கும் பரவி நிற்கிறான். உயிர் உள்ளன, இல்லாதன, ஆகிய எல்லாப் பொருள்களிலும், நின்று ஆட்டுகிறான். இந்த உண்மையில் திளைத்து ஆனந்திப்பது ஒருபுறமிருக்க, வழிபாட்டுக்குரிய உருவத்தில் ஈடுபட்டு பேரானந்தம் கொள்கிறது சமயத்தின் மற்றைய முடிபான உண்மை.

"நம்முடைய மூதாதைகள் முதலில் சொன்ன உண்மையையும் இரண்டாவதாகச் சொன்ன அடையாளத்தையும் அபூர்வமாய் அனுபவித்திருக்கிறார்கள்.

"முருகன் வழிபாடு மிகப்பூர்வமான காலத்திலிருந்து தமிழ் மக்களது இதயத்தைக் கொள்ளை கொண்டிருக்கிறது. இறுதியில்லாத நீலவானத்தை நீலத்தோகை விரித்தாடும் மயில் என்று உருவகப்படுத்தினார்கள். எங்கும் நிறைந்த கடவுள்த் தத்துவத்தை முருகன் என்று உருவகப் படுத்தினார்கள். இந்த முருகனாகிய மூர்த்தியில் ஈடுபட்டுப் பாடிய அரிய பாடல்கள் எண்ணிறந்தன. உதாரணம்:

வெட்டுங் கடாமிசைத்
தோன்றும் வெங் கூற்றன்
விடும் கயிற்ருல்க்
கட்டும் பொழுது
விடுவிக்க வேண்டும்
கராசலங்கள்
எட்டும் குலகிரி
எட்டும் விட்டோட எட்
டாத வெளி
மட்டும் புதைய
விரிக்கும் கலாப
மயூரத் தனே!

என்பது கந்தரலங்காரப் பாட்டு.

"முத்தொள்ளாயிர ஆசிரியர் முருகன்மீதுள்ள பக்தி பரவசமான தமிழ்ப் பாடல்களைப் பாடிப் பாடித் திளைத்தவர். அவர் வாக்குமூலத்திலிருந்து தான் முருகனைப் பற்றிய பாடல்கள் பல இருந் தனவென்று தெரிகிறது. அவை அபூர்வ பக்தி பாவம் கொண்டவை என்றும் தெரிகிறது. முருகன் என்றும் மயில் என்றும் சொல்லும் போது, இறுதியில்லாத இடமெங்கும் நிறைந்த கடவுள்த் தத்துவத்தையே குறித்து ஈடுபட்டார்க ளென்பதும் தெரியவருகிறது."

முத்தொள்ளாயிர ஆசிரியருக்கு முருகனிடத் தில் உள்ள பக்தியைவிட உளம் நிறைந்த பக்தி யுடையவர் டி. கே. சி' என்ருல் அது மிகையல்ல.

டி. கே. சி நல்ல சைவர். அவர் இட்டுக் கொள்ளும் சந்தனப்பொட்டே அதற்குச் சான்று பகரும். என்றாலும் பிற மதங்களையோ சமயக் கொள்கைகளையோ கொஞ்சமும் வெறுப்பவர் அல்லர். அப்பர் தேவாரத்தில் எவ்வளவு ஈடு பாட்டோ அவ்வளவு ஈடுபாடு நம்மாழ்வார் பாசுரங்க ளிலும் அவருக்கு உண்டு. "வேதங்கள் ஐயா! என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!" என்று சிவபெருமானை மாணிக்கவாசகருடன் சேர்ந்து கூவியழைப்பார் ஒரு முறை. உடனே

பேறுதரினும், பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன் கண்டாய்!

என்று கண்ணன் கழல் இணைகளையே கட்டிப் பிடிப்பார். கருவை வெண்பா அந்தாதிப் பாட்டை எவ்வளவு உணர்ச்சியோடு பாடிக் காட்டுவாரோ அதே உணர்ச்சியோடு திருவரங்கக் கலம்பகத்துப் பாட்டையும், பாடிக்காட்டுவார். அவர் முன்னிலை யில் நாம் நம்மையே மறந்துவிடுவோம். பால் வண்ணனும் கடல் வண்ணனுமோ அவர் நாவில் போட்டி போட்டுக்கொண்டே நடம்புரிவார்கள்.

கடைசியாக ஒரு வார்த்தை. சென்ற சில மாதங்களுக்கு முன்தான் திருநெல்வேலி ம. தி. தா. இந்து கலாசாலையில் நடந்த நன்கொடையாளர் தினத்தில் ஜில்லாக் கலெக்டர் திவான்பஹதூர் ஸ்ரீ வி. என். விஸ்வநாத ராவ் தலைமையில்

டி. கே. சி பேசியபோது, சமயதத்துவங்களையெல்லாம் மாணவர்கள் எவ்வாறு உணர வேண்டும், அதற்கு நமது கலாசாலைகள் எல்லாம் எப்படிப்பட்ட கல்வியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி விரிவாகச்சொல்லி விட்டு, கடைசியாக ஷேக்ஸ்பியர் நாடகபாத்திரங்களில் ஒருவராகிய கார்டினல் உல்சி (Cardinal Wolsey) சொல்லும்

Had I but serv'd my God with half the zeal
I serv'd my King, he would not in mine age
Have left me naked to mine enemies

என்ற அடிகளை ஆங்கிலத்திலும் தமிழிலுமாக விளக்கிவிட்டு, பின்னால் அதற்கு நேரிடையான கருத்துடைய

சொக்கருண்டு துணையென்றிராய்! அவர்
பக்கல் அன்பு பழுத்ததென்று ஓர்கிலாய்
மக்கள் என்றும், மனையென்றும், வாழ்வென்றும்
ஒக்கல் என்றும் உருகும் என் நெஞ்சமே!

என்ற பதிற்றுப்பத்தந்தாதிப் பாட்டை அவருக்கென்று உரிய பாணியிலேயே பாடி விளக்கிய போது அவருடைய கனிந்த பக்தி, முதிர்ந்த அறிவு, சமய ஞானம் எல்லாம் நன்றாக விளங்கிற்று. தலைவரும், டி. கே. சி யே 'தமிழ்நாட்

டின் ஞானகுரு,' 'எனது குருநாதர்' என்றெல்லாம் முடிவுரையில் பாராட்டியபோது அது மிகவும் பொருத்தமானதென்றே பட்டது.

சமயதத்துவங்களை விளக்குவது கடினமான காரியந்தான். குப்தமான தத்துவங்களையெல் லாம் உள்ளடக்கிய நடராஜரது திருநடனத்தை யெல்லாம் நாம் லேசாக அனுபவிக்க முடியாது தான். ஆனல் டி. கே. சி யையும் அவர் சொல் லும் பாடல்களையும் மட்டும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டோமே யானல் இந்தக் கஷ்ட மான காரியங்களும் எளிதாகவே முடிந்துவிடும் என்றுதான் தோன்றும். முயன்று பார்த்து முடிவுக்கு வருவதே நல்லதல்லவா !

# டி. கே. சி யின் புத்தகங்கள்

டி. கே. சி ஒரு பெரிய ஆசிரியர் அல்ல - ஆசிரியர் என்றால் - பெரிய புஸதகங்கள் எழுதுபவர் என்று மட்டும் அர்த்தம் இருந்தால். முப்பது வருஷகாலமாகத் தமிழ்க் கவிதைகளைப் படித்துப்படித்து, தாம் இன்பம் அடைந்ததோடு மட்டும் இல்லாமல் பிறரையும் இன்பக் கடலிலே ஆழ்த்திவந்தவர், வருகிறவர் அவர். என்றாலும் தமிழ்க் கவிதையைப்பற்றி எழுதி, அப்படி எழுதியதைப் படித்து ஒருவர் கவிதையை அனுபவித்து விடலாம் என்பதில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. ‘எழுத்தைப் படிப்பதைவிடப் பேச்சைக் கேட்பதில்த்தான் பயன் உண்டு’ என்பதுதான் அவருடைய திடமான நம்பிக்கை. இதுவரை அவர் புஸ்தகங்கள் ஒன்றும் எழுதாமல் இருந்ததற்குக் காரணமும் இதுவே.

இன்று அவர் பெயரால் நான்கு ஐந்து புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. இதய ஒலி, கம்பர் யார்? கம்பராமாயணப் பதிப்பு, முத்தொள்ளாயிரம் என்பவைதான் அவை. இதயஒலி, கம்பர் யார்? என்ற புஸ்தகங்கள், புஸ்தகங்களாக அச்சிட வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டவை அல்ல. பலதடவைகளில் பத்திரிகைகளுக்கோ

அல்லது ரேடியோப் பிரசங்கங்களுக்கோ எழுதப் பட்டவை அவை. அக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டோர் புதுமைப் பதிப்பகத்தார்.

'இதயஒலி' தமிழர்கள் அனைவரும் படிக்க வேண்டிய புஸ்தகம். இந்த ஒரு புஸ்தகத்தின் மூலமாக டி. கே. சி அவர்களின் இதயத்தை நேரில் பார்க்கலாம். 'இதயத்திலே எழுகின்ற உணர்ச்சிகளைப்பிறர் அனுபவிக்கும்படி எடுத்துக் கூறுவது மிகச் சிலருக்கே வாய்த்த ஒரு ஆற்றல் ஆகும். இவ்வாற்றல் வெறும் சாமர்த்தியமன்று; ஆழ்ந்த உண்மை அனுபவத்தினுலும் அதன் வாயிலாகப் பிறக்கும் இதயக் கனிவினுலும் சித்திப்பதாகும். இந்த ஆற்றல் வாய்ந்தவர்கள் நமது நாட்டிலே மிக அரியர். இவர்களுள் சிறப்பாகக் கூறத்தக்க பெரியார் டி. கே. சி, என்ற முன்னுரையுடன் புத்தகம் ஆரம்ப மாகிறது.

"இந்தப் புஸ்தகம் டி. கே. சியின் வசன நடைக்கு ஒரு எடுத்துக்காட்டு. தமிழ் வசனம் எப்படியிருக்கவேண்டும் என்றுல் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று இந்தப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டிவிடலாம். மேலும் அவர் எழுதும் உரை நடை தனிநடை; அதில் சிருஷ்டியூற்று இதயத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு வருகிறது. தமிழ் இலக்கிய நிறைவையும் ஆங்கில வசனத்

தின் கதியையும் பெற்றுவிட்டது. அதில் இதயத் துடிப்பைக் காணலாம். கருத்தோ களங்கமற்று தெள்ளத் தெளிந்த தெளிவுடன் தவழ்கிறது. எளிய சொற்கள் உண்மையையே பேசி தங்கள் கடமையை நிறைவேற்றுகின்றன. சொல்தொடரில் ஹிருதய ரீங்காரமே கேட்கிறது. கருத்தை மூடி மூடிவைக்கும் நீண்டவாக்கியங்கள் இந் நூலில் மருந்துக்கும்கூடக் கிடையாது. இதில் பண்டிதர்களின் இருண்ட பாசிநடை இல்லை. இயற்கையே எழுந்து நின்று பேசுவதுபோலத் தான் தொனிக்கிறது அவருடைய வசன எழில், வசன லாவகம்.

"அவர் எழுதியிருக்கும் 'இதய ஒலி' என்ற ஒப்பற்ற ஆராய்ச்சி நூல் எவ்வளவு ருசியாய் இருக்கிறது. ஆராய்ச்சியை இவ்வளவு தெளிந்த எளிய நடையில் யாராவது இதுவரை எழுதி யிருக்கிறார்களா? ஆழ்ந்த கருத்துக்கள் எவ்வளவு ஆழத்திலிருந்து வெளிவருகின்றன? இலக்கிய ஆராய்ச்சியை இவ்வளவு சுத்தமாக இவ்வளவு அழகாக ஒருவரும் இதுவரை இன்பமான தெளிந்த வசனநடையில் எழுதியதாகத் தெரிய வில்லை. இதய ஒலியிலுள்ள இருபது கட்டுரை களும், இலக்கியத் தேன்கூடாக அமைந்து இதயத் தேனை அள்ளி வருஷிக்கின்றன. தமிழ்க் கவியிலே மனம் ஒன்றி மலர்ந்து எல்லோரையும் தமிழ்க் கவியினிடத்தே மோகமும் வெறியும்

கொள்ளச் செய்கின்றன. டி. கே. சி யின் வசன நடை, பேசும் நடை; இரு இதயங்களை உணர்ச்சிக் காந்தத்தால் இழுத்து இணைக்கும் நடை; உண்மையை ஒலிக்கும் நடை; மொழிக்கு மொழி தித்திக்கும் நடை. இதய ஒலி, இதய ஒளி வீசுகிறது. சொற்கள் ஐம்புலன்களின் அனுபவங்களையும் வடித்து இலக்கியக் கோபுரம் எழுப்புகின்றன." என்று செட்டிநாட்டு இலக்கிய ரஸிகர் வி. ஆர். எம். செட்டியார் எழுதுகிறார். இதைவிட விரிவாக நான் ஒன்றும் சொல்லவிரும்பவில்லை.

'கம்பர் யார்?' நல்ல கேள்விதான். ஆனால் பதில் சொல்வதுதான் கொஞ்சம் கஷ்டம். இந்தக் கேள்விக்குச் சரியான பதில் சொல்லும் ஒருவர் இன்று தமிழ்நாட்டில் (ஏன்? வேறு எந்த நாட்டில் இருக்கக்கூடும்) உண்டென்றால் அது டி. கே. சி தான். கம்பர் கண்ட உலகக் காட்சிகள், மக்கள் இயல்பைக் கம்பர் உணர்ந்த முறை, கம்பர் காட்டும் நாடகப்பண்பு, உடல் வனப்பில் அவருக்கிருந்த ஆர்வம், கம்பர் சொல்லும் நீதிநெறி, அவர் கண்ட அவதார தத்துவம் எல்லாம் லேசாக ஒருவர் தெரிந்துகொள்ளக் கூடிய விஷயங்களா என்ன? விஷயங்கள் கொஞ்சம் கஷ்டமானவைதான், என்றாலும் டி. கே. சி அவைகளை அவருடைய தனிநடையில் லேசாக விளக்கிவிடுகிறார். கம்பர் யாரென்று நமக்குக் கூடத் தெரிந்துவிடுகிறது. புஸ்தகத்தைப்பற்றி

நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை. நீங்களே படித்துப் பாருங்கள் என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

'கம்ப ராமாயணமும்' 'முத்தொள்ளாயிரமும்' தமிழர்கள் படித்து அனுபவிப்பதற்காகப் பிரசுரிக்கப் பட்டவை. ஆராய்ச்சி செய்யவாவது அல்லது விமரிசனம் செய்யவாவது பிரசுரிக்கப்படவில்லை. ஆதலால் அவருடைய கம்ப ராமாயணப் பதிப்பைப் பற்றி நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை. முத்தொள்ளாயிரத்தில் அவருக்கு உள்ள ஈடுபாட்டைச் சொல்லாமல்போனால் டி. கே. சியைப்பற்றி முழுவதும் பேசியதாகவே ஆகாது.

தமிழர்கள் ரொம்பவும் துர்ப்பாக்கியர்கள். மிகவும் உயர்தரமான நூல்கள் சில பண்டைக் காலத்தில் இருந்துவந்து பிறகு தொலைந்துபோய் விட்டன. அப்படிப்பட்ட நூல்களில் முத்தொள்ளாயிரமும் ஒன்று. முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் பெயர் தெரியாது. காலமும் தெரியாது. செய்யுள்களின் போக்கைப் பார்க்கும்போது தான் மிகப்பழைய நூல் என்று தெரியவருகிறது. இரண்டாயிரம் வருஷத்திற்கு முந்தியதாயிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. காலம்தான் தெரியவில்லை. ஆசிரியர் பெயர்தான் தெரியவில்லை என்றால் போகட்டும். நூல் முழுவதுமாவது கிடைத்தால் போதும்.

அதற்கும் வழியைக் காணுமே! சேர சோழ பாண்டிய அரசர்களின், வீரம், கொடை, அழகு முதலிய அருமையான விஷயங்களை வைத்து ஒவ்வொரு அரசர் மேலும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் ஆக மூன்று தொள்ளாயிரம் பாட்டுக்கள் பாடப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஆம்; இரண்டாயிரத்து எழுநூறு பாடல்கள் பாடப்பட்டன. ஆனால் அந்த இரண்டாயிரத்துஎழுநூறு பாடல்களில் நமக்கு மிஞ்சியதெல்லாம் ஏறக்குறைய நூறுபாட்டுகள் தான். பழைய உரையாசிரியர்கள் எல்லாம் பேசுவதைப் பார்த்தால், இந்த நூல் சமீப காலம் வரையும் வழக்கத்தில் இருந்துவந்திருக்கவேண்டும் என்றும், எப்படியோ இரண்டாயிரத்து ஐந்நூற்றுச் சொச்சம் பாடல்கள் தொலைந்துபோய்விட்டன என்றும் தான் தெரிகிறது. இதைவிடத் தமிழனுடைய துர் அதிர்ஷ்டம் என்ன இருக்கக்கூடும்?

'கூடல்ப் பெருமானைக்
கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேல்க்
கூ(டு) என்று, கூடல்
இழைப்பாள் போல்க் காட்டி
இழையா(து) இருக்கும்
பிழைப்பில்ப் பிழை பாக்(கு)
அறிந்து!'

'காராட்(டு) உதிரம் தூஉய்,
அன்னை களன் இழைத்து

## டி. கே. சி

நீராட்டி நீங்கென்றால்
நீங்குமோ? போராட்டு
வென்று களங்கொண்ட
வெஞ்சினவேல்க் கோதைக்(கு)என்
நெஞ்சு களங் கண்ட
நோய்'

என்ற முத்தொள்ளாயிரப் பாட்டுகள் எல்லாம் தமிழ்நாட்டில் இன்று பிரசித்தம். பாட்டுக்களில் காணும் அற்புத பாவங்கள், சொல் அபிநயங்களை எல்லாம், பாட்டுக்களுக்கு டி. கே. சி கொடுத்திருக்கும் முன்னுரையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். பாட்டுக்களை அவர்கள் கொடுக்கும் 'செட்டிங்' இல்லாமல்ப் படித்தால் ஒன்றும் விளங்காதுதான். இந்த முற் குறிப்புகளே கவிதா லோகத்தின் கதவைத் திறந்துவிடும் வழிகாட்டிகளாக இருக்கின்றன. அதன்பின்தான் கவிஞர் தங்கத்தட்டில் வைத்து நீட்டும் கவியமுதை ருசிக்க முடிகிறது. ஆம். ஆர அமர இருந்து ருசிக்கவேண்டியதைப்பற்றி இரண்டு மூன்று பக்கங்களில் சொல்ல முடியுமா என்ன?

# பழைய நினைவுகள்

ஒருவருக்கு வாழ்க்கையில் ரஸமான சம்பவங்கள் பல நடப்பது சகஜம். ஆனால் அந்தப் பழைய நினைவுகளை எண்ணி யெண்ணி அதிலேயே ஒரு ஆனந்தம் அடைவது எல்லோருக்கும் சாத்தியமானதல்ல. கலையுணர்ச்சி நிரம்பிய மனம் படைத்த ஒருவருக்கே அது சாலும். ரஸமான அனுபவங்கள் பல இருந்தாலும் அதை ரஸமாகச் சொல்லத் தெரியவேண்டாமா? அப்படிப் பழைய நினைவுகளை மற்றவர்கள் ரஸிக்கத் தக்க முறையில் சொல்லும் சக்திவாய்ந்தவர் டி. கே. சி. சில நினைவுகளைப் பார்க்கலாம்.

விளாத்திகுளம் திருநெல்வேலி ஜில்லாவின் வடகீழ்க் கோடியில் உள்ள ஒரு சிறு கிராமம். 1939ல் நான் அங்கு உத்தியோகம் பார்த்தேன். அப்போது டி. கே. சி சென்னையில் இருந்தார். நான் விளாத்திகுளம் சென்று சேர்ந்ததைக் குறித்துக் கடிதம் எழுதினேன். அவருக்கு அக் கடிதம் அவருடைய பழைய பால்ய நினைவுகளைத் தூண்டியிருக்கிறது - வந்தது கடிதம் மறு தபாலில் - அவருடைய நினைவுகளைத் தாங்கி.

"விளாத்திகுளம் ஒரு அந்தமான் தீவு என்று உத்தியோகஸ்தர்கள் சொல்வதுண்டு. ஆனால்

எனக்கு அந்த ஊரினிடத்தில் ஒரு பிரியம். எனக்குக் கல்யாணமான 1908-ம் வருஷம் ஒரு மாசகாலம், பலவிதமான உபசாரங்களுக்கெல்லாம் உள்ளாகி வசித்த இடம் அது. என்னுடைய அம்மான், தாங்கள் பார்க்கும் டிப்டி தாசில்தார் வேலையை அப்போது பார்த்து வந்தார்கள். ஏதோ கிடையாத மாப்பிள்ளை கிடைத்துவிட்டதுபோல் எண்ணி இல்லாத மாப்பிள்ளை உபசாரமெல்லாம் செய்து புரட்டி எடுத்துவிட்டார்கள் என்னை. அதை எப்படி மறக்கமுடியும்?

மேலும், மாப்பிள்ளை ஏதோ தீவாந்தரத்துக்குள் அகப்பட்டுவிட்டதாக எண்ண ஆரம்பித்துவிடக்கூடாதென்று எண்ணி அங்குள்ள புஸ்தகசாலையை அநேகமாக என் வசமே ஒப்புவித்துவிட்டார்கள் என்று சொல்லலாம். சாப்பிடுகிற நேரம் போக காலை எட்டு மணி முதல் சாயங்காலம்காப்பி சாப்பிடுகிற நாலரை மணி வரையும் புஸ்தக சாலையிலே இருந்துகொண்டு ஆங்கில ஆசிரியர்கள் தமிழ் ஆசிரியர்களோடு அளவளாவிக்கொண்டே யிருந்தேன். அவைகளில் பிற்காலத்திலும் நின்று உதவும்படி படித்த புஸ்தகங்கள் இரண்டு. பாஸ்வெல் எழுதிய ஜான்ஸன் வரலாறு ஒன்று. ஆர அமர இரண்டு காண்டங்களையும் படித்தேன். அதிலிருந்து ஆங்கில இலக்கியங்களைக் கருத்தூன்றிப் படிக்கும்படியான

முறை ஏற்பட்டது. மற்றப் புஸ்தகம் எது என்றால் அது தண்டியலங்காரம். விளாத்திகுளத்தில் தண்டியலங்காரம் இருந்தது 1908-ம் வருஷத்தில் என்றால், வியப்பாய் இருக்கும். தண்டியலங்காரத்தைப்பற்றித் தமிழ் ஆசிரியர்கள் பலவாகப் பேசியதைக் கேட்டதுண்டு. ஆனால் புஸ்தகத்தைப் பார்த்ததில்லை. அங்கேதான் முதன்முதலாகப் பார்த்தேன். அப்போதே மூலத்தில் விஷயம் இல்லை. உரையிலும் விஷயம் இல்லை என்று தெரிந்துகொண்டேன். ஆகவே மேற்கோள் செய்யுள்களை மட்டும் படித்தேன். தமிழ் இன்னது என்று தெரியவந்தது. தமிழ் பாஷையின் அழகையும், தூய்மையையும் வளத்தையும் கண்டபோது பாணதீர்த்தத்திற்குப் போயிருந்தபோது தெள்ளத் தெளிந்த தண்ணீர்ப் பெருக்கும் பாறைகளுக்கிடையே தாவியும் வட்டமிட்டும் வலசாரி இடசாரி பாய்ந்தும் போகிற அழகெல்லாம் மனசுக்கு முன் வந்தது. இருபது முப்பது கவிகளை அப்போதே மனப்பாடம் பண்ணிக்கொண்டேன். தமிழ்க் கவியை உய்த்துணர்வதற்கு அந்தக் கவிகள் இன்றைக்கும் உபயோகப்படுகின்றன. அடிக்கடி மேற்கோள்ச் செய்யுள்களை வாசித்து அனுபவிப்பதுண்டு.

*தாதளாவி வண்டு*
*தடுமாறும் தாமரைகொல்*

மாதர் விழி யுலவு
வாண் முகங் கொல்—யாதென்று
இருபாற் கவருற்(று)
இடையூசல் ஆடி
ஒருபாற் படாதென்
உளம்

என்ற பாட்டு அவைகளில் ஒன்று. நான் வாசித்து அனுபவித்த புஸ்தகம் புஸ்தகசாலையில் இன்னும் இருக்கும் என்று நம்புகிறேன். பிறகு ஒரு புஸ்தகம் எனக்கு வாங்கினேன். அது எப்படியோ எங்கேயோ போய்விட்டது. தொலைப்பதற்குக் காரணம் நானாகவே இருந்திருக்க வேண்டும். யாருக்காவது ஒன்றிரண்டு செய்யுள்களை வாசித்துக் காட்டியிருப்பேன். அவர் புஸ்தகத்தைப் படிக்க வாங்கிக்கொண்டு போயிருப்பார். அவ்வளவுதான், அதற்குச் சிறகு முளைத்திருக்கும். புஸ்தகம் வேறொன்று விலைக்கு வாங்க வேண்டும் என்று எண்ணியது பலதடவை. ஆனால் காலம் கடந்துகொண்டே வந்தது. கடைசியாக இரண்டு மாதத்திற்குமுன் இங்கே வந்திருந்தபோது மனசைத் திடப்படுத்திக் கொண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குப் போய் ரூ 1-14-0 க்கு தண்டியலங்காரம் ஒன்றை வாங்கிவிட்டேன். மேற்கோள்ச் செய்யுள்களை அடிக்கடி படித்துக் கொண்டிருக்கிறேன். படிக்கும் போதெல்லாம், விளாத்திகுளம் புஸ்தகசாலை, தெரு, வேப்பமரம், மணல்

வளம் பொருந்திய ஆறு, ஒரு கரையிலிருந்து எதிர்க்கரைக்கு பெரிய பருத்தி மாற்றுக்கட்டு ஒன்றை உருட்டிக்கொண்டே வந்த சண்டமாருதம் எல்லாம் கண்முன் வந்து நிற்கிறது. ஆகவே விளாத்திகுளத்தினிடம் எனக்கு ஒரு பிரியம் உண்டென்பது விளங்குகிறதல்லவா" என்பதுதான் டி. கே. சி யின் பழைய நினைவு. எவ்வளவு ரஸமான அனுபவம். அவருடைய 'ஹனி மூன்' தான் எவ்வளவு ரஸமாகத் தண்டியலங்காரத்துடன் நடைபெற்றிருக்கிறது! நான் விளாத்திகுளத்திலிருந்த ஒரு வருஷமும் அது தீவாந்தரமாக இருக்கவில்லை. காரணம் விளாத்திகுளம் புஸ்தகசாலையும் தண்டியலங்காரமும் அல்ல. ரஸமான அனுபவங்களை அழகாகத் தாங்கி வந்த டி. கே. சி யின் கடிதங்கள் தான் அந்தப் பாலைவனத்தையும் சோலை வனமாக்கிக் கொண்டிருந்தன.

'ஒரு மரம் தோப்பாகாது' என்பது பழமொழி. ஆதலால், டி. கே. சி யின் இன்னொரு பழைய நினைவையும் தரலாம் என எண்ணுகிறேன். சுமார் ஏழு எட்டு வருஷங்களுக்கு முன் - ஒரு ஊரில் நடந்த சைவ சபை ஆண்டு விழாவிற்கு என்னைப் பேசக் கூப்பிட்டிருந்தார்கள். (பேரைச் சொன்னாலும் ஊரைச்சொல்லக் கூடாது என்பதுதானே சம்பிரதாயம்) ஆனால் நிபந்தனை ஒன்றையும் பலமாகவே போட்டார்

கள். 'தாங்கள் கம்பனைத் தவிர, வேறு ஏதாவது பொருள் குறித்துப் பேசவேண்டும்' என்பது தான் அவர்கள் வேண்டுகோள். அந்த வேண்டு கோளுக்குள்ளேயே அடங்கிக் கிடந்தது நிபந்த னையும். 'சரி' யென்று ஏற்றுக்கொண்டேன். விழாவிற்குச் சென்றேன். 'திருநெல்வேலித் தமிழ்' என்னும் பொருள்பற்றிப் பேசினேன். காரிய தரிசியின் வேண்டுகோளையும் சபையினர்க்கு அறிவித்துவிட்டு மூச்சுக்கு முன்னூறு தடவை கம்பன் கவிகளையே 'கோட்' செய்தேன். திருநெல்வேலித் தமிழுக்குள் ஒளிந்துகொண்டு கம்பனும் சைவசபை விழாவிலே கலந்துகொண் டான். பல காலங்களில் தமிழ் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது, மடத்தார் வளர்த்த தமிழையும் பற்றிக் குறிப்பிட்டேன். பேச்சு முடிந்து வீட்டிற்கு வந்ததும் 'விறு விறு' என்று ஒரு கடிதம் எழுதினேன் டி. கே. சி க்கு, விவரங் களை யெல்லாம் விவரமாகவே தெரியப்படுத்தி. கடிதம் சென்னை சென்றது. அது டி. கே. சி யின் பழைய சிந்தனைகளைத் தூண்டியது. அந்தத் தூண்டுதலின் பலன் அவரால் அந்த நினைவு களைப் பற்றி ரஸமாக ஒரு குறிப்பு எழுதி யனுப்பமுடிந்தது.

"...............சைவ சித்தாந்த சபையில் தாங் கள் கலந்துகொண்டது ரொம்பவும் சந்தோஷ மான செய்தி. நாலைந்து வருஷங்களுக்கு முன்

தலைமை வகித்த முறையில் நானும் கலந்து கொண்டேன். அப்போது ‘நான் சைவத்துக்குப் புறம்பல்ல, கம்பராமாயணம் படித்த குற்றம் உண்டானாலும், சைவத்தைவிட்டு வேறொரு சமயத்துக்குப் போனவன் அல்ல’ என்று ரொம்பத் தடபுடலாய் விளம்பரப் படுத்திக்கொண்டேன். இந்த நையாண்டிக்கெல்லாம், அங்குள்ள சைவ நன் மக்கள் சிரித்து விடுகிறவர்களா? அல்ல. ‘சரி’ என்று ஒப்புக்கொண்டு சந்தோஷப் பட்டார்கள். யாரோ ஒருவர் இருவர் உள்ளுக் குள்ளேயே சிரித்துக் கொண்டார்கள்

“தாங்கள் இவ்வருஷம் போட்டதே ஜப்பான் வெடிகுண்டு. ரொம்ப ரொம்ப சமாஜத்தைக் குலுக்கியிருக்கும். தலைவராவது கம்ப துவேஷியாயில்லாமற்போனது கொண்டாடத்தகுந்த விஷயம். திருநெல்வேலித் தமிழ் பயப்படவேண்டிய காரியந்தான் என்று எண்ணுவதற்குத் தாங்கள் மடத்தார் வளர்த்த தமிழைக் குறிப்பிட்டதும் ஒருவகையில் பொருத்தம்தான். இருபது வருஷங்களுக்கு முன் ‘திராவிட மகாபாஷ்யம் என்று ஒரு பொக்கிஷம் திருவாவடுதுறை மடத்தார் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏண்டா? மடத்தார் இப்படி வைக்கோல்ப் படப்பு வைரவனாய் இருக்கிறார்கள், அப்படி அருமையான நூலை வெளியிட்டால் அவர்களுக்கு என்ன குறைந்துபோய்விடும்! என்றெல்லாம்

சைவ பக்தர்கள் புகார் சொல்லிக்கொண்டிருந் தார்கள். கடைசியாக வந்ததையா திராவிட மகாபாஷ்யம். சைவப்புலவர்கள் கிடைத்ததடா வேட்டை என்று அதை வாசிக்க ஆரம்பித் தார்கள். 'தமிழ் வசனத்துக்கு எடுத்துக்காட்டு,' 'உரைகல்' என்று பலவாருகவும் புகழவும் ஆரம் பித்து விட்டார்கள். அவ்வளவுதான். திருநெல் வேலித் தமிழ் எழுத்தாளர்கள் எல்லாரும் சேர்ந்து 'பேபல்' கோபுரமே கட்ட ஆரம்பித்து விட்டார்கள். ஆகையால் தாங்கள் சொன்னது உண்மையே. பூசி மெழுகுகிறதற்கும் பொய் சொல்லிக் கொண்டிருப்பதற்கும் காலாவதியாகி விட்டது. இனிமேல் வெட்டொன்று துண் டிரண்டு என்று விஷயம் விழவேணும். தாங்கள் பேசியது ரொம்பவும் சரி.

"கொஞ்சம் இந்த முறையிலே தானே கல்கி யின் கதைக்கொத்து முகவுரையில் எழுதி விட் டேன். அரும்பத அகராதிக்குள் ஊசி போய்க் குத்தத்தான் செய்யும். என்ன ஆகிறது என்று தான் பார்ப்போமே. தாங்கள் எழுதிய கடிதத்தை ரொம்பவும் அனுபவித்தேன்"

இப்படியெல்லாம் இன்னும் எத்தனை எத்தனையோ நினைவுகளை அவர் கடிதமூல மாக நண்பர்களுக்கு எழுதி வைத்திருக்கிருர். இதையெல்லாம் தொகுத்தாலே ஒரு நல்ல அழகான சுயசரிதம் ஆகிவிடும்.

# வெள்ளகால் முதலியாரும்,

## டி. கே. சி யும்

'அகலிகை வெண்பா' – வெள்ளகால் ராவ் சாஹிப் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதிய அருமையான நூல். 'ரஸபுஞ்சம்' என்று காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதய்யர் அவர்களால் பாராட்டப்பட்டது. கௌதமர் மனைவியாகிய அகலிகை, இந்திரனால் வஞ்சிக்கப்பட்டு கற்பிழந்ததும், அதுகாரணமாக அவள் கல்லாகப் போகும்படி கௌதமரால் சபிக்கப்பட்டதும், பின்னால், ராம வீரனுடைய பாத ஸ்பரிசம் பெற்று, சாபம் நீங்கப்பெற்றதும் தமிழர்கள் எல்லோருக்கும் தெரிந்த கதைதான். இந்தக் கதையைத்தான், ஒரு புதிய முறையில், நல்ல அருமையான வெண்பாக்களால், ஆக்கிக் கொடுத்திருக்கிறார் வெள்ளகால் முதலியார்.

இந்த அகலிகை வெண்பாவின் முதற் பதிப்பு வந்த உடனே டி. கே. சி வெண்பாக் களைப் படித்துப் பார்த்தார். அனுபவித்தார். அவருடைய அனுபவத்தை ஒரு வெண்பாவி லேயே வெளியிட்டார்.

*மன்னும் உள இயல்நேர் வண்சுப்பிரமணியன்*
*பன்னும் அகலிகை வெண்பாப்பொருளை —*
*[உன்னுவோர்*
*எல்லாம் அகலிகையா, இந்திரனுக் கோதமனுக்*
*கல்லாவும் ஆவார் கனிந்து.*

என்பதுதான் வெண்பா? என்ன அருமையான அனுபவம். அகலிகை வெண்பாவைப்படிப்ப வர்கள், அகலிகையாகவும், இந்திரனாகவும்,கோத மனாகவும் மாறலாம், பாத்திரங்களின் குணாதிச யங்களிலும் அவர்களுடைய உணர்ச்சிகளிலுமே ஈடுபட்டு. அதுமட்டுமல்ல அகலிகை வெண் பாவைப் படிப்பவர்கள் கல்லாகக்கூட மாறி விடுவார்கள் கனிந்து, என்று சொல்லுகிற திறம் அறிந்து அனுபவிக்கத் தக்கதே!

இவ்வளவு அருமையான நூலையும் எழுதி இன்னும் பலமுறைகளிலே தமிழன்னைக்குத் தொண்டு செய்துவரும் முதலியாரவர்களை டி. கே. சி 'தமிழுக்கு வாய்த்த அரும்புதல்வன்' என்றே பாராட்டுகிறார். அவருடைய பாராட் டும் ஒரு தனித்த முறையில்த் தானிருக்கிறது.

* "இந்த உலகில் சிலர் முஷ்டியுத்தத்துக் கென்றே பிறக்கிறார்கள். அப்படிப் பிறந்தவர் களில் ஒருவர் வெ. ப. சுப்ரமணிய முதலியார்

---

* கலைமகளில் பிரசுரிக்கப்பட்டது.

அவர்கள். முஷ்டியுத்தம் செய்ய வேண்டிய அவசியம் இரண்டு கைகளிலும் உள்ள தசை நரம்புஎலும்புகளில் அமைந்துகிடக்கிறது. உடல் உறுப்புகளில் கிடப்பது ஒரு புறம் இருக்க ரொம்ப ஆழமாயும் அசைக்க முடியாதபடியும் பதிந்து கிடப்பது உள்ளத்தில்த் தான்.

"கைக் குத்துச் சண்டைக்குப் பயின்றிருந் தால் முதலியாரவர்கள் உலகப் பிரசித்திபெற்ற வீரர்களை ஒருகை பார்த்திருப்பார்கள். எஞ்சினீர் தொழிலில் பிரவேசித்திருந்தால் குறைந்தபக்ஷம் பொதிகைமலையையாவது ஒரு குடைகுடைந்து, மலையாளத்து மலை வெள்ளத்தை குடைசல் வழியாக வடித்து தமிழ்நாட்டை வளம் படுத்த முயன்றிருப்பார்கள். அவர்கள் கைக்குமுன் பாறைகள் எல்லாம் நொறுங்கிப்போயிருக்கும்.

"எஞ்சினீர் தொழில் இல்லை என்றால் ஜாதகம் பொய்த்தா போய்விடும்? பாறைகளும் கருங்கல் லுகளும் தமிழில் இருக்கத்தானே செய்கின்றன?

"பதினாறு வயதாய் இருக்கும்போதே தமி ழில் உள்ள சிலேடை, திரிபு, யமகம் என்ற தமிழ்க் கற்பாறைகளை உடைக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த வர்க்கத்துச் சித்திரக் கவிகள் எவ்வளவு வைரம் பாய்ந்திருந்தாலும் முதலியார் அவர்கள் கைக்கு வந்தால் தாமாகப் பிதிர்ந்து போய்விடும். தமிழ்ப்பாஷை இடங்

கொடுக்கக்கூடிய சிலேடை வின்னியாசங்களை யெல்லாம் ஒருவாறு அளந்துவிட்டார்கள். அதனாலேயே 'நெல்லைச் சிலேடை வெண்பா'வை (நூறு செய்யுள்) எளிதில் செய்துவிட முடிந்தது. அது அந்தக் காலத்துப் (ஐம்பது வருஷத்துக்கு முந்தியகாலத்து) புலவர்களுக்கும் கவிராயர்களுக்கும் பெரும் வியப்பாகவே இருந்தது. சிலேடை யமகங்களிலுள்ள விசித்திரங்களை அனுபவித்துப் பழகியவர்களுக்குத்தான் நெல்லைச் சிலேடை வெண்பாவின் திறம் தெரியவரும்.

"தமிழ் நூல்களை முறையாகப் படித்து முடித்தவர்கள்கூட, காஞ்சிப் புராணமும் தணிகைப் புராணமும் 'இருப்புக்கடலை' என்று சொல்லுவார்கள். அவற்றின் பாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் அநேகமாய்ப் பலமான முடிச்சு ஒன்றோ இரண்டோ போட்டுவைத்திருக்கும். ஆனால் முதலியாரவர்கள் எப்படியாவது முடிச்சுகளை இழை இழையாக அவிழ்த்து இழைகளைக் கையில் தூக்கி உதறிக்காட்டுகிற மாதிரி, அச்செய்யுட்களிலுள்ள பொருள்களை முறைப்படுத்திக் கருத்தை விளக்கிக் காட்டுவார்கள்.

"மேலும், மில்டனுடைய 'சுவர்க்க நீக்கம்' பளுவான கருங்கற்பாறை என்று ஆங்கிலப் புலவர்கள் சொல்வார்கள். இதர பாஷைகளில் மொழிபெயர்க்க முடியாதபடி கஷ்டமாய்

அமைந்தது. அதை ஒரு ஆசிரியர் பிரஞ்சு பாஷையில் மொழிபெயர்க்க ஆரம்பித்துத் திணறிப்போய்விட்டாராம். அப்பேர்ப்பட்ட இதிகாசத்தை இவர்கள் தமிழில் மொழிபெயர்க்கத் துணிந்து, முதற்காண்டத்தை விருத்தப்பாவில் மொழி பெயர்த்து விட்டார்கள். மூலத்திலுள்ள ஒவ்வொரு விஷயமும் அதன் அடைகளுமே அப்படி அப்படியே இவர்கள் விருத்தத்தில் அமைந்துகிடக்கும். மூலத்தையும் மொழிபெயர்ப்பையும் ஒத்துப்பார்த்தால் இது பகீரதச் செயல் என்றே தோன்றும். ஜி.யு. போப் முதலான ஆசிரியர்கள் இம்மொழி பெயர்ப்பைப் பார்த்து 'இது ஒரு அசாத்தியமான வேலை' என்று அதிசயித்திருக்கிறார்கள்.

"மேலே சொன்னதெல்லாம் முஷ்டியுத்த சக்தி முதலியாரவர்களிடத்தில் அடங்கிக்கிடக்கிறது என்பதைக்காட்டுகின்றன. ஆனால் அதை வெளிப்படையாக இன்றும் அவர்களுடைய எண்பத்தெட்டாவது வயதிலும் காணலாம். ஏன் சென்ற அறுபது வருஷமாகவே முஷ்டி யுத்தம் செய்து கொண்டே வந்திருக்கிறார்கள் என்றால் கலப்பில்லாத உண்மை. சென்னை மில்லர் காலேஜில் மாணவராயிருந்தபோது ஆரம்பித்தது இன்னும் நடந்தே வருகிறது. 'இங்கிலீஷ் பாஷைதான் முக்கியமாக வேண்டியது; தமிழ் தெரியவேண்டியதெல்லாம் அலங்காரத்துக்காகத்

தான்' என்று யாராவது முதலியாரவர்கள் முன்னிலையில் சொல்லிவிட வேண்டியது; அவ்வளவு தான், வீராவேசம் அப்படியே வந்துவிடும்; பொங்கிவிடும். அடங்கிக்கிடந்த முஷ்டியுத்த வீரன் வெளிக்கிளம்பி விடுவான். பக்கத்திலே நிற்க நேர்ந்தவர்பாடு ஆபத்துத்தான்."

இப்படியெல்லாம் முதலியார் அவர்களுடைய தமிழ் ஆர்வத்தைப் பாராட்டுகிறார் டி. கே. சி.

சரி! டி. கே. சி. யைப்பற்றி முதலியார் அவர்கள் அபிப்பிராயம் என்ன? ஆம். அதையும் நாம் தெரிந்துகொள்ளத்தானே வேண்டும். தமிழுக்கும் தமிழ்க் கவிகளுக்காகவுமே வாழ்கின்ற டி. கே. சி யைப் பற்றி, தமிழ்ப்பெருங் கிழவரான வெள்ளகால் முதலியாரவர்கள் எப்படி எப்படி எல்லாம் நினைக்கிறார்கள் என்று சில வார்த்தைகளிலே சொல்லிவிடமுடியாது.

*"டி. கே. சி ஒரு ஜீனியஸ் — அதாவது அசாதாரணமான புலமையும் நுண்ணுணர்வும் பெற்றவர். அவர் ஒரு அபூர்வமான ஜீனியஸ். அதனால்த்தான் எந்தப்பாட்டை எடுத்தாலும் அதில் சாரம் இருக்கிறதா இல்லையா என்று அவருக்குத் தெரிகிறது. அந்தச் சாரத்தைத் தாம் அனுபவிப்பதோடு கூட மற்ற எல்லாரையும்

---

* குமரி மலரில் வெளியானது

அனுபவிக்கும்படியும் செய்ய அவரால் முடி கிறது.

"டி. கே. சி யினுடைய பெருமை கம்ப ராமாயணம் முதலிய இலக்கியங்களை எடுத்துச் சொல்லி நம்மை அனுபவிக்கச் செய்வது மட்டு மல்ல. கல்வியறிவு பெற்ற நாமெல்லாம் அனுப விக்கும்படி கவிதையைப் பற்றிச் சொல்வது டி. கே. சி க்குப் பெருமையில்லை. கவிதையையே அறியாதவர்கள் கூட கவிதையை அனுபவித்து உணரும்படி எடுத்துகூறும் ஆற்றல் இருப்பதே அவருக்குப் பெருமை. படித்தவர்களுக்கு நான் கூட ஒரு விஷயத்தை எடுத்துச்சொல்லி விடு வேன். இந்த சாமர்த்தியம் எனக்கு உண்டு. ஆனல் பாமர மக்களுக்குக் கவிதைச் சுவையை ஊட்ட வல்லவர் அவர் ஒருவர்தான். இந்த விஷ யத்தில் என் காலத்தில் நான் அறிந்தவர்கள் யாரும் டி. கே. சி க்கு சமீபத்தில் வரமுடியாது. ஆங்கிலத்தில் நானும் எவ்வளவோ படித்திருக் கிறேன். இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ கூட இப்படிச் சொல்லும் திறமை பெற்றவர் இல்லை என்பது நிச்சயம்" என்று தமிழன்பர் ஸ்ரீ மு. அருணசலம் அவர்களிடம் பேசியிருக் கிருர்கள்.

டி. கே. சி யைப்பற்றிக் குறைகூறுபவர்க ளைப் பற்றியும் முதலியாரவர்கள் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்காம லிருக்கவில்லை.

"டி. கே. சி யை எவ்வளவோ பேர் குறை கூறுகிருர்கள். உலகமேஅப்படித்தான். இவர்கள் ஈக்களைப்போல. அழகான பெண்ணொருத்தியிருக்கிருள். அவளுடைய அழகைப்பார்த்து கண்களால் பருகிக்கொண்டிருக்கலாம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாது. ஆனுல் ஈ என்ன செய்கிறது? அவள் சுண்டுவிரல் நுனியிலுள்ள சிறு புண்ணைத்தேடிப்போய் மொய்க்கிறது. அதைப் போலத்தான் இவர்களும். டி. கே. சி எந்தப் பாட்டை விட்டார், எந்தப்பாட்டைத் திருத்திஞர் என்று தேடுகிருர்களே யொழிய எந்தப் பாட்டுக்கு என்ன விளக்கம் கொடுத்தார், கவிச்சுவையை எங்கே கண்டார்-என்பதை இவர்கள் கவனித்ததில்லை. ஈக்களைப்பற்றி நமக்கென்ன கவலை?

"பண்டிதர்கள் என்ருல் புலமைமிக்கவர்கள் என்பது பொருள். பண்டிதர்களுக்கே வடமொழியில் 'தோஷக்ஞர்' என்ற பெயருமுண்டு; அதாவது குற்றத்தை உணர்பவர்கள் என்பது கருத்து. இது தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் பண்டிதர்களுக்கு நன்கு பொருந்தும். ஏனென்ருல் இவர்கள் ஒரு நூலிலோ, அல்லது ஒருவரிடமோ உள்ள தோஷத்தை மட்டுமே பார்க்கிருர்களேஒழியகுணத்தைப்பார்ப்பதில்லை. உண்மையில் நூலாராய்ச்சி செய்பவன், 'குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி


மிக்க கொளல்' வேண்டு மென்பதே நம் தமிழ் மரபு. மறுவோடு கூடிய சந்திரன்தான் நமக்குக் கிடைக்கிறுன். மறுவில்லாத சந்திரன் வேண்டு மென்று கேட்டால் கிடைக்கிறுனு? இதற்காக நாம் மறுவைப் பழிக்கிறேமா? அவனுடைய தண்ணிலவை அனுபவிக்கிறேம் அதுபோலவே இலக்கியத்திலும், வேறெதிலுமே, குணத்தைப் பாராட்டத் தெரியவேண்டும். குற்றத்தைப் பாராட்டலாகாது" என்பதுதான் அவர்கள் அபிப்பிராயம். இந்த நல்ல போதனையை மட்டும் தமிழ்நாட்டுப் பண்டிதர்கள், விமர்சகர்கள் எல்லாம் கைக்கொண்டால் எவ்வளவு நன்று யிருக்கும். ஏது? அவர்கள் எல்லாம் இந்த உரைகளை ஏற்றுக்கொள்ளவா செய்வார்கள்?

# கவிமணியும் — ரஸிகமணியும்

திருநெல்வேலியிலே சென்ற செப்டம்பரிலே கலை விழா ஒன்று நடந்தது. நடத்தியவர்கள் தமிழ் இசைச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஆ. சிதம்பரமும், கலைதெரி கழகக் காரியதரிசி குமாரி ராஜேஸ்வரி பாஸ்கரும். கலை விழாவை இரண்டு கூறுகப் பிரித்து கலைமகளுக்கு ஒருநாளையும் கம்பனுக்கு ஒருநாளையும் கொடுத்தார்கள். கலைமகள் தினத்தில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைக்கு தலைமை தந்தார்கள். கம்பன் தினத்தில் ரஸிகமணி டி. கே. சிக்கு தலைமை தந்தார்கள். இருவருக்கும் மிக்க மதிப்புடைய உபசாரப் பத்திரங்கள் எல்லாம் வாசித்துக் கொடுத்தார்கள். இந்த உபசாரங்களை ஏற்றுக்கொள்ளும்போது டி. கே. சி பேசிய பேச்சு நினைவு கூரத்தக்கது.

"சாதாரணமாக கல்யாணத்திற்கு மாப்பிள்ளை போகிறதென்றால் அவருடன் மாப்பிள்ளைத் தோழன் ஒருவனும் போவான். மாப்பிள்ளை 'அப்பாவி'யாயிருப்பான். ஆனல் தோழனே 'பட்டவாளி'யாயிருப்பான். இந்தத் தோழனைச் சமாளிப்பது பெண் வீட்டாருக்குக் கஷ்டந்தான். பெண் வீட்டார் செய்யும் உபசரணைகளில் எல்லாம் குற்றம் குறை கூறிக்கொண்டே யிருப்பான்.

அதனுல் பெண் வீட்டார் மாப்பிள்ளைக்கு உயர்ந்த சரிகைக்கறை பட்டு எடுத்துக்கொடுத்தால் மாப்பிள்ளைத் தோழனுக்கும் அதே விதம் உயர்ந்த சரிகைப்பட்டு எடுத்துக்கொடுப்பார்கள். மாப்பிள்ளைக்கு மோதிரம் என்ருல் தோழனுக்கும் சேர்த்துத்தான் செய்வார்கள். மாப்பிள்ளை உபசரணையைவிட தோழனுக்கு உபசரணை பலமாகவே இருக்கும். எல்லாம் கலகம் செய்துவிடக்கூடாதே என்ற பயத்தின் காரணமாகத்தான். அதுபோல் இந்தக் கலைவிழாக் கூட்டத்தார் கவிமணியை எப்படியெல்லாம் பாராட்டுகிருர்களோ அப்படியே என்னையும் பாராட்டுகிருர்கள். நான் என்ன மாப்பிள்ளைத் தோழனு? அல்லது 'பட்டவாளிப்பயலா?' கவிமணியைப் பாராட்டவேண்டுவது நியாயம். இதைவிட இன்னும் எத்தனையோ மடங்கு சிறப்பாகவே பாராட்டலாம். ஆனுல் எனக்கேன் இவ்வளவு உபசாரம். எல்லாம் அன்பு காரணமாகத்தான் நடக்கிறது'' என்று டி. கே. சி பேசினுர். உண்மை. டி. கே. சி மாப்பிள்ளைத் தோழனுமல்ல, அல்லது பட்டவாளியுமல்ல. ஆனுல் கிணற்றுக்குள் வைத்த விளக்குப்போலிருந்த கவிமணியை உலகறியச் செய்த பெருமை டி. கே. சி உடையது என்பதைத் தமிழர்கள் மறக்கமாட்டார்கள். கவிமணியுமே இதை மறக்கமுடியாது. கவிமணியைப் பற்றி ரஸிகமணி எழுதிய குறிப்பு ஒன்றைப்



டி. கே. சி. — தேவி.

பார்த்துவிட்டால் கவிமணியை டி. கே. சி எப்படி மதித்திருக்கிறார் என்பது தெரியவரும்.

"கவி என்றால் இன்னது என்று சொல்வதற்கு இலக்கணம் கிடையாது. உலகத்தில் எங்குமே கிடையாது. யாப்பியல் இந்த விஷயத்தில் என்ன உதவியும் புரிவதில்லை. வெண்பா இது, விருத்தம் இது என்று ஏதோ சொல்ல முடியலாம்; ஆனால் கவி இது என்று சொல்லவே முடியாது. ஒரு பாஷையோடும் அதிலுள்ள சிறந்த கவிகளோடும் உண்மையான ஆர்வத்தோடு படாடோபத்தை எல்லாம் தூரத்தே விட்டுவிட்டு நெடுநாள் பழகி வருவோமேயானால் அது தெரியவரலாம். அதுவும் தாய் மொழியில்த்தான் தெரியக்கூடும். இதர பாஷைகளில் தெரியமுடியாது என்று ரவீந்திரர் சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லியிருக்கிறார்.

"கவியை உணர்வதே கஷ்டம் என்றால் கவியைப் பாடுவது எவ்வளவு கஷ்ட- என்றும் சொல்லவும் வேண்டுமா? உலகத்தில் ஆயிரம் வருஷத்திற்கு ஒருதடவை கவி பிறக்கிறதுண்டு—என்று கவியின் அருமையையும் அதன் பெருமையையும் பற்றி நன்கு ஆராய்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொன்னது வெறும் வின்னியாசம் அல்ல; உண்மையைத் தெளிவுபடச் சொன்ன நேரான வார்த்தையே.

“உணர்ச்சியானது, சொல், இசை, கட்டுக்கோப்பு இவைகளோடு ஒத்த உருவத்தில் வந்துவிட்டதென்றால் அதுவே கவி. அது அற்புத சிருஷ்டிதான். இப்படி எழுந்த ஒரு கவிக்காக அந்தப் பாஷைக்குரியவர் ஒரு விழாக் கொண்டாடினால் பொருத்தமே. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் இவ்விதமான கவிகள் எத்தனையோ பாடியிருக்கிறார்கள்.

“தேசிகவிநாயகம் பிள்ளையவர்களுடைய கவிகள் எல்லாம் எளிமையிலும் எளிமையாகப் பாடப்பட்டிருக்கின்றன. அவர்கள் வசிப்பதோ தமிழ் உலகத்திலேயே தென் கோடி என்று ஓதுக்கக்கூடிய கன்யாகுமரிப்பக்கம். மனுஷரோ ரொம்பவும் சாது. ஆடம்பரம் முற்றிலும் பூஜ்யம். தலையிலே ‘தலைப்பா’வாகச் சுற்றிக்கொள்ள பட்டம் கிட்டம் உண்டா? கிடையாது!

“தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம், அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுவதுமே தமிழ் மகன் தன்னுடன் வைத்துக்கொண்டு அனுபவிக்கவேண்டிய வாடாத கற்பகப் பூச்செண்டு. வயதானவர்களைவிட இளைஞர்கள் பாக்கியசாலிகள் — அறுபது, எழுபது, எண்பது ஆண்டுகள் அவர்கள் இந்தக் கவிகளை அனுபவித்துக்கொண்டிருக்க

லாம் அல்லவா? தமிழ் உலகம் பிள்ளையவர்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டுள்ளது" என்று 'வசந்தத்தில்' எழுதியிருக்கிறார்.

ரஸிகமணியைப்பற்றி கவிமணி கூறும்குறிப்பும் அறிந்துகொள்ளவேண்டியதே. 'டி.கே. சி நம் ரஸிகரத்தினம். தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு வாழ்கின்ற ஒரு சிலருள் முன்னணியில் நிற்பவர் நம் டி. கே. சி என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்" என்று அழகாக ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன் டி. கே. சி யின் அறுபதாவது ஆண்டு நிறைவின்போது கவிமணி பாடிய பாட்டுக்களும் நினைவில் இருத்திக்கொள்ளவேண்டியவையே.

கன்னித் தமிழேபோல், கம்பன் கவியேபோல்,
மன்னும் பொதிகை மலையேபோல் - பன்னுநம்
நாடு மகிழச் சிதம்பர நாத நண்பா!
நீடு நீ வாழ்க நிலைத்து

என்னருமை நண்பா! இனிய கலைரஸிகா!
தென்னர் தமிழ்வளர்க்கும் தேசிகா! - நன்னயச்
சீலஞ் சிறந்த சிதம்பர நாத வள்ளால்
சால நீ வாழ்க தழைத்து

அன்னை தமிழ்ச்செல்விக்கு அருந்தொண்டு
செய்தின்றும்
மன்னுலகில் பல்லாண்டு வாழியவே - என் இனிய
நண்பா! சிதம்பர நாதா! நம் மாமுருகன்
கண்பார்த் தருளக் கனிந்து

என்பவைதான் வாழ்த்துப்பாக்கள். கவிமணியையும் ரஸிகமணியையும் தமிழன்பர் நன்றாய் அறிந்துகொள்ள இந்தக் குறிப்புகளும் பாக்களுமே போதும் அல்லவா!

# டி. கே. சி யின் பண்பாடு

என்ன? எல்லாம் ஒரே புகழ் மாலையாக இருக்கிறதே! டி. கே. சி யிடம் குற்றம் குறைகளே கிடையாதா? என்று சிலர் கேட்கலாம். ஆம்! குற்றம் குறைகளே இல்லாத அப்பழுக் கற்றவர்தான் அவர்.

ஆனால் சில விஷயங்களை அழுத்தமாகச் சொல்வதற்காக அவர் கையாளும் முறைதான் அவரிடம் சிலருக்குப் பகைமை ஏற்படுவதற்கு காரணமாயிருந்திருக்கிறது. 'வழக்கொழிந்த நடையில் எழுதுவதோ பேசுவதோ கூடாது' என்பதை அழுத்தமாகச் சொல்லும்போது இலக்கண பண்டிதர்களைத் தீவிரமாகவே தாக்கி விடுவார். "வார்த்தை எங்கே? வார்த்தை எங்கே? என்று ஒரேயடியாய் வார்த்தை மோகத்தில் மூழ்கிப்போனவர்கள் தமிழ்ப் பாடங்களில்-மூலத்திலும் உரையிலுமே - தங்களுக்கு முன் தெரிந்திராத வார்த்தைகளையும் முடிவுகளையும் கண்டார்களோ இல்லையோ, உடனே அந்த வழக்கொழிந்த பாஷையை மனனம் பண்ண ஆரம்பித்துவிட்டார்கள். இந்த அரும்பத அகராதிக்கோவையைக்கண்டு தமிழ்மக்கள், தமிழ்ப் பண்டிதர்கள்கூட, அடடா! என்ன பாண்டித்யம்! என்ன பாண்டித்யம்!! என்று

வாய்திறந்த வண்ணம் வியக்க ஆரம்பித்து விட்டார்கள். பிறகு 'உயர்ந்த நடை' வளர்ந் தோங்குவதற்குக் கேட்பானேன்? நச்சினார்க் கினியர், பரிமேலழகர், இறையனார் அகப் பொருள் உரையாசிரியர் எல்லாரும் பம்மிப் போனார்கள். 'நான் நேற்று இங்கு வந்தேன்' என்று எழுதுவது போய் 'நெருநற்கங்குல் ஈண்டு யான் போந்துளேன்' என்று எழுதுவது வந் தது. 'கடைக்குப்போய் வேட்டி வாங்கிவந்தேன்' என்று சொல்ல முடியாது; 'கூலம்குறுகிக் கூறை கொணர்ந்தேன்' என்றுதான் எழுதமுடியும். மரம் அல்ல மரன்தான். நான் என்பது கொச்சை, யான் என்பது அழகு வாய்ந்தது. ஆசிரியர்களும் பண்டிதர்களும் இந்தத் தாளத்தில் நடந்தார்கள் என்றால் தமிழ் மாணவர்களுடைய நடையைப் பற்றிச் சொல்லவாவேணும்?' என்றெல்லாம் ஒரு வர் பேசினால் அல்லது எழுதினால் பண்டிதர் களுக்குக் கோபம் வரத்தானே செய்யும்.

மேலும், 'பாவம் அற்ற, உருவம் சிதைந்த செய்யுள்கள், கவிதையல்ல; அவைகளை அகற்ற வேண்டும். அவைகளைக் கவிதை என்றே சொல்லக்கூடாது' என்று சொல்ல விரும்பினால் வில்லிபாரதமும், காஞ்சிப் புராணமும் இன்னும் எண்ணற்ற பழந்தமிழ் நூல்களும் அவருக்கு மணல் மூட்டைகள் தான்.

டி. கே. சி எங்கே போனாலும் கூடவே புத்தகப்பெட்டி ஒன்றும் போகும். அதில் கம்ப

ராமாயணம், திருக்குறள், திருவாசகம் எல்லாம் இருக்கும். முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், குற்றாலக் குறவஞ்சி, கலிங்கத்துப்பரணி எல்லாம் சேர்ந்து 'பைண்ட்' செய்யப்பட்ட புஸ்தகம் ஒன்றும் இருக்கும். வேறு சில புஸ்தகங்கள்-சுருங்கிய பக்கங்களுடனேயே இருக்கும். பதினோராம் திருமுறைப் புத்தகம் இருக்கும். அதைப் பிரித்தால் காரைக்காலம்மையார், சேரமான், நக்கீரர், பட்டினத்தார் ஆகியோர் பாடல்கள் மட்டும் இருக்குமேயொழிய கபிலர் அந்தாதி, பரணர் அந்தாதி, நம்பியாண்டார் நம்பி அந்தாதியெல்லாம் இருக்காது. இருநூறு பக்கமுள்ள இப்புத்தகம் ஐம்பது பக்கமாகச் சுருங்கியிருக்கும் நாலாயிரப் பிரபந்தத்திலும், முதலாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் முதலியோர் பாடல்களே அவருடைய புத்தகத்தில் இருக்கும். மற்றைய பெரும்பகுதி இருக்காது. தனிச்செய்யுட் சிந்தாமணிக்கும் இதே கதிதான். அறுநூறு பக்கம் ஐம்பது பக்கமாகக் குறுகியிருக்கும். 'ஏனையா! இப்படி மற்றப்பகுதிகளையெல்லாம் விலக்கிவிட்டு குறைந்த பகுதிகளை மட்டுமே வைத்திருக்கிறீர்கள்' என்று கேட்டால் 'அவை வேண்டாத பகுதி' என்று சட்டென்று பதில் வரும். நல்ல பாடல்களை மட்டும் படித்தால் போதாதா? மற்றவற்றைப் படிப்பானேன்? அவலைத் தின்றால் போதாதா? அதைத் தவிட்டுடன்

கலந்து ஊதிப்புடைத்துத் தின்பானேன்? என்றெல்லாம் பேசுவார். 'நெல் மூட்டை என்று நினைத்து ஒருமணல்மூட்டையைஒருவன் 10மைல் தூரம் சுமந்து பின்னுல் அது மணல் மூட்டை தான், நெல் மூட்டை யல்ல என்று தெரிந்தால் அந்த மணலை அப்படியே உதறிவிட்டுப் போவானு? அல்லது, இவ்வளவு தூரம் சுமந்து விட்டோமே இன்னும் கொஞ்ச தூரம்தானே, சுமந்து தீர்த்துவிடுவோம் என்று மேலும் சுமந்து போவானு?' என்றெல்லாம் கேள்விகள் போடுவார், கேட்பவர் சிலர் மனது புண்ணுகும்படியாக.

எல்லாவற்றையும் விட 'யூனிவர்சிடி' என்ருல் அவருக்கு அதுவேப்பங்காய்தான். 'யூனிவர்சிட்டி! யூனிவர்சிட்டி!' என்றுஅழுத்தமாக அவர்உச்சரிக்கும்போது அவருடைய ஆங்காரம் தெரியும். யூனிவர்சிடியார் கொடுக்கும் 'பி. ஏ' பட்டத்திற்கு ஒரு புதிய வியாக்கியானமே செய்வார். "Bachelor of Arts என்பது அந்தப்பட்டத்தின் பொருள். அடடா! எவ்வளவு பொருத்தமான பட்டம். Bachelorஎன்ருல் கல்யாணமாகாதவன் என்று அர்த்தம். Arts என்ருல் 'கலைகள்' என்று பொருள்.ஆகவே Bachelor of Arts என்ருல் கலைகளுடன் யாதொரு சம்பந்தமும் இல்லாதவன் என்றுதானே பொருள் இருக்கவேண்டும். அதற்கேற்பத்தானே அவர்கள் தரும் படிப்பும் இருக்க

வேண்டும்'' என்பார். "டிகிரி பெற்றதாகக் கொடுக்கும் பத்திரம் நல்ல 'பார்ச்மெண்ட்' பேப்பரில் ஏன் கொடுக்கிறார்கள், இருக்கிற அறிவையும் நன்றாய்த் துடைப்பதற்கு உதவ வேண்டாமா? அதற்காகத்தான். மேலும் இருள்மயமான கறுப்பு அங்கியை (Gown) இந்தப் பட்டதாரிகள் அணிந்துகொள்வது அவர்களுடைய மருள் கொண்ட மன நிலைக்கு ஒரு அடையாளமாகத்தான்'' என்றெல்லாம் நையாண்டி பண்ணுவார். தற்காலக் கல்வி முறையைக் கிண்டல் பண்ண ஆரம்பித்துவிட்டால் ஓயவே மாட்டார். 'வாத்தியார்களும்' பேச்சில் படாதபாடு படுவார்கள்.

'வீழ்க வீழ்க மாணவர்
மடிந்து வீழ்க மாணவர்
வாழ்க வாழ்க பல்கலைக்
கழகம் வாழ்க வாழ்கவே'

என்று அவர் பரணியே பாடி—யூனிவர்சிடியை வாழ்த்துவார்! இதையெல்லாம் கேட்டபின் யூனிவர்சிடியாரும், மற்ற உபாத்தியாயர்களும் பேராசிரியர்களும் டி. கே. சி யைப் பரம விரோதியாகவே கருத முற்பட்டு விடுகிறார்கள்.

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ விதமாக அவர் சில காரியங்களைத் தீவிரமாகவே பேச்சிலும் எழுத்திலும் தாக்கிவிடுவார். ஒரு

பாட்டிற்கு 'புரோஸ் ஆர்டர்' அல்லது 'கொண்டு கூட்டு' எழுதுகிறேன் என்று சொன்னால் அது ஒட்டகத்தை நீட்டி நெளித்துச் சாரைப்பாம் பாக்குகிற கணக்குத்தான் — என்பார் அவர். மொழிப் பற்றில்லாத தமிழ்த்துரைமார்களை யெல்லாம் போட்டு மூழ்கடிப்பதற்காகத்தானே வங்காளக் குடாக்கடல் இவ்வளவு ஆழமுடைய தாயிருக்கிறது என்று நிதானமாகப் பேசுவார்.

உண்மையாகவே அவர் இவர்களிடம் எல் லாம் குரோதம் பாராட்டுகிறாரா? என்றால் அது தான் இல்லை. அழுத்தம் திருத்தமாக கொஞ்சம் நையாண்டியுடனே சில விஷயங்களை அவர் சொல்வது காரணமாகத்தான் அவரை விரோதி யாகப் பாவிக்கிறார்கள் சிலர். ஆனால் அப்படிப் பட்ட நண்பர்களும் அவருடன் ஒன்றி உறவாடி அவருடைய உள்ளப் பண்பை மட்டும் அறிந்து கொண்டார்களே யானால் அவரிடம் விரோத பாவம் கொள்ளவே மனம் வராது. இடமும் இருக்காது.

அவருடைய பண்பாட்டைப் பற்றி ஒரு வார்த்தை.

"பண்புடைமை என்னும் பதம், தற்காலத் தில் வழக்கில் இல்லை. தமிழ் மக்களது நாகரிக வளர்ச்சியை உற்று நோக்கினால், இப்பதம் பூர் வீகத் தமிழருக்குள் சர்வ சாதாரணமாய் வழங்கி

வந்திருக்க வேண்டும் என்னும் அபிப்பிராயம் ஏற்படுகின்றது. திருவள்ளுவர் குறளில் பண்புடைமை என்றே ஒரு அத்தியாயம் இருக்கிறது. மேல்நாட்டுச் சிறந்த பாஷைகளான லத்தீன், ஆங்கிலம், பிரஞ்சு, ஜர்மன் முதலிய பாஷைகளில் பண்புடைமை என்னும் சொல்லைக்குறிக்கும் பதம் ஒன்றுமில்லை. லத்தின் பாஷையில் வழங்கும் Bona indoles, ஆங்கிலத்தில் வழங்கும் Courtesy, பிரஞ்சு மொழியின் Courtoise, ஜெர்மன் பாஷையின் Boni moves என்ற பதங்களெல்லாம் பண்புடைமையின் தன்மையை விளக்கக்கூடியவை அல்ல. தமிழறிஞரான டாக்டர் G. U. போப்பையரவர்கள் இப்பண்புடைமையை ஆங்கிலத்தில் விளக்குகின்ற முறை கவனிக்கத்தக்கது. 'பண்புடைமை is the crown of perfection, a mingling of unaffected kindness with consummate tact. It is from பண் harmony, and harmonises all things, while it is the result of a happy and harmonious combination of good qualities' என்று பண்புடைமை என்னும் பதத்திற்கு விரிவுரை இயற்ற முடிகின்றதே தவிர பண்புடைமைக்கு நேரான பொருள் உடைய ஒரு வார்த்தையை ஆங்கிலத்தில் சொல்ல அவரால் இயலவில்லை. ஆகையால் பண்புடைமை என்னும் பதம் தமிழ் மொழிக்குள் சிறப்பாய் அமைந்திருத்தல் போல பண்புடைமை என்னும் குணமும் தமிழ

ருக்கே சிறப்பாயிருந்த குணமாகும் என்பது பெறப்படுகின்றது.” என்று ஸ்ரீ ராவ்சாகிப் A. C. பால் நாடார் எழுதுகிறார்.

பண்புடைமை தமிழருக்கே சிறப்பாய் அமைந்த குணம். தமிழருக்காகவே வாழ்ந்து வருகின்ற டி. கே. சி இப்பண்புடைமை நிரம்ப வாய்ந்தவர்.

*அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல்*
*இவ் விரண்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு*

டி. கே. சி யின் அன்புடைமையும் ஆன்ற குடிப்பிறப்பும் எல்லோரும் அறிந்தது. அவரது பண்புடைமையை நன்றாக அனுபவித்தவர்களுள் நான் ஒருவன். என்னுடன் போட்டி போட்டு அனுபவித்தவர்களும் பலருண்டு. பலருடைய அனுபவமும் என்னுடைய அனுபவமும் ஒன்றாகவே இருக்கிறது என்பதில்தான் எனக்குத் திருப்தி.

# தமிழ் நாட்டின் டாகூர்

குற்றாலத்தில் டி.கே.சியின் ஜாகையில் முன் கூடத்தில் அவருடைய படம் ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது. ஒருநாள் டி.கே.சி. வெளியே போயிருந்தபோது அவருடைய காரியதரிசி ஸ்ரீ வேங்கடசுப்ரமணியன், வீட்டின் உள்கட்டிலே கிடந்த வீணை தனம்மாளின் படத்தையும் கவிஞர் ரவீந்திர நாத் டாகூர் படத்தையும் எடுத்துவந்து டி. கே. சி படத்தின் இருபக்கத்திலும் மாட்டி விட்டார். இப்படிப் படங்கள் தொங்கவிடப் பட்டிருந்ததை அன்றிரவுதான் அவர் பார்த்தார். 'என்ன இது! என் படமா இவ்விரண்டுபேர் படங்களுக்கும் மத்தியில் இருப்பது; சங்கீத உலகில் அழியாப்புகழ் படைத்த தனம் எங்கே? கவிஞர் திலகமாகிய டாகூர் எங்கே? நான் எங்கே? உடனே எடுத்து விடுமையா, என் படத்தை, அந்த இடத்தைவிட்டு' என்று காரியதரிசிக்குக் கட்டளை இட்டார். அக்கட்டளையை நிறைவேற்ற காரியதரிசி முனைவதற்கு முன்னே, பக்கத்திலிருந்த ஸ்ரீமதி பாக்கியலக்ஷிமியம்மாள் (லாகூரிலிருந்து குற்றாலம் சீசனுக்கு வந்திருந்தவர்) 'அதெல்லாம் அப்படிச்சொல்லி விடாதீர்கள், அவ்வளவு லேசாக. தாங்கள்தானே எங்கள் டாகூர்; தமிழ் நாட்டின் டாகூர். சும்மா படம் அங்

கேயே கிடக்கட்டும்' என்று தடையுத்தரவு போட்டுவிட்டார். டி. கே. சி யின் உத்திரவுநிறை வேற்றப்படவில்லை. ஆம் 'சக்தி' அம்சமான பெண்ணின் உத்திரவை மீற யாராலாவது முடியுமா? என்ன?

டி. கே. சியைத் தமிழ்நாட்டின் டாகூர் என்று சொல்வது சரிதானு? அல்லது அது வெறும் உபசார வார்த்தையா? இந்திய நாட்டின் புகழை இந்தியாவில் மட்டுமல்ல, உலக முழுவதி லுமே பரப்பிய பெருமை ரவீந்திரநாத் டாகூரை யும் அவருடைய கவிதைகளையுமே சாரும். அவருடைய 'கீதாஞ்சலி' உலகம் போற்றும் ஒப்பற்ற அரிய கவிதைக்களஞ்சியம். 'நோபல்' பரிசு பெற்ருர் கவிஞர். அதனுல் இப்படியெல் லாம் கவிதையால் புகழ் பெற்ற கவிஞர் பெருமா ஞேடு, கவிகளையே எழுதியறியாத டி. கே. சியை ஒப்பிடுவது சரியா? என்று கேள்வி எழுவது இயற்கை. இதற்கு நான் பதில் சொல்லவேண்டிய தில்லை. "கவிதை என்ருல் என்ன? உண்மையான உணர்ச்சி, சுயநலம் பாராட்டாத, பயத்தில் ஈடு படாத, சத்தியத்தில் ஆழ்ந்து நிற்கும் மனே நிலை- இந்த அவசரத்தில்தான் கவியும் ரசிகனும் பிறக் கிருர்கள். ஒருவருக்கு உயிர் மற்றவர். உரையாணி இல்லாமல் மாற்று இல்லை. கெஜக்கோல் இல்லா மல் அளவு இல்லை. ரஸிகன் இல்லாமல் கவியில்லை. சிருஷ்டியில் ஆண்பெண்போல் கலைகளின் வளர்ச்

சிக்குக் கவியும் ரஸிகனும். இவர்கள் பிரிந்து நிற்கும் காலத்தில் அழிவும் பிரளயமும்; இவர்கள் சேர்ந்து சுகிக்கும் காலத்தில் வெற்றியும் புத்துயிர்ப் பிறப்பும்" என்று ஸ்ரீ கா.சி. வெங்கட ரமணி எழுதுவதுபோதுமல்லவா? ஆம் கவிஞன் இல்லாமல் ரஸிகன் இல்லை. அதுபோலவே ரஸிகன் இல்லாமல் கவிஞனும் இல்லைதானே.

நமது ரஸிகமணியான டி. கே. சி. கவி டாகூரைப் பற்றி எப்போதும் பெருமையாகவே பேசுவார். அவருடைய கவிகளை நன்ருய் அனுபவிப்பார், மற்றவர்களையும் அனுபவிக்கும்படி செய்வார். 'அவருடைய ஆங்கில மொழி பெயர்ப்பே இப்படி எல்லாம் இருந்தால், அவருடைய தாய்மொழியாகிய வங்காளியில் எப்படி எல்லாம் இருக்குமோ? மொழிக்கு மொழி தித்திக்காதா? என்றெல்லாம் பாராட்டுவார். 'டாகூர் தான் சில உண்மைகளை எவ்வளவு அழகாக அழுத்தமாகச் சொல்லி விடுகிருர். இதையெல்லாம் நம்மவர் உணர்கிருர்கள் இல்லையே' என்று ஏங்குவார் ஒருதடவை. 'சரி நம்மிடையேயும் கவிஞர் இல்லாமல் போய்விடவில்லை. நம்முடைய தலைமுறையிலே பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை என்ற இரண்டு கவிகளைப் பெற்று விட்டோமே, நாமும் பாக்யசாலிகள்தாம்' என்று தன்னைத் தானே தேற்றிக்கொள்வார் மறுதடவை.

சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் டாகூர் சொன்ன, "கவியை அனுபவித்து விடுவதற்காக எத்தனையோ பாஷைகளைக் கற்றேன், ஆங்கிலம் மாத்திரம் அல்ல, பிரஞ்சு, ஜெர்மன், லத்தீன் கிரீக் முதலிய எல்லா பாஷைகளையும் கஷ்டப்பட்டுக் கற்றேன். என்ன பலன்? கவியின் இதயம் தெரிந்ததா? இல்லவே இல்லை. என் தாய் மொழி ஒன்றின் மூலமாகத்தான் எனக்கு அது தெரிய வந்தது. பிறபாஷைகளின் மூலம் கவியின் உயிர் நிலையை அறியப்புகுவது காதலியின் அருள் முறுவலைப் பெறுவதற்காக வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுக்கிற அழகுதான்" என்பதை இது வரை எத்தனையோமுறை டி. கே. சி மேடைப் பிரசங்கங்களில் சொல்லியிருக்கிறார். 'இதை நமது பண்டிதர்கள், ஸ்காலர்கள் எல்லாம் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறார்களே, மில்டனையும் ஷெல்லியையும் படித்துவிட்டு அவர்களைப்பற்றியும் அவர்களுடைய கவிதைகளைப் பற்றியும் திட்டவட்டமாகப் பேசுபவர்கள், அடடா! எவ்வளவு மோசமாகத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள்' என்றெல்லாம் சொல்லுவார் டி. கே. சி. இதுபோலவே டாகூருடன் சேர்ந்து 'நம் நாட்டுச் சங்கீதத்தைத் தான் நாம் அனுபவிக்க முடியும், பிறநாட்டுச் சங்கீதத்தை நாம் அனுபவிக்கிறோம் என்று சொல்வதெல்லாம் சும்மா, ஏமாற்றுக் கச்சவடம்தான்' என்று தீர்மானமாகவே சொல்லுவார் அவர்.

இன்னும் எப்படி எப்படி எல்லாமோ டாகூரைப் பாராட்டுவார் அவர். டி. கே. சி க்கும் டாகூருக்கும் எத்தனையோ விதத்தில் ஒப்புமை உண்டு. ஏன்? இருவருடைய முக ஜாடையைப் பார்த்தாலே இது தெரியுமே! ஒருவருக்கு நீண்ட தாடி உண்டு; ஒருவருக்கு தாடியில்லை. அவ்வளவு தான். அதனுலேதான் டி. கே. சி படத்தைப் பார்த்த நண்பர் ஒருவர் சொன்னார், 'இவர் என்ன தாடியில்லாத டாகூரா? என்று. ஏது? ஸ்ரீமதி பாக்யலக்ஷ்மியம்மாள் சொன்னதும் கொஞ்சமும் பழுதில்லை போலிருக்கிறதே. 'நம்மிடையே பாரதி உண்டு, தேசிகவிநாயகம் பிள்ளை உண்டு, ஒரு டாகூரும் உண்டு' என்று தமிழன் நினைத்து மகிழ்ந்தால் அது தவறில்லைதானே.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
EGMORE, MADRAS-600 008
101959
O-,63MTKC W
N45



44029

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 4 | 2 | தொடுத்தோம் | தொகுத்தோம் |
| ,, | 3 | தொடுக்கும்போது | தொகுக்கும்போது |
| ,, | 26 | பாடிப்பார்தார் | பாடிப்பார்த்தார் |
| 10 | 22 | 'குறள்' | 'கிறள்' |
| 13 | 23 | 1938 | 1933 |
| ,, | 23-24 | டிகேசி சென்றதின் | டிகேசி சென்னை சென்றதின் |
| 23 | 14 | 1340 | 1840 |
| 26 | 24 | துடி-துடியாக | துடியாக |
| 31 | 10 | நியாயமா | நியாயமா" |
| 38 | 11 | இன்னிபுல் | இன்னிழல் |
| 42 | 2 | பாடினர் | பாராட்டினர் |
| 46 | 4 | பொலன்கழற்கவிதை | பொலன்கழற்கால் |

எத்துணை, அத்துணை, இத்துணை-என்று வரும் இடங்களில் எல்லாம் எத்தனை, அத்தனை, இத்தனை -என்று திருத்திக் கொள்ளவும்.

"கட்டுரைக் கரும்பு"

விலை ரூ. 2/-

வி. ஆர். எம். செட்டியார்

## விரைவில் வெளிவரும்:

1. " அன்னை — ருஷியநாவல் — மாக்ஸிம் கார்க்கி எழுதியது — தமிழாக்கம் : ப. ரா. ரூ. 6/-

2. " அருணோதயம் "— ஒன்பது இசை நாடகங்கள் — " கிட்டு " எழுதியது.

3. " காமினி "—சிறந்த காவிய நாடகம் : ஸ்ரீ யோகியார்

4. " உலக அரங்கு " — உலக நாடகக் கதைகள் : 'புதுமைப்பித்தன்' எழுதியது.

5. " நியாயமா ? " — சிறந்த இலட்சியக் கதை —கால்ஸ்வொர்த்தி

6. " முல்லைக்கொடியாள் "—கதைகள் 'விந்தன்' எழுதியது

STAR PUBLICATIONS

PALAKARAI, TRICHINOPOLY